
www.padippakam.com




படிப்பகம்

www.padippakam.com

# பெண்

சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தின் சஞ்சிகை
இல. 20, டயஸ் வீதி,
மட்டக்களப்பு.
தொலைபேசி இல. 065 – 23297
Fax No. 065 - 24657
E - mail : suriyaw@slt.lk

**THE WOMAN - A Journal Published By**
**Suriya Women's Development Centre,**
**No. 20, Dias Lane,**
**Batticaloa.**

ஆசிரியர்கள் - விஜயலட்சுமி சேகர்
ஜெயந்தி தளையசிங்கம்

முன் அட்டை - சூரியா கலாசாரக்குழு

கணனி வடிவமைப்பு - கி. சர்மிளா.

அச்சகம் - சென் . ஜோசப் கத்தோலிக்க அச்சகம், மட்டக்களப்பு.

விலை - 30/=

படிப்பகம்

www.padippakam.com

## வாசகர்களுடன் . . .

பெண் சஞ்சிகையின் மற்றுமொரு அடியெடுப்புடன் உங்களைச் சந்திக்க வருகிறோம். எனினும் நாம் கூறும் கருத்துக்கள் உறுதியாய் இருக்க வேண்டும் என்ற எமது ஏற்பாட்டு நடவடிக்கைகள் சற்று கால தாமதத்தை ஏற்படுத்தி விட்டது.

பெண்கள் கதைப்பார்கள், கதைப்பார்கள் கதைத்துக் கொண்டே இருப்பார்கள். கதைத்தலுடனேயே வாழ்க்கை முடிந்து விடுகிறது. அவர்களைப் பற்றிய உலகத்தின் பார்வை இவ்வாறாகத்தான் இருக்கும். பெண்கள் என்ன கதைக்கிறார்கள்? அதில் என்ன கருத்துக்கள் உள்ளன? அவர்கள் கதைகளும் அவர்கள் வாழ்க்கையின் முடிவில் அவர்களுடன் முடிந்து விடுவது ஏன்?

வாழ்வின் அத்தனை பக்கங்களையும் சந்திப்பவர்கள் பெண்கள். இன்பம், துன்பம், சுமைகள், கடமைகள், பொறுப்புக்கள், வெறுப்புக்கள் எல்லாவற்றிற்கும் முகம் கொடுத்து முகம் சுழித்து தத்தம் எல்லைகளை இவர்கள் கடக்க வேண்டி உள்ளது.

கடலில் முக்குளிப்பவனிடம் உள்ள முத்துக்கள் போல் இவர்கள் உள்ளத்தில் அரிய பல கருத்துக்கள் உதிக்கும். அவற்றை தமக்குத் தெரிந்த பாடல், ஆடல், கூத்து, விடுகதை போன்ற விடையங்கள் மூலம் தம் எண்ணங்களைக் காற்றில் பரப்பி விட்டு அப்படியே மறைந்து விடுவார்கள். இவை காது வெளியாகப் பேணப்பட்டு திரிவுபட்டு, தொலைபட்டு கிராமக்கலைகளின் ஊடாக தலைமுறை தலை முறை யாக காவப்படும். இவ்வாறான கலைகளும், கலாசாரங்களும் மக்களின் வாழ்க்கையுடன் பின்னிப் பிணைந்து ஒன்றாகி விடுகின்றது. இன்று கலாசாரங்களே பெண்களின் வாழ்க்கை என்றாகி விட்டது. ஆகவே இன்று பெண்கள் எதிர்கொள்ளும் வன்முறைகளுக்கும், வன்முறை களை எதிர்த்துப் போராட முடியாதவர்களாக இருப்பதற்கும் இக்கலாசார அமைப்பும் அதனுடன் தொடர்புபட்ட பழமொழிகளும், ஐதீகக் கதைகளும் அதனால் ஏற்பட்ட மனப்பாங்குகளும் விழுமியங்களும் காரணமாகின்றது.

படிப்பகம்

www.padippakam.com

இன்று பல பெண்களை தேயவைத்து, மௌனியாக்கி உணர் வற்ற ஜடங்களாய், சோக மூட்டைகளை சுமக்கும் கழுதைகளாய் வாழும் நிலைக்கு உருவாக்கி விட்ட நம் கலாசாரப் பாதைகளை சற்று திரும்பிப் பார்க்க வேண்டும். எம் கலாசாரப் பாதைகளின் திருத்தங்கள் பற்றி சிந்திக்க வேண்டும். காலம் காலமாக கட்டமைக் கப்பட்ட இக்கலாசாரங்களை செப்பனிட வேண்டும். இவ்வாறு கலாசார சிந்தனை மாற்றத்தை ஏற்படுத்துவதன் மூலம் கலாசார வன்முறைக ளைக் குறைகக்கூடிய ஓர் பாரிய வழியை நாம் காணலாம்.

இன்று நாம் இக் கலைகளினூடாகவே மக்களிடையே சிந்தனை மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்றோம். இவ் இதழ் மூலம் அதனை எழுத்து வடிவில் பரப்ப முனைகின்றோம். எமது வழித்தேடலில் பலப்பல எதிர்ப்புக்கள் வந்தாலும் அவற்றை நாம் ஒவ்வொரு மைல் கல்லாகவே எண்ணுகின்றோம், தாண்டுகின்றோம். ஒரு போதும் நாம் இடறுவதில்லை. எமது விடுதலை எவரையும் நோகடிக்கவோ, சுதந்தி ரங்களை பறிக்கவோ முனைந்ததில்லை. சுதந்திரமான, சமத்துவ மான, சந்தோச உலகில் அனைவரும் ஒன்றாய் இணைந்தே நம் பாதங்களை உறுதியாய் பதிக்க விரும்புகிறோம்.

ஆசிரியர்கள்

படிப்பகம்

www.padippakam.com

# மாற்றுக்கலாசாரமும் பெண்நிலை அரங்கும்

சித்ரா

மாற்றுக் கருத்துநிலையின் ஒரு பகுதியாகவே பெண்நிலை வாதத்தையும் மாற்றுக் கலாசார நடவடிக்கைகளின் அம்சமாகப் பெண்நிலை அரங்கையும் இன்று அடையாளம் காண்கிறோம்.

மாற்றுக் கருத்துநிலை, கலாசாரம் ஆகிய தொடர்களால் கருதப்படுவது என்ன என்ற விளக்கம் இவ்விடயங்கள் குறித்துத் தொடர்ந்து சிந்திப்பதற்கு உதவும்.

'மாற்று' என்பது மாறானது என்ற அர்த்தத்தில் பயன்படுகின்ற சொல்லாகும். அதாவது ஒரு காலத்தில் இருப்பதற்கு மாறானது. எக்காலத்தில் இந்த 'மாற்று' அல்லது 'மாறனது' பற்றிப் பேசுகின்றோமோ அக்காலத்தில் பிரபலமானதாகவும் ஆதிக்கம் பெற்றதாகவும், அதிகார பூர்வமானதாகவும் விளங்கும் கருத்துநிலை, கலாசாரம் ஆகியவற்றிலிருந்து அது மாறுபடும். அத்துடன் அது அத்தகைய அதிகார பூர்வமான அல்லது அதிகாரத்திலுள்ள கருத்து நிலை, கலாசாரம் ஆகியவற்றில் காணப்படும் அதிகார மையப்போக்கையும் ஒடுக்குமுறை அம்சங்களையும் விமர்சித்து அவற்றில் இருந்து விலகியதும் அவற்றிற்கு மாற்றானதுமான கருத்துக்களை முன் வைப்பதுமாகும். உதாரணமாக இன்று இலங்கையில் அரசு போன்ற அதிகாரமையங்களால் ஊக்குவிக்கப்படுகின்ற அல்லது சரியானது எனக் கூறப்பட்டு மக்களிடையே பரப்பப்படும் கருத்துநிலை, கலாசாரம் போன்றவற்றை எடுத்துக் கொள்ளலாம். இவற்றை நாம் கூர்மையாக அவதானிக்கும் போது இவற்றில் பல ஒடுக்கு முறை அம்சங்களையும் இனம், பால், வர்க்கம், சாதி ஆகியவற்றின் அடிப்படையில் ஏற்றத்தாழ்வு கற்பிக்கப்படுதலையும் காணலாம். இத்தகைய ஒடுக்குமுறை கருத்து நிலையை விமர்சித்து இவற்றுக்கு மாற்றாக இனம், பால், வர்க்கம் ஆகியவற்றுக்கிடையே சமத்துவத்தை வற்புறுத்துவதும் அதிகாரமையங்களைப் பேணுவதற்கு பதிலாக அவற்றின் மேலாட்சியை விமர்சிப்பதுமான கருத்து நிலை, அதன் அடிப்படையிலான கலாசாரமுறைமைகள் ஆகியவற்றையே. மாற்றுக் கருத்துநிலை, மாற்றுக் கலாசாரம் எனச் சுருக்கமாக கூறலாம்.

படிப்பகம்

www.padippakam.com

இலங்கையில் தமிழரிடையே பெண்நிலை அரங்கின் வரலாற்றை தற்போது எமக்குக் கிடைக்கின்ற தகவல்கள் அடிப்படையில் நோக்கு கின்ற போது முதலாவது பெண்நிலை நாடக நெறியாளராக நிர்மலா நித்தியானந்தனைக் குறிப்பிடலாம். எண்பதுகளின் முற்பகுதியில் அவர் ஒரு பாலைவீடு என்னும் நாடகத்தைத் தயாரித்தார். ஸ்பானிய நாடக ஆசிரியரான கார்சியா லோகாவில் எழுதப்பட்ட House of Bernada Alba என்ற இந்நாடகத்தை நிர்மலாவே தேர்ந்தெடுத்து மொழி பெயர்த்தார். நிலப்பிரபுத்துவ பழமை பேணுகின்ற குடும்பப் பின்னணியில் அமைந்த இந்த நாடகத்தில் முழுவதுமே பெண் பாத்திரங்கள். ஒடுக்கப்படும் பெண்களது மன உணர்வுகள் பற்றி இந்நாடகம் கூறிய செய்திகள், எண்பதுகளின் ஆரம்பத்தில் யாழ்ப் பாணத்து உயர் குழாத்தினரின் பெண்கள் பாடசாலை ஒன்றில் தயாரிக்கப்பட்டமையே ஒரு புரட்சிகரமான முயற்சிதான். சுண்டிக்குழி பெண்கள் கல்லூரியின் பழைய மாணவிகளைக் கொண்டு தயார்க் கப்பட்ட இந்நாடகத்தில் பேசப்பட்ட செய்திகள் பார்வையாளர்களிடையே பெரும் அதிர் வலைகளை ஏற்படுத்தியது.

ஆண் நாடகாசிரியரால் எழுதப்பட்டதே இந்நாடகத்தின மூலப்பிரதி. இதனை எவ்வாறு பெண்நிலை அரங்க வரலாற்றின் ஆரம்பமாகக் கருதமுடியும் எனச் சிலர் கேட்கக் கூடும். ஆனால் இதில் முக்கியமானது என்னவெனில் நிர்மலாவின் நாடகத்தேர்வும் அந்நாடகத்தை அவர் தமிழாக்கியமையும் ஆகும். நாடகத்தேர்வில் அவரது கருத்து நிலையும் சித்தமும் செயற்பட்டுள்ளன. இவ்வகை யில் மொழி பெயர்ப்பாளி, நெறியாளி, நடிகைகள் என்ற வகையில் பெண்களது முழுமையான பங்கு பற்றல் இந்நாடகத்தில் உள்ளது. இதனாலேயே இதனை ஒரு ஆரம்பப் புள்ளியாகக் கருதுகிறேன்.

1989ம் ஆண்டு சுமதிசிவமோகன் "அடுப்படி அரட்டை" என்ற நாடகத்தை எழுதி நெறியாள்கை செய்தார். யாழ் பல்கலைக் கழக மனித உரிமைகளுக்கான ஆசிரியர் சங்கத்தின் ஆதரவில் நடை பெற்ற இந்த நாடகத்தில் ராஜினி திராணகம உட்பட பல்கலைக்கழக ஆசிரியைகள் சிலரும் மாணவிகளும் பங்கேற்றிருந்தனர். இந்திய அமைதிப்படைக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையே 1990 ஒக்டோபரில் நடைபெற்ற யுத்தத்தின் போது பெண்கள் எதிர் கொண்ட பாலியல் வன்முறைகளை மையப்படுத்தியதாக இந்நாடகம் அமைந்திருந்தது. பெண்கள் எதிர்கொள்ளும் சமூக ஒடுக்கு முறைகள் அரசியல் நெருக்கடிகளின் போது மேலும் தீவிர மடைவது பற்றிய

படிப்பகம்

www.padippakam.com

சிந்தனைகளை இந்நாடகம் தூண்டியது மாத்திரமன்றி பாலியல் வல்லுறவு பற்றிய பெண் அனுபவத்தையும் யுத்த நிலைமையிலன்றி 'சாதாரண' நிலமைகளில் கூடப் பெண்களில் மேற்கொள்ளப்படும் பாலியல் ரீதியாக ஒடுக்கு முறைகள், துன்புறுத்தல்கள் பற்றியும் நாடகம் பேசியது.

1980களிலும் 90களிலும் கோகிலா மகேந்திரன், குறமகள், செல்வி போன்றோர் பெண்கள் எதிர்நோக்கும் சமூகப்பிரச்சனைகளை உள்ளடக்கமாகக் கொண்ட நாடகத்தயாரிப்புகளில் ஈடுபட்டனர். பெரும்பாலும் பாடசாலைகளில் இம்முயற்சிகள் நடைபெற்றன.

இவர்களை அடுத்து ஜெயரஞசனி, மனோகரி போன்றோ ருடைய அரங்குகளைக் குறிப்பிடலாம். ஜெயரஞசனியின் மூளாத்தீ, சிலந்திகள், கூர் போன்ற நாடகங்களுக்கான பிரதிகள் நாடகப் பயிற்சிப் பட்டறைகள் கலந்துரையாடல்கள் ஆகியவற்றின்பயனாக உருவாகியவை எனத் தெரிகிறது. இவ்வகையில் பெண்களின் அனுபவங்களும் கதைகளும் இந்நாடகங்களுள் உட்பொதிந்துள்ளன. இதனால் பெண்நிலை அரங்க வளர்ச்சியில் முக்கியமானவையாக அமைகின்றன.

1992ஆம் ஆண்டு கொழும்பில் ஔவை உருவாக்கி இயக்கிய 'கொலை' என்கிற சிறிய நாடகம் இடம்பெற்றது. பார்வை யாளர்கள் சூழ்ந்திருக்க ஒரு சிறிய மண்டபத்துள் பாரம்பரிய மேடை சம்பிரதாயங்கள் எதுவுமின்றி இந்நாடகம் நிகழ்ந்தது. பெண் நிலை அரங்க எழுத்தாளிகள் நெறியாளிகள் ஆகியோர் வரிசையில் ஜெ.வாசுகி, த.ஜெயந்தி, சே.விஜயலட்சுமி ஆகியோர் சமீப காலமாக இடம் பெறுகின்றனர். இவர்களது பங்களிப்பால் சில அளிக்கைகள் உருவாகின.

பெண்நிலை அரங்கில் நாடகம் ஒன்று தனி ஒருவராலோ அல்லது குழு நிலையிலோ உருவாக்கப்படலாம். இவற்றில் குழு நிலையில் பல பெண்களுடைய அனுபவங்களையும் கருத்துக்களையும் கோர்த்து கலந்துரையாடல்களின் முடிவில் உருவாகின்ற நெகிழ்ச்சித் தன்மை யுடைய அரங்க அளிக்கை இன்றைய எமது சூழலில் பெண்நிலை அரங்கு என்று சொல்லக்கூடியதாக அமையும். நாடகநெறியாளர் எனத்தனி ஒருவரின் அரங்க உருவாக்கத்தை விட கூட்டுச்செயற்பாட்டால் உருவாகும் இத்தகைய அரங்குகள் மாற்றுக்கலாசாரத்தன்மை கொண்ட தாகவும் இருக்கும்.

படிப்பகம்

www.padippakam.com

கலந்துரையாடல்கள், பயற்சிக்களங்கள் ஆகியவற்றினூடு நாடகத்தை உருவாக்கும் போக்கு தற்போது சில பெண்கள் குழுக்க ளிடையே வளர்ந்து வருகிறது. பெண்கள் தமது பிரச்சினைகளைப் பற்றி கலந்துரையாடும் போது அவற்றில் கூறப்படும் கருத்துக்களும் எடுத்துரைக்கப்படும் சம்பவங்களும் கதைகளும் வெவ்வேறு நாடக மாக வடிவம் பெறுவதை பெண்களது நாடகப்பயிற்சிக் களங்களில் நான் அவதானித்துள்ளேன்.

இவ்வகையிலேயே ஆண் பெண்ணுக்கிடையேயான வேலைப் பகிர்வு பற்றிய கருத்தைக் கையாளும் 'பாரமுறி', பாலியல் வன்முறை பற்றி வினா எழுப்பும் 'நிசப் த இரைச்சல்', வாழ்வின் மீதான நம்பிக்கை பற்றிப்பேசும் 'மட்டுநகர் கண்ணகைகள்', 'கனகம்மாவின் கதை' போன்ற நாடகங்கள் உருவாகின. சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தின் பயிற்சிக்களத்தில் பங்கு பற்றியவர்களே இந்நாடகங்களின் பிரதிகளை உருவாக்கியவர்கள். இந்த நாடகங்கள் படச்சட்ட மேடை வரம்புக்குள் கட்டுப்படாதவை. எத்தகைய இடத்திலும் நடத்தக் கூடியவை. இவ்வகையில் பார்வை யாளரின் பங்கு பற்றலையும் கருத்துக்களையும் தூண்டுபவை.

இன்று எம்மத்தியில் பெண்ணிய அரங்கைப் பெரும் சவால்கள் எதிர்நோக்கியுள்ளன. இந்தச் சவால்களில் பெரும்பாலா னவை பெண் பற்றிய பாரம்பரியமான சமூகப்பார்வையின் அடிப்படை யிலேயே உருவாகின்றன.

தமிழ்ச்சமூகத்தில் கலைத்துறையில் பெண்கள் ஈடுபடுவதற்கு அங்கீகாரம் கிடைப்பதில்லை. சமூகத்தில் காணப்படும் பண்பாட்டு வறுமை இதற்குக் காரணமாகும். பெண்ணைக் குலமகள் எனவும் விலைமகள் எனவும் இரட்டைப் புனைவுகளுக்கு உட்படுத்தி வந்தி ருக்கும் மேலாதிக்கக் கருத்துநிலையானது பெண்கலைஞர்களின் வளர்ச்சிக்குத் தடையாக அமைகிறது. பெண்ணுடைய தளத்தை வீடு, குடும்பம் என்ற தனிப்பட்ட தளமாகவே சமூகம் நோக்குகிறது.

அரங்கு என்பது பொதுத்தளம். இப்பொதுத்தளத்தில் தமது இருப்பை வலியுறுத்தல் என்பது பெண்களுக்கு ஒரு போராட்டமே. அதற்கும் மேலால் இப்பொதுத்தளத்தில் பெண்நிலைக்கருத்துக்களை தமது குரலாலும் உடலாலும் பேசுதல் மேலும் பெரியதோர் போராட் டமே ஆகும். மூடிய மண்டபத்துள், மேடையில், நாடகத்தில் பெண்கள் பங்கு பெறுவது என்பதை விடவும் கடினமானது திறந்த வெளிகளிலும்

www.padippakam.com

தெருவோரத்திலும் அரங்குகளை நிகழ்த்துவது. காலங்காலமாக கற்பிக்கப்பட்டு வந்த பெண் உடல் பற்றிய கற்பிதங் கள், கூச்சங்கள் யாவற்றையும் வென்று மேலெழவேண்டிய நிலை பெண் அரங்காளி களுக்கு ஏற்படுகிறது.

சமீபத்தில் சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தின் கலாசாரக் குழுவினால் நிகழ்த்தப்பட்ட 'இது எமது படைப்பு'என்ற வீதிநாடகத்தின் பங்காளர்கள் எதிர்கொண்ட மனநிலைகளும் பிரச்சி னைகளும் இதற்கு உதாரணமாகும். மட்டுநகரின் பொது மைதான மொன்றில் நாடகத்தை நிகழ்த்துவது என்று தீர்மானித்ததே பங்காளி களுக்கு ஒரு இரட்டை மனோநிலையை ஏற்படுத்தியது. பொது மைதானம் என்ற வெளியே அச்சத்தை ஏற்படுத்துவதாயிருந்தது. அரங்க நிகழ்வு அன்று, அதில் பங்கு பெறாமலிருப்பதற்கான காரணிகள் ஏதும் உருவாகக்கூடாதா என்று தான் நினைத்ததாக அரங்கப் பங்காளி ஒருவர் கூறினார்.

இந்த இடத்திலேயே சமூகத்திலிருந்து வரும் அங்கீகார மின்மை, கேலி, அச்சுறுத்தல் ஆகியவற்றையும் தமக்குள்ளேயே புதைந்து கிடக்கும் பயம், தயக்கம், கூச்சம், சந்தேகம் ஆகியவற்றை யும் பெண் அரங்காளிகள் ஒருசேரச் சந்திக்கின்றனர். அவற்றுக்கு முகங்கொடுக்கின்றனர்.

இத்தகைய அழுத்தங்களை எதிர்கொள்வதற்குரிய பௌதீக, ஆன்மீகப் பலத்தை உருவாக்குவதும் பெண்நிலை அரங்காளிகள் எதிர்நோக்குகின்ற இன்னோர் சவாலாகும். அரங்கப் பங்காளிகளிடை யேயும்,பெண்கள் குழுக்களிடையேயும் ஒருவருக்கொருவர் ஆதர வாக அமையக்கூடிய வலைப்பின்னல் தொடர்புகளை உருவாக் குதல், தனிநபர் / கூட்டு ஆளுமை விருத்தி, தன்னாற்றல், தன்னம் பிக்கையை கட்டி வளர்த்தல், பொருளாதாரப் பலத்தினை உருவாக் குதல் ஆகியவை பற்றி நாம் பொறுப்புணர்வுடன் சிந்திக்க வேண்டும். பெண்கள் மேல் சுமத்தப்பட்டிருக்கின்ற போலியான மத்தியதரவர்க்க விழுமியங்களை விளங்கிக் கொள்வதும் அவற்றை விமர்சிப்பதும் கருத்து நிலைத்தெளிவும் பெண்நிலை அரங்கச் செயலாளிகளை வலுவூட்டும் விடயங்களாகும்.

இவ்வகையில் ஒரே நேரத்தில் இருமுனைகளில் பெண்நிலை அரங்காளிகள் செயலாற்ற வேண்டி ஏற்படுகிறது. ஒன்று; பெண்நிலை

படிப்பகம்

www.padippakam.com

அரங்குப் பாரம்பரியத்தை உருவாக்குதல், அதற்கான அழகியலையும் விமர்சன முறைமையையும் விவாதித்தல்.

இரண்டு; மேற்கூறியவற்றில் ஈடுபடுபவர்களுக்கான ஆதரவு அமைப்புகளையும் பொறிமுறைகளையும் ஏற்படுத்துதல். இத்துடன் கூட சமூகத்தில் இயங்குகின்ற மாற்றுக் கருத்துநிலையாளர்கள், மாற்றுக் கலாசாரக் குழுவினர் ஆகியோருடனான தொடர்ச்சியான கலந்துரையாடலும் இதில் அடங்கும். இவ்வகையில் பெண்கள் தமது ஆதரவு வட்டத்தைப் பெருப்பித்துக் கொள்ள முடியும்.

இத்தகைய செயற்பாடுகள் எமது சமூகத்தில் பரவலாகும்; தொடர்ந்து நடைபெறும் எனவே நான் நம்புகிறேன். பெண்ணிய அரங்கிற்கான தேவை இன்று உணரப்பட்டுள்ளது. இந்த உணர்வையும் புத்தெழுச்சியையும் இனித்தடுத்து நிறுத்திவிட முடியாது.


படிப்பகம்

www.padippakam.com

# வர்ணங்களில் உணர்வெழுதி

## ஓவியத்தபாலட்டைக் கண்காட்சியின் விமர்சனம்

பிரியா – மகாலிங்கசிவம்
வருகை விரிவுரையாளர்
நுண்கலைத்துறை
கிழக்குப் பல்கலைக்கழகம்.

விஞ்ஞானம் முதற்கொண்டு, சமூகவியல் ஈறாகப் புரட்சிகர மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்ற இந்த 21ம் நூ.ஆண்டுக் கால கட்டத்தில் உலகின் மறுபுறத்தில் வன்முறைகளும், அடக்கு முறைகளும் அராஜகங்களும் தலைவிரித் தாடுவதை யாரும் மறுக்க முடியாது. இந்த நிலையில் பெண்கள் தமது தனித்துவத் தையும், பலத்தையும் நிலைநிறுத்தித் தமது சுய இருப்பினை நிச்சயித்துக் கொள்வதற்கு பல வழிகளிலும் முயன்று கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் காலங்காலமாகப் பெண்களை வெறும் போகப் பொருளாகவும், இயந்திரங்களாகவும் பாவித்து வந்த மனநிலை இன்னும் எமது சமூகத்தின் சில இடங்களில் வேரோடிக்கிடப்பது வேதனைக்குரியதே. சமூகத்தில் புரையோடிப் போய்க் கிடக்கும் இத்தகைய பிரச்சினைகளைப் புடம்போட்டுக் காட்டுவதில் பல நிறுவனங்க ளும் ஊடகங்களும் செயற்பட்டாலும் அவை எந்தளவிற்கு எமது உணர்வுகளுடன் ஊடாடுகின்றன என்பது கேள்விக்குரியதே.

சில உணர்வுகள் உணர்ந்து கொள்ளப்பட வேண்டியவை. உணர்த்தப்பட வேண்டியவை. இன்று எமது சமூகத்திற்குத் தேவையான இத்தகைய உணர்த்தல் களைச் செய்வதில் கலைகள் மிக முக்கிய பணியாற்றிக் கொண்டு வருகின்றன.

இத்தகைய கலைகளிலும், உள்ளத்து உணர்வுகளை அடி மன ஆதங்கங்களைச் சிறப்பாக வெளிக்காட்டக் கூடிய தளமாக ஓவியக்கலை அமைகின்றது.

ஓவியப்படைப்பு என்பது பல நோக்கங்களுக்காக இடம் பெறலாம். அதாவது அதன் வெளிப்பாடு ஒரு சமூகப் பார்வையாக இருக்கலாம். அல்லது ஒரு கருத்தினை முன்வைப்பதாகவோ, சுயவெளிப்பாடாகவோ, சமூகம் மீதான விமர்சன மாகவோ அமையலாம்.

இந்த இடத்தில் இங்கு காணப்படும் திருமதி.வாசுகி-ஜெயசங்கரின்

படிப்பகம்

www.padippakam.com



ஓவியங்கள் ஒரு சமூகப்பார்வையாக, சமூகம் மீதான தனது ஆதங்கமாக அமைந்திருப்பதை காணமுடிகின்றது. சமூகம் மீதான தனது விமர்சனத்தை தூரிகைகள் மூலம் பேசியிருக்கின்றார் என்றே என்னால் எண்ணத் தோன்றுகின்றது.

இங்கே வைக்கப்பட்டிருக்கும் ஓவியங்களெல்லாம் எம்மைத் தம்முடன் மிக நெருக்கமாக ஊடாடச் செய்வதற்குக் காரணம் இங்கு கருக்கொண்டுள்ள விடயங்கள் யாவும் தினம் தினம் நாம் பார்த்தும் கேட்டும் வாசித்தும் ஏன் அனுபவித்தும் கொண்டிருக்கின்ற பிரச்சினைகளாக இருப்பதே.

அழுத்தப்பட்ட அல்லது உலுக்கப்பட்ட உணர்வுகளை வெளிப்படுத்த நவீன ஓவியப்பாணியை இவர் கையாண்டுள்ளார் என எண்ணுகின்றேன். இங்குள்ள ஓவியங்கள் வரையப்பட்டுள்ள விதங்களிலும், படைப்புச் சாதனங்களிலும், வர்ணங்களிலும், வடிவங்களிலும் வேறுபட்டிருந்தாலும் கூட இவ்வெல்லா ஓவியங்களும் வெளிப்படுத்தி நிற்கும் கருப்பொருள் ஒரே விடயமாக அமைந்துள்ளதை அவதானிக்க முடிகிறது.

எடுத்துக் கொண்ட ஒரே விடயத்தை வேறுபட்ட கோணங்களிலும், வேறு பட்ட வடிவங்களிலும் இவர் வரைந்திருப்பதுகூட வெவ்வேறுபட்ட ரசனைகளுக்கு விருந்தளிப்பதாயும் வேறுபட்ட உணர்வுகளை எம்முள் ஊட்டுவதாயும் அமைகின்றது. உதாரணமாக இங்கு இருவகை ஓவியங்கள் இருப்பதை நாம் அவதானிக்க முடியும்.

I. வெள்ளைப் பின்னணியில் கறுத்தமையால் வரையப்பட்டுள்ள ஓவியங்கள்.

படிப்பகம்

www.padippakam.com

2. வர்ணக் கலவைகளைப் பயன்படுத்திக் கித்தான்களிலும், கார்போட்டு களிலும் வரையப்பட்டுள்ள ஓவியங்கள்.

இவ்விரு வகை ஓவியங்களும் உள்ளடக்கியுள்ள கருப் பொருட்கள் ஒன்றேயாயினும் பார்க்கும் போது இவ்விரண்டுவகை ஓவியங்களும் வெவ்வேறுபட்ட உணர்வுகளை எமக்குள் ஊட்டியதை உணரமுடிகிறது. வர்ண ஓவியங்களை விட சுருள்களும் நெளிவுகளுமான கறுப்பு வெள்ளை ஓவியங்கள் பார்க்கும் போது கூடியளவு தாக்கத்தை என்னுள் ஏற்படுத்தியது. கருப்பொருள் தொடர்பான ஓவியரின் உள்ளக் குமுறல் இவ்வகை ஓவியங்கள் அதிகமாக வெளிப்படுவதை என்னால் உணரமுடிகின்றது. பெண்ணுக்குள் குமுறிக் கொண்டிருக்கும் உள்ளக் குமுறல்களை தூரிகையின் ஒவ்வொரு அசைவும் மிக அற்புதமாகச் சித்திரிக்கின்றன.

வர்ண ஓவியங்களில் கருப்பொருள் ஓரிடத்தில் ஒருருவில் குவிக்கப்பட்டாலும் எதிர் வர்ணங்களைக் கொண்டு வெளியைப் பயன்படுத்தி யிருக்கும் தன்மையூடாக கட்புல அலகுகளைக் கொண்டு மையக்கருத்திற்கு அழுத்தம் கொடுப்பதையும் அவற்றினூடாக கருப்பொருளை விவரித்துக் காட்டியிருப்பதையும் அவதானிக்க முடிகின்றது.

தனது எண்ணத்தை வர்ணங்களினூடாக வெளிப்படுத்துவதில் இவர் கூடிய கவனம் எடுத்துள்ளார். ஆணுருவங்களிற்கு கடும்சிவப்பு வர்ணமும், பெண் வடிவங்களிற்கு பச்சை வர்ணமும் பெருமளவு பயன்படுத்தியுள்ளார். வீரம், கோபம், வெறுப்பு, அபாயம் என்பவற்றின் குறியீடாக சிவப்பு நிறமும், அமைதி, சாந்தம் என்பவற்றின் குறியீடாகப் பச்சை நிறமும் பயன்படுத்தப்படுவது வழக்கம். இத்தகைய வர்ணப்பயன்பாடுகளின் கையாள்கையூடாக கருப்பொருள் வலுப் பெறுவதையும் பார்க்கும் போது கூடியளவு தாக்கத்தை எமக்குள் ஏற்படுத்துவதையும் நாம் காணலாம். வர்ணங்களும், வடிவங்களும் சொல்லாத சில சேதிகளைக் கூட தூரிகை அசைவுகள் எம்முடன் பேசுகின்றன.

நவீன ஓவியப் பாணியை பெற்றுள்ள இவ்வோவியங்களில் உருவச் சிதைப்புகளும் விகாரங்களும் கூட, எடுக்கப்பட்டுள்ள கருவிற்கு வலுச்சேர்த்திருப்பதைக் காணமுடிகின்றது. மென்மையும், மெல்லிய உணர்வுகளும் கொண்ட சாந்த சொரூபியாய் பெண்ணைச் சித்திரித்து வரும் ஒரு வரலாற்றுக் கட்டமைப்பை உடைத்து வீரமும், துணிவும், விவேகமும் உள்ளவளாக தற்கால சமூகம் வேண்டி நிற்கும் பெண்ணை உருவாக்குவதற்காக பெண்ணிற்குரிய அங்கலட்சணங்களுக்குக் கூட ஓவியர் வித்தியாசமான பரிமானங்களைக் கொடுத்திருப்பது நோக்கத்தக்கது.

இங்கு வைக்கப்பட்டுள்ளவை நவீன ஓவியங்களாதலால் ஒரு முறை பார்த்ததும் யாராலும் எந்த முடிவிற்கும் வர முடியாதிருந்திருக்கும். பல முறைபார்த்துப்

படிப்பகம்

www.padippakam.com

படிப்படியாக உள்வாங்குதல் மூலமே இவற்றின் புரிதல் சாத்தியப்படலாம். ஆனாலும் திரும்பத் திரும்பப் பார்க்கத் தூண்டும் ஒரு இயல்பினை இவ்வோவியங்கள் கொண்டிருப்பது சிறப்பாகக் குறிப்பிடக்கூடியது.

சிக்கல்களில் மூட்டுண்டு கிடக்கும் இத்தகைய நவீன ஓவியங்களைச் சுவைஞர்களுக்குத் திறந்து காட்டும் ஒரு திறவு கோலாக அவற்றின் தலைப்புகளைக் கொள்ளலாம். குறைந்த பட்சம் தலைப்புகள் இவ்வோவியங்களை விளங்கிக் கொள்ள ஒரு துப்பையாவது நமக்குத்தரும். ஆனால் தலைப்பு பார்வையாளரின் சுயமான சிந்தனையோட்டத்தைத் தடைப்படுத்திவிடும் என்ற வாதம் காரணமாக இங்கு ஓவியங்கள் தலைப்பிடப்படாமல் இருக்கின்றன என எண்ணுகிறேன்.

மொத்தத்தில் இங்குள்ள ஓவியங்கள் வரலாறு காட்டிய பெண்ணியல் சிந்தனைகளையும் இன்றைய சூழலில் பெண்கள் முகம் கொடுக்கும் பல்வேறு பிரச்சினைகளையும் இவற்றிலிருந்து மீண்டெழும் பெண்களின் பல்வேறு உணர்வுக் கோலங்களையும் நவீன ஓவியப் பாணியில் பல கோணங்களினூடாக வெளிப்படுத்தி ஒரு கலைப்படைப்பு சமூகத்திற்கு ஆற்ற வேண்டிய பணியினை மிகச் செம்மையாக இவ்வோவியங்கள் செய்து கொடுத்திருப்பதை உணரமுடிகிறது. எமது சமூகத்துள் மட்டும் நின்றுவிடாது தேசிய ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் கலைப்பணியைச் செய்ய புறப்பட்டுள்ளவையே இவை.

படிப்பகம்

www.padippakam.com

# மௌனக் குரல்களில் இருந்து . . .

## காசுக்கட்டளை

சி. ஜெயசங்கர்.

சரி, இங்க கவனி,
இதையும் எழுது
நான் சந்தோஷமாய் இருக்கிறேன்
உடம்பு குளறுது
ஆனால் சொல்லு
ஊரோட ஒப்பிடேக்க
இங்க நல்லம்.

ஆம்பிளை முகிலைப்போல வருவான்
பிறகு கலைஞ்சு போயிடுவான், கவனி,
ஆனால், எல்லாரிட்டையும் கேட்கத் துடிக்கிறது,
"என்னட்ட வரமுன்னம்
எத்தினை பொம்பிளையளிட்ட போனனி?"
இப்ப, அவனொரு ஆம்பிளை
அவன் படுக்கச் சொன்னால்
அவனோட படுக்க வேணும்
இவனுகளுடைய மனிஷிமார்
அவளுகளுடைய சுருக்குப் பிடியளை
ஏன் தளர விடுகிறவளுகள்?
உனக்கு மட்டும் இதைச் சொல்லுறன்,

இன்னும் எழுது,
காசுக் கட்டளை கொஞ்சம் பிந்தலாம்
ஆனால் நிச்சயம் அனுப்பப்படும்.
புது நெக்கிலைஸ் ஒண்டும்
செய்திருக்கிறனெண்டு சொல்லு,
காப்புகளும் பத்துரூபா குறைய அம்பதும்
விஷ்னுவிடம் குடுத்தனுப்பி விடுறன்
அதில, தங்கச்சிக்கு ஒரு புத்தகம் வாங்கு
றம்யாவுக்கு ஒரு சட்டை
ஒவ்வொரு நாளும்
பத்திச்சதம் குடுத்தி யெண்டா
பெடியன் பள்ளிக்குப் போய்வருவான்


படிப்பகம்

www.padippakam.com

அதோட, என்ர அன்பையும்
ரெண்டுபேருக்கும் தெரிவிச் செழுது.
இங்கையும்
எல்லாம் கட்டுப்பபடி யாகாமல் போகுது
ஆம்பிளையளுக்கு புதுப்படுக்கை விரிப்பு தேவைப்படுகுது
கண்ணாடியில இருந்து ரஸப்பூச்சு கழண்டு போகிது
விளக்கு மட்டும் போதாது
மின்விசிறியும் தேவைப்படுகிது
நான் சொல்லிறத கேட்டுக் கொண்டிருக்கிறாய்
எண்டதால சொல்லுறன்
இதை எழுதிப் போடாதை.
இங்க, எனக்குச் சிரிப்பு வருகிது
நினைவுக்கு வாறதைச் சொல்லட்டோ
இல்லாட்டி விடட்டோ?

கொஞ்ச நாளுக்கு முன்னம்
வாடிக்கையாள் ஓராள் வந்தான்
"இங்க கிடக்கிறதை விட்டிட்டு
என்னைக் கட்டிறியா?" எண்டு
கதைக்கத் தொடங்கினான்
"நானிப்ப
உன்ர படுக்கையில தானே கிடக்கிறன்
இல்லையா?"
என்னத்தைச் சொல்லுறது?
நான் அதைச் சொன்னதும்
அவனுக்கு
அதிர்ச்சி வந்தது போல இருந்திது.

ஆம்பிளை இனத்தைக் காணவே
எனக்குச் சிரிப்புவாற போலக்கிடக்கு
இந்தத் தோலாலை ஒரு பயனுமில்லை,
பார்,
ஆம்பிளையள் இதில உண்ணிமாதிரி ஒட்டிருங்கள்
அப்பிடி இருந்து கொண்டு
எதையும் கதைக்கத் தொடங்கி விடுகிறாங்கள்
இந்த ஆணினம் எனக்குச்
சிரிப்பு வாறபோலவும், அழுகை வாறபோலவும்
உணரச் செய்யிது.


படிப்பகம்

www.padippakam.com

*இந்தத் தோல் என்னை*
*ஏதோவொரு மிருகம்போல இழுக்கிது*
*உனக்கு அலுப்புத்தட்டத் தொடங்கியிருக்கும்*
*சிலவேளை அந்தப் பக்கம் வருவன்.*

"கவிதை இந்தியா : மௌனத்தின் குரல்கள்" என்ற ஆங்கிலக் கவிதைத் தொகுதி H.K. கௌல் என்பவரால் தொகுக்கப் பட்டிருக்கிறது. அத்தொகுதியில் உள்ள அனிஷாவோறா என்பவரது கவிதை தமிழில் தரப்படுகிறது.

எமது சூழலில் உரத்துப் பேசப்படும் அரசியல் சார்ந்த படைப்புகளே அதிகமாக, மிக அதிகமாக இருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.

ஆங்கிலேயர்கள் இலங்கையை வெளிப்படையாக விட்டுப் போனதில் இருந்து, இன்று வரையான கலை, இலக்கிய வரலாற்றிலோ அல்லது விமரிசன வரலாற்றிலோ இதனைத் தெளிவாக காண முடியும். அதாவது முனைப்புப்பெறும் ஒன்றைச் சுற்றியே முழுதையும் கட்டியமைப்பது. இதற்கான காரணங்கள் தனித்து அணுகப்பட வேண்டியவை.

இந்தச் சூழலில், கவனிக்கப்படாமல் இருப்பவற்றை கவனத் திற்கு கொண்டு வருவதும் , அவை பற்றிய உரையாடல்களுக்குத் தூண்டுவதும் முக்கியமான விடயமாகும். மேற்படி முன்னெடுப்பில் இம்மொழி பெயர்ப்பும் ஒரு துளி.



ஓவியம்
அருந்ததி

படிப்பகம்

www.padippakam.com

# பால்நிலையும் ஊடகங்களும்

க.கமலினி

## அறிமுகம்

தோட்டப்புறங்களில் பால்நிலைக்கருத்தியல் பற்றி முன்னெடுக்கப்பட்ட ஆய்வின் ஒரு பகுதியாக ஊடகங்களும் பால் நிலையும் எனும் தலைப்பில் முன்னரே திட்டமிடப்பட்ட குறுகியகால அடிப்படையிலான சிறிய ஆய்வொன்றை நுவரெலியாவில் நகர்ப்புறத்தை மிகவும் அண்மித்த ஒரு தோட்டத்தின் ஒரு குறிப்பிட்ட பிரிவில் மேற் கொண்டோம். முதலாவது நாள் நேர்காணல்கள், இரண்டாவது நாள் கலந்துரையாடல்கள், மூன்றாவது நாள் திரைப்படம் ஒன்று, நான்காவது நாள் திரைப்படம் ஒன்று, நான்காவது நாள் திரைப்படம் பற்றிய கலந்துரையாடல்கள், ஐந்தாவது நாள் பெண் நிலைச்சிந்தனையிலமைந்த தொலைக்காட்சி நாடகம் ஒன்றும் கலந்துரையாடலும் என்ற முறையில் இவ்வாய்வு நடாத்தப்பட்டது. மாற்றுத் திட்டங்கள் /மாற்று நிகழ்ச்சிகள் பற்றிய தோட்ட மக்களின் விருப்புகள் ஆலோசனைகள் பெறப்பட்டன. இவற்றில் நேர்காணலில் கிடைத்த தரவுகளை மையப்படுத்தியதாக இக்கட்டுரை அமைகின்றது.

## ஆய்வின் பிரச்சினையும் ஆய்வின் வினாவும்:

தோட்டங்களில் தொலைக்காட்சிகள் இன்றைக்குக் கூடுதலான வீடுகளில் இருக்கின்றன. தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை, குறிப்பாகத் திரைப்படங்களைப் பார்க்கும் போக்கு தோட்டங்களில் அதிகரித்துள்ளது. இவ்வாறு அதிகரித்த அளவில் திரைப்படங்களைப் பார்ப்பதால் தனி மனித உளவியலிலும் நடத்தையிலும் சமூக உறவுகளிலும் பலவிளைவுகள் ஏற்படுகின்றன. இந்த விளைவுகள் பால்நிலைக் கருத்தியலில் ஏற்படுத்துகின்ற தாக்கம் பிரதானமானது. ஊடகங்கள் பால்நிலைக்கருத்தியலில் ஏற்படுத்துகின்ற தாக்கங்கள் பற்றியும் அதனூடாகப் பெண்களுடைய சமூக அந்தஸ்தில் ஏற்படும் மாற்றங்கள் பற்றியும் பல்வேறு சமூகங்களிலும் ஆய்வாளர்கள் ஆய்வுகளைச் செய்துள்ளனர். இவ்விடயம் சமூக விஞ்ஞானங்களிலும் பெண்நிலைச் சிந்தனையிலும் கோட்பாட்டாக்கஞ் செய்யப்பட்ட தொன்றாகும். ஆனால் தோட்டப்புறங்களில் அத்தகைய ஆய்வொன்று நடைபெறவில்லை. இப்பின்னணியில்தான் நாங்கள் இந்த ஆய்வை மேற்கொண்டோம். ஆய்வின் பின்னணியில் பின்வரும் வினாக்கள் தொழிற்பட்டன.

படிப்பகம்

www.padippakam.com

1. சினிமா பால்நிலைக்கருத்தியலை எவ்வாறு பாதிக்கின்றது?

2. ஊடகங்கள் பெண்களின் சமூக அந்தஸ்தில் ஏற்படுத்தும் தாக்கம் என்ன?
3. பெண்களின் சமூக அந்தஸ்தினை நேர்நிலையானதாக ஆக்கிக் கொள்ள ஊடகங்களை எவ்வாறு பயன்படுத்தலாம்?
4. சினிமா பற்றிய விமர்சனரீதியான சிந்தனையை வளர்ப்பது சாத்தியமா?

5. மாற்று நிகழ்ச்சிகள் எவ்வாறானவையாக அமைய வேண்டும்? சினிமா தொலைக்காட்சி நாடகங்கள் என்பவற்றிற்கு மாற்றீடுகள் உண்டா?

**நேர்காணல்கள் பற்றிய சிறு குறிப்பு:**

முதள்நாள் இரு ஆய்வாளர்களும் ஐவ்வைந்தாக 10 ஆழமான நேர்காணலை மேற்கொண்டோம். ஆரம்பத் தகவல்களைப் பெறுதல், அதனூடாக விரிவான விடயங்களிற்கு செல்லுதல் என்பது பிரதான நோக்கமாகவும் ஆய்வாளர்கள் ஆய்வு விடயம் பங்குபற்றுபவர்கள் பற்றிய அறிமுகத்தையும் இணைப்பையும் ஏற்படுத்துவது உபநோக்கமாகவும் அமைந்தது.

பின்வரும் விடயங்களை மையப்படுத்தி கேள்வி கேட்கப்பட்டன.

1. யார் படங்களையும் தொலைக்காட்சி நாடகங்கள் / நிகழ்ச்சிகளைக் கூடுதலாகப் பார்க்கின்றனர்.

2. எவ்வழியில் பார்க்கின்றனர் (வீட்டில், அடுத்த வீட்டில், லயத்தில், மின்கலம், மின்சாரம்,VCR, என்னென்ன Channel இங்கு இருக்கின்றன)

3. எவ்வளவு நேரத்தைச் செலவிடுகின்றனர்.?

4. எவ்வாறான படங்கள் / நாடகங்கள் / நிகழ்ச்சிகள் கூடுதலாகப் பார்க்கப்படுகின்றன.?
5. ஏன் பார்க்கின்றனர்.?

6. தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றனவா?

படிப்பகம்

www.padippakam.com

அருந்தி விட்டு சாப்பிட்டுவிட்டுத் தூங்குவதையே தாம் விரும்புவதாகச் சிலர் தெரிவித்தனர். வசதியான குடும்ப நிலைமைகள் உடைய, தொழில் செய்யாமல் வீட்டில் இருக்கும் பெண்கள் கூடுதலாக தொலைக்காட்சிப் பார்க்கின்றனர். வயதானவர்கள் ஒப்பீட்டளவில் T.V. பார்ப்பது குறைவு.

4. தென்னிந்தியத் திரைப்படங்களும் தொலைக்காட்சி நாடகங் களும் விரும்பி பார்க்கப்படுகின்றன. சொர்ணவாகினியில் கூடுதலாகப் படங்கள் பார்க்கப்படுகின்றன. (சில வீடுகளில் இழுப்பதில்லை) வாரநாட்களில் ஒரு நாளைக்த இரண்டு தமிழ்த் திரைப்படங்களைப் போடுவதால் அதனைப் பார்ப் பதற்காகவே வேலைக்குச் செல்லாதவர்கள், பாடசாலைக் குப் போகாத பிள்ளைகள் என ஒரு பகுதியினர் வீட்டில் தங்கி விடுகின்றனர்.

5. ரூபவாஹினியில் தமிழ்ப்படங்களும், நாடகங்களும் குறைவாகப் போடப்படுவதையிட்டு குறைப்பட்டனர். அதனால் தாங்கள் சிங்கள நாடகங்களையும் திரைப்படங்களையும் பார்ப்பதாக குறிப்பிட்டனர். சிங்களநாடகங்கள் தரம் வாய்ந்தவையாக உள்ளவை எனக் கருத்துக் கூறப்பட்டது.

6. சிறுவர்களும் பாடசாலைக்குப் போகும் இளம் ஆண்கள் பெண்க ளும் காட்டூன்களை விரும்பிப் பார்க்கின்றனர். Discvery Programme, பாடவிடயங்கள் சம்மந்தமான நிகழ்ச்சிகள் பொது அறிவுப் போட்டிகள் என்பன பாடசாலை மாணவரிடையே பிரபலம் பெற்றுள்ளன. இவை தவிர பெற்றோர் படங்கள், நாடகங் களைப் பார்க்கும் போது சிறுவர்களும் கட்டாயமாகப் படம் /நாடகம் பார்க்கின்றனர், ஒரு சில சிறுவர்கள் அதில் ஊறி போய் உள்ளனர்.

7. சினிமாவையும் ஏனைய தொலைக்காட்சி நிகழ்ச்சிகளையும் பொழுதுபோக்காகவும் களைப்பாறுவதற்காகவும் சந்தோஷத் திற்காகவும் அறிவைப் பெறுவதற்காகவும் தாம் பார்ப்பதாக குறிப்பிட்டனர்.

8. குடும்பப் படங்கைளத் தாம் விரும்பிப் பார்ப்பதாக எல்லா வயதினரும் ஆண்களும் பெண்களும் குறிப்பிட்டனர். திரைப்

www.padippakam.com

படங்களில் கூடுதலான சந்தர்ப்பங்களில் பெண்கள் குடும்பப் பெண்களாகப் பாத்திரமேற்று நடிப்பதாகக் குறிப்பிட்டனர்.அத் தகையபாத்திரங்கள் எல்லோராலும் விரும்பப்படுகின்றன. பெண்கள் குடும்பப்பெண்களாக (மனையாள்) இருக்க வேண்டும் என்ற கருத்து மக்களிடம், எல்லா வயதினரிடையேயும் ஆழ வேரூன்றியுள்ளது. அதனைத்தான் திரைப்படங்களிலும் எதிர்ப்பார்க்கின்றனர். குடும்பம் என்ற நிறுவனம் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது. அதனைப் பேணிப்பாதுகாப்பதில் பெண்கள் பிரதான பங்காற்று வதாக கருதப்படுகின்றது. பெண் நல்லவளாக அடக்கமானவளாக இருக்க வேண்டும் என எதிர்பார்க்கின்றனர். அத்தகைய பெண் தான் குடும்பத்திற்கு ஏற்றவள் எனக் கருதுகின்றனர்.இக்கருத்தை நிலைப்படுத்துவதில் சினிமா முக்கிய பங்கை ஆற்றுகின்றது. அதாவது இக்கருத்து மக்களிடையேநிலவுவதற்குக் காரணமாக சினிமாவும் தொழிற்படுகின்றது. குடும்பம் நன்றாக இருப்பதற்குப் பெண் அடக்கமானவளாக இருக்க வேண்டும். குடும்பங்கள் நன்றாக இருந்தால் சமூகம் முன்னேறும் என்ற (செயற்பாட்டு ரீதியான) விளக்கத்தை அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. பெண்கள் படிக்கலாம், தொழில் செய்யலாம், முன்னேறலாம். உயர் பதவிகளை வகிக்கலாம். அதேவேளை அவர்கள் குடும்பப் பெண்ணாகவும் இருக்கவேண்டும். இக்கருத்து எல்லா வயதினரிடையேயும் ஆண்பெண் வேறுபாடின்றி காணப்படுகின்றது. சற்று முன்னேற்றகரமாகச் சிந்திப்பவர்கள் கூடஇந்தக் குடும்பப் பெண் எனும் படிமத்தில் ஊறிப்போய் இருக்கின்றனர். அதனை வலியுறுத்துகின்றனர்.

குடும்பப் பெண் தொடர்பாகப் பின்வரும் கருத்துக்களை அவர்கள் முன்வைக்கின்றனர்:

1. நல்லவளாக இருக்க வேண்டும்.
2. அடக்கமுடையவளாக இருக்க வேண்டும்.
3. கணவனைக் கவனிக்க வேண்டும், கணவனின் தேவைகளை நிறைவு செய்ய வேண்டும்.
4. வீட்டு வேலைகளைச் செய்ய வேண்டும்.
5. பாலியல்த் தேவைகளுக்காக பெண் வேறு ஆணிடம் போகக்

படிப்பகம்

www.padippakam.com

கூடாது. ஆண் அவ்வாறு போனால் மனைவி, மன்னித்து திருத்தி எடுக்க வேண்டும்.

சிறுவயதிலிருந்து,பெண்களை வளர்ப்பதிலிருந்து, கல்யாணம் செய்து குடும்பம் நடத்தி இறக்கும் வரை இக்கருத்து ஊட்டப் பட்டு வலியுறுத்தப்படுகின்றது.

9. ஆண்களை வீரர்களாகவும், துணிவுள்ளவர்களாகவும், அரசியல் வாதிகளாகவும் பெரும்பாலான படங்களிற் காணக்கூடியதாக இருப்பதாகவும் ஒரு சில படங்களில் நல்ல அண்ணனாக, நல்ல நண்பனாக, நல்ல கணவனாக, சித்திரிப்பதாகவும் குறிப் பிட்டனர். காதல் படங்களில் காதலனாக தோன்றுவதாகவும் குறிப்பிட்டனர். கூடுதலான படங்களில் வில்லன் பாத்திரம் ஒன்று காட்டப்படுவதாகவும் படங்களில் சண்டைக் காட்சிகள் முக்கியமானவை எனவும் குறிப்பிடப்பட்டது. சண்டைக் காட்சிக ளைத் தாம் விரும்பிப் பார்ப்பதாக சிறுவர்களும் இளைஞர் களும் ஒருசில இளம் பெண்களும் குறிப்பிட்டனர்.

10. கிரிக்கெட், வர்ணணைகள் ஆண்களால் விரும்பிப்பார்க்கப் படுகின்றது. மிகவும் குறைந்தளவிலான பெண்கள் தாம் கிரிக்கெட் பார்ப்பதாக கூறினர். கிறிக்கெட் காலங்களில் தொடர்ச்சியாக வர்ணணைகளை ஆண்கள் பார்ப்பதால் தமக்கு வேறு நினழ்ச்சிகளை பார்க்க முடியாது போவதாகவும் படிப்பதற்கு இடைஞ்சலாக இருப்பதாகவும் அதனால் வீட்டில் சண்டை சச்சரவுகள் ஏற்படுவதாகவும் இளம் பெண்கள் குறிப்பிட்டனர்.

11. சினிமா, ரி.வி. நிகழ்ச்சிகள் பார்ப்பதால் நடத்தையிலும் எதிர்பார்ப்பிலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன எனப்பலர் தெரிவித் தனர். உடையணிவதில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. சிலர் வில்லன் பாத்திரங்களையும் பாவனை செய்வதுண்டு என இளம் பெண்கள் குறிபிட்டனர். சமூக உறவுகளில் உடன டியாக வெளிப்படையான மாற்றம் ஏற்படுவதைத் தம்மால் அவதானிக்க முடியவில்லை எனவும் நீண்டகாலத்தில் அத்தகைய மாற்றங்கள் ஏற்படக்கூடும் எனத்தாம் நினைப்ப தாகத் தெரிவித்தனர். இளம் ஆண்களின் கருத்தில் சினிமா சிலவேளைகளில் பண்பாட்டுச் சீரழிவை ஏற்படுத்துகின்றது.

www.padippakam.com

சினிமாவைப் பார்த்து பெண்கள் கவர்ச்சிகரமாக உடைகள் உடுக்கின்றனர், இதனால் மோசமான நிலைமை ஏற்படுகின்றது. பெண்களின் பிரச்சினைகளுடன் சமூகத்தில் வேறு பல பிரச்சினைகளும் இருக்கின்றன. அவற்றிற்கும் சம அளவு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு ஆய்வுகள் செய்யப்படவேண்டும். நிகழ்ச்சித் திட்டங்கள் அறிமுகப் படுத்தப்படவேண்டும் என இளம் ஆண்கள் வலியுறுத்தினர். அதுபோல் சினிமாவைப்பற்றி ஆய்வு செய்யும்போது பல பிரச்சினைகள் அணுகப்பட வேண்டும் என்ற கருத்து வெளிப்பட்டது. பெண்களுக்கு சமத்துவம் வேண்டும் ஆனால் பெண்கள் ஆண்களை மிஞ்சுவது போலக்காட்டுவது தமக்கு விருப்பமில்லை எனக் குறிப்பிட்டனர். தமது பண்பாட்டிற்கு ஏற்ற வகையில்தான் பெண்கள் முன்னேற வேண்டும் என்பதை இளம் ஆண்கள் வலியுறுத்துகின்றனர்.

12. சினிமா தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை வீடுகளிலும் வேலை செய்யும் இடத்திலும் பாடசாலையிலும் காரசாரமான விவாதங்கள் நடைபெறுகின்றன. நல்ல விளைவுகள் தீயவிளைவுகள் பற்றிப்பலர் சிந்திக்கின்றனர். சினிமாபார்ப்பதால் நல்ல விளைவுகளும் தீயவிளைவுகளும் ஏற்படுகின்றன. சீர்தூக்கிப் பார்க்கின்ற போது தீய விளைவுகளே கூடுதலாக ஏற்படுகின்றன எனக் கூறப்பட்டது. எனினும் படங்களும் நிகழ்ச்சிகளும் தங்களுக்கு அறிவூட்டும் ஊடகங்களாகவும் செயற்படுவதால் புத்தகங்களை வாசித்தல் அல்லது வாசித்தவரிடம் இருந்து விடயங்களைப் பெறுவது கடினமானது என நடுத்தர வயதுப் பெண்கள் குறிப்பிடுகின்றனர். ரி.வி பார்ப்பதனூடாக இலகுவாக அறிவைப் பெறக் கூடியதாக உள்ளது. படங்கள் நிகழ்ச்சிகள் பொழுதுபோக்காக அமைகின்றன. சந்தோஷத்தைத் தருகின்றன. அதனால் பலர் இவற்றைப் பார்ப்பதைக் கைவிட விரும்புவதில்லை.

13. இளம் பெண்கள், குறிப்பாக பாடசாலைக்குப் போகும் இளம் பெண்கள் பெண்களின் பிரச்சினைகள் பற்றியும் பெண்களின் விடயங்கள் பற்றியும் ஓரளவிற்கு பிரங்ஞை உடையவர்களாக இருக்கின்றனர். பெண்களின் இழிவுநிலை, பிரச்சினைகள், அவர்கள் வன்முறைக்குட்படுதல் என்பன திரைப்படங்களிற் கூடுதலாகக் காட்டப்படுவதாக குறிப்பிடப்பட்டது. பெண்கள் அடிமைகளாக இருப்பதாக இந்தப்படங்களிற் காணக் கூடியதாக உள்ளதாகவும் குறிப்பிட்டனர். வன்முறைக் காட்சிகள்

படிப்பகம்

www.padippakam.com

திரைப்படங்களில் கூடுதலாக காட்டப்படுவதாகவும் வன்முறைகளை ஆண்களே புரிவதாகக் காட்டப்படுகின்றது. சண்டைக் காட்சிகளிலும் ஆண்களே நடிக்கின்றனர்.இவற்றைத் தொடர்ச்சியாகப் பார்ப்பதால் ஆண்கள் நீண்ட காலத்தில் மேலும் மேலும் வன்முறையாளராகக்கூடும் எனக் குறிப்பிட்டனர். மேலும் பெண்கள் தமக்கு அநீதி ஏற்படும் போது எதிர்க்காததாக, அடங்கிப்போவது போல படங்களிற் காட்டுவதால் யதார்த்தத்திலும் அவர்கள் எதிர்ப்புக்காட்டும் சந்தர்ப்பங்கள் குறையும் எனவும் தெரிவித்தனர். விளம்பரங்களில் கூடுதலானவை பெண்களைக் கவர்ச்சிப் பொருளாகக் காட்டுகின்றன எனவும் குறிப்பிட்டனர். பாடசாலைக்குப் போகும் இளம் பெண்கள் (A/L படிப்பவர்கள்) இவ்வாறு பிரங்ஞை உடையவர்களாக இருக்கிறார்கள். ஆனால் இவர்களும் இக்கட்டுரையிற் குறிப்பிட்டது போலான குடும்பப்பெண் எனும் வரைவிலக்கணத்தை ஏற்படுத்துகின்றனர். மாற்றுத் திட்டங்கள் முயற்சிகளில் இளம் பெண்கள் கூடுதல் அக்கறை செலுத்துகின்றனர். மாற்றங்களைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம் எனக் கலந்துரையாடப்பட்டது.

1. படங்களின் கதைகளிலும் சித்திரிப்புக்களிலும் மாற்றங்களைக் கொண்டு வருதல்.

2. வன்முறைகளைத் தவிர்த்தல்.

3. பெண்களை அனாவசியத்திற்கு விளம்பரப் பொருட்களாகப் பயன்படுத்துவதைத் தவிர்த்தல்.

4. நிகழ்ச்சிகளில் மாற்றங்களைக் கொண்டு வருதல்
உதாரணம்: கல்வி நிகழ்ச்சிகளைக் கூட்டுதல்.
இவை குறிப்பிட்ட Channelகளிற்கு எழுதிப்போடுவது, தயாரிப்பாளர்களுக்கு எழுதிப்போடுவது போன்ற செயல்கள் மூலம் நிறை வேற்றப்படலாம் எனக் கூறப்பட்டது. நாடகங்களைத் தயாரிப்பது,, தெருக் கூத்துக்களைத் தயாரிப்பது என்பன தோட்டமட்டத்தில் தம்மால் விரும்பிப் பார்க்கப்படும் ஒரு திட்டமாக இருப்பினும் அதில் தமக்குக் கலந்து கொள்ள நேரமிருக்காது என இளம் பெண்களும் நடுத்தர வயதுப் பெண்களும் கருத்துத் தெரிவித்தனர். ஊடகங்களைக் கண்காணிக்கும் அல்லது விமர்சனங்களை முன்வைக்கும் வகை

படிப்பகம்

www.padippakam.com

யில் குழு ஒன்று அமைக்கலாமா எனக்கேட்டபோது தமக்கு விருப்பமிருந்தாலும் பல ஐயப்பாடுகள் இருப்பதாகத் தெரிவித்தனர். இதனை ஒரு நிறுவனம் முறைமையாகச் செயல்படுத்தினால் மட்டுமே வெற்றி பெறும் எனக்கருதுகின்றனர். தவிர தாம் A/L எடுத்தும் வருமானம் தரக்கூடிய வேலையொன்றில் சேரவேண்டிய நிர்ப்பந்தம் தமக்கு இருப்பதால் எதிர் காலத்தில் இதற்கெல்லாம் நேரம் கிடைக்குமா எனும் சந்தேகத்தைக் கொண்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

14. தோட்டங்களில் மாற்றங்கொண்டுவர வேண்டும் என்ற அடிப்படையில் தோட்டத்தில் எல்லோருமே மாற்றுத்திட்டங்கள் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளத்தயாராயுள்ளனர்.ஆனால் பால்நிலை தொடர்பாக சில குழப்பமான முரண்பட்ட சிந்தனைகளை மாற்றஞ் சார்ந்து சிந்திக்கையில் வெளிப்படுத்தினால் குறிப்பாக இளைஞர்கள் இவ்விடயத்தை அதிகம் வரவேற்கவில்லை. தொழிலாளர்களின் பிரச்சினைகளை, தோட்டப் புறங்களை மையமாக வைத்து திரைப்படங்கள், தொலைக் காட்சி நாடகங்கள் தயாரிக்கப்படுவது தமக்கு விருப்பம் எனக் குறிப்பிட்டனர். குறிப்பாக தோட்டப்புறங்களில் பெண்களின் பிரச்சினைகளை மையப்படுத்தியதாக திரைப்படம் ஒன்று எடுக்கப்படுவது நல்லது எனத் தெரிவித்தனர்.

15. தோட்டங்களில் வானொலி கேட்கும் பழக்கம் பரவலாக உள்ளது. நீண்டகாலம் அவ்வாறான பழக்கம் உள்ளது. குறிப்பாக ரி.வி இல்லாத வீடுகளில் வானொலி கூடுதலாகக் கேட்கப்படுகின்றது. வானொலியை எப்போதும் போட்டுவிட்டு தாம் வேலைகளைச் செய்வதாகப் பலர்குறிப்பிட்டனர். கூடுதலானவர்கள் பாடல்களைக் கேட்பதாகவும் குறைவானவர்கள் நாடகங்களைக் கேட்பதாகவும் குறிப்பிட்டனர். வானொலி அலைவரிசைகள் கூடியதால் தாம் அறிவுள்ள பலதகவல்களைப் பெற்றுக் கொள்வதாகக் குறிப்பிட்டனர். பாடசாலைப் பிள்ளைகளுக்கு சிறுவயதிலேயே பாடல்கள் எல்லாம் அதிகம் பாடமாகி இருக்கின்றன. தாங்கள் அர்த்தத்தைப் பற்றி அதிகம் சிந்திப்பதில்லை எனவும் இசையுடன் இணைத்து பாடப்படுவதால் மனத்தில் சட்டென்று பதிந்து விடுவதாகக் கூறினர்.சிந்தித்துப் பார்த்தால் அவற்றிற் கூடுதலானவை பெண்களை இழிவு படுத்தும் வகையில் அமைகின்றன எனக் குறிப்பிட்டனர்.


படிப்பகம்

www.padippakam.com

16. பத்திரிகைகளை பாடசாலைக்குப் போகும் இளம் ஆண்களும் பெண்களும் நடுத்தரவயது ஆண்களும் கூடுதலாகப் படிக் கின்றனர். பத்திரிகை விளம்பரங்களும் பெண்களை மோசமா கச் சித்தரிப்பதாக இளம் பெண்கள் தெரிவித்தனர்.

17. வயதான ஆண்கள் தாம் நிகழ்ச்சிகளைத் தெரிவு செய்து பார்ப்பதாகக் குறிப்பிட்டனர். உதாரணமாக
    1. செய்தி
    2. தேர்தல் முடிவுகள்
    3. முக்கிய அரசியல் சமூகநிகழ்ச்சிகள் காட்டப்படல்
    4. முக்கிய அரசியல் வாதிகளின் இறப்பினைத் தொலைக் காட்சியில் காட்டும் போது.

முடிவுரை.

இத்தோட்டம் நகரத்திற்கு அண்மையிலிருப்பதாலும் அங்கு மின்சார வசதியிருப்பதாலும் நிர்வாகம் கடனடிப்படையில் தொலைக்காட்சி களை வாங்குவதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளதாலும் ஏனைய தோட்டங்களை விட இங்கு கூடுதலானோர் தொலைக்காட்சிப் பாவனைக்கு அறிமுகமாகியுள்ளனர். பாடசாலைக்குச் செல்லும் வசதி குறிப்பாக உயர்தரம் படிக்கும் வாய்ப்பு ஒப்பீட்டளவில் உள்ளதாலும் நகரத்தை அண்மித்த தோட்டத்திற்குரிய குணாம்சங்களைக் கொண்டிருப்பதாலும் இங்கு பெண்கள் பேச்சுமூலம் தமது கருத்துக் களை வெளிப்படுத்தும் ஆற்றலுள்ளவர்களாக இருக்கின்றனர். மரக்கறிச் செய்கை மூலம் குடும்பங்களுக்கு வருமானம் கிடைத்தல் எனும் காரணியும் இத்தோட்டத்தினை (சமூகப் பொருளாதாரரீ தியாக) வித்தியாசப்படுத்திக் காட்டுகின்றது. பால்நிலைக் கருத்தியலில் சினிமா நிட்சயமாகத் தாக்கம் செலுத்துகின்றது. நேரடியான உடனடியான தாக்கங்கள் குறைவாகவும் மறைமுகமான தாக்கங்கள் கூடுதலா கவும் உள்ளது. அதில் பால்நிலைக்கருத்தியலில் செலுத்தும் தாக்கம் பிரதானமானது. குறிப்பாகக் குடும்பப்பெண் எனும் பிம்பம் அசைக்க முடியாதவாறு நிலைநிறுத்தப்பட்டுள்ளது. பெண்கள் பெண்களாகவும் தொழிலாலராகவும், பிரஜைகளாகவும் எதிர் நோக்கும் பிரச்சினைகளுக் குத் தீர்வுகாண வேண்டியவர்களாயுள்ளனர். அவ்வகையில் எல்லா சமூகவிடயங்களிலும் நிறுவனங்களிலும் பெண்களின் தலைமைத்து வத்தை உருவாக்கிப் பேணவேண்டியுள்ளது. இத்தகைய சூழ்நிலை யில் குடும்பப்பெண் எனும் கருத்து பெண்களின் எல்லைகளை குறுகியதாக்கி விடுகின்றது. தவிர ஆண்களின் உலகம் வெளியுல


படிப்பகம்

www.padippakam.com

கம். பெண்களின் உலகம் வீடு என்ற இரட்டை எதிர் நிலையை உருவாக்கி விடுகின்றது. இதனால் ஆண்கள் வீட்டு வேலைகளிலும் பெண்கள் வெளி வேலைகளிலும் பங்குபற்றக் கூடிய வாய்ப்புக்கள் இல்லாதொழிகின்றன.

மக்கள் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து பார்த்தல், சினிமாப் படங்களைத் தொடர்ந்து பார்த்தல் என்பவை தொடர்பான நன்மை தீமைகளைச் சீர்தூக்கிப் பார்க்கின்றனர். இளம் பெண்கள் ஓரளவிற்கு பெண்களுடைய பிரச்சினைகள் பற்றிய பிரங்ஞையுடன் இவ்விடயத்தை அணுகுகின்றனர். நல்ல நேர்நிலை யான, முன்னேற்றகரமான மாற்றங்களை மக்கள் விரும்புகின்றனர். வரவேற்கின்றனர். இத்தகைய சூழ்நிலையானது செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்குப் பொருத்தமானதாக உள்ளது.

குறிப்பு

இக்கட்டுரையானது பால்நிலைக்கருத்தியல் பற்றி தோட்டங்களில் மேற் கொள்ளப்பட்ட ஆய்வு பல்கலைக்கழக மட்டத்திலான மேற்படிப் பிற்காக மேற்கொள்ளப்பட்ட ஆய்வு ஆகியவற்றின் அனுபவத்தின் விளைவாகும். ஆய்வினை ஒழுங்கு செய்த "பாம்"நிறுவனத்திற்கும் ஆய்வில் பங்கு பற்றிய தனலக்ஷ்மி கறுப்பையா அவர்களுக்கும் எனது நன்றி.

படிப்பகம்

www.padippakam.com

# தி. த. சரவணமுத்துப்பிள்ளை: ''பெண்விடுதலைச் சிந்தனை'' முன்னோடி

செ. யோகராசா.

தமிழ்ப் பாரம்பரியத்தில் பெண்விடுதலை குறித்த சிந்தனை ஆங்கிலேய ஆட்சியின்போது ஏற்பட்ட மாற்றங்களின் பெறுபேறு காரணமாகவே முகிழ்த்தமை பலருமறிந்ததொன்று. இவ்விதத்தில் தமிழ் நாட்டினராக மாயூரம் வேதநாயகப்பிள்ளை முன்னோடியாகவும் அவருக்குப் பிற்பட்ட பாரதியார் முக்கியமானவராகவும் கருதப்பட்டு வந்துள்ளமை இலக்கிய ஆர்வலர்கள் அறிந்துள்ள விடயமே. எனினும், இவர்கள் இருவருக்குமிடைப்பட்ட, ஈழத்தவரான தி.த.சரவணமுத்துப் பிள்ளை (? - 1896) பெண்விடுதலையின் சில அம்சங்கள் குறித்து உரத்துச் சிந்தித்துள்ளமை கவனத்திற்குரியது. இதுபற்றி, சுருக்கமாகவும், ஒப்புநோக்கிலும் நினைவு கூர்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தி.த.சரவணமுத்துப்பிள்ளை (தி.த.ச) பெண்கள் முன்னேற்றம் பற்றி, குறிப்பாக, இந்துப் பெண்களின் உயர்கல்வி குறித்து சொற் பொழிவுகள் நிகழ்த்தியுள்ளதாகத் தெரியவருகின்றது. ஆயினும் அதுபற்றி மேலதிகமாக அறிய முடியாதநிலையில், இவரியற்றிய ''தத்தைவிடுதூது'' (1892) நூலே இங்கு கவனிப்பிற்குரியதாகிறது.

''தத்தைவிடுதூது'' இயற்றப்டுவதற்கு முன், முற்குறிப்பிட்ட வாறு மாயூரம் வேதநாயகம்பிள்ளை இயற்றிய செய்யுள் நூலான பெண்மதி மாலை (1869) பற்றி சிறிது கவனிப்பது அவசியமாகிறது. இருபகுதிகள் கொண்ட இந்நூலில் இசைப்பாடல்கள் கொண்ட முதற்பகுதி (இப்பகுதிப்பாடல்கள் ஆசிரியர் தமது மகளுக்காக இயற்றியவை) பெண்கள் ஒழுக்கம், விழுமியம் என்பன பற்றி பாரம்பரியச்சிந்தனைகளையே (எ-டு: தெய்வபக்தி, குருவணக்கம், புருஷபக்தி, கற்பு, பாவம், புண்ணியம்) முன்வைக்கிறது. கீர்த்தனை கள் கொண்ட இரண்டாம் பகுதியில் இருபாடல்கள் மட்டுமே குறிப்பிடத் தக்கவை. இவற்றுளொன்று பெண்கல்வி பற்றியது (தங்களுக்குப் படிப்பிக்கும்படி ஸ்திரிகள் வேண்டுதல்). மற்றொரு பாடல் அக்காலப் பெண்களின் நிலை பற்றியது. அதன் முக்கிய பகுதிகள் கவனத்திற் குரியன:

www.padippakam.com

"காலைக்கு மாலைக்கு மூலைக்குள் எங்களை
ஆலைக் கரும்புபோல் தேய்த்தீர் - பாக
சாலைக்கு மன்மத லீலைக்கு மேவின
வேலைக்கும் எங்களை மாய்த்தீர்

மூலைக் கல்வி நாங்கள வாசித்தலா பத்தோ?
மூடப்பெண் கொள்வீரு மக்குப் பெரும் பித்தோ?
ஓலைக் கிரந்தங்களுங்கள் பாட்டன் சொத்தோ?
உமக்கென்ன காணுந்தலை மேற்தலை பத்தோ?"

எனினும் "தத்தைவிடுதூது", பெண்முன்னேற்றம் குறித்து, குறிப்பாக, பெண்கல்வி. பெண்அடிமை, பொருந்தாத திருமணம், திருமணத் திற்குப் பிற்பட்ட பெண்களின் வாழ்க்கைநிலை, பெண்கள் எதிர்ப்பின்றி அதற்கு அடங்கிவிடுதல் முதலியன பற்றி விரிவாக உணர்ச்சி முனைப்புடன் பேசுகின்றது. இவ்விதத்தில் இரு பாடல்கள் எடுத்தாளப்படவேண்டியவை.

"கூட்டிற் பசுங்கிளிபோற்
கோதையரை எப்போதும்
வீட்டில் அடைத்து வைக்கும்
விரகிலருக்கு யாது உரைப்போம்
பூட்டித் திறந்தெடுக்கும்
பொருளாகக் கருதினரோ
கேட்டோர் நகைப்பதுவும்
கேட்டிலரே .................."

"கண்ணை மறைத்தே கொண்டுபோய்க்
காட்டில் விடும் பூனையைப் போல்
பெண்ணை மனை அடைத்து வைத்து
பின் ஒருவர் கைக்கொடுப்பர்"
..............................................................................

இப்பாடல்களில் ஆசிரியர் கையாண்டுள்ள உவமைகளும், படிமங்களும் பெண்களது நிலையை கச்சிதமாக வெளிப்படுத்து கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

பெண்களது திருமணம் பற்றி - அதுபற்றி அன்றைய சமூக நோக்குப் பற்றி நன்கறிந்துள்ள தி.த.ச. மிகச் சிறந்த முறையில்

படிப்பகம்

அதனை வெளிப்படுத்தும் பாங்கு விதந்துரைக்கப்பட வேண்டியது. அது பின்வருமாறு:

*“தம்மனைக்கோர் பசு வேண்டிற்*
*தாம் பலகாற் பார்த்திருந்தும்*
*பின்னுந் துணிவிலராய் பேதுறுதல் மாந்தர் குணம்*
*என்னே மணவினையை இமைப்பொழுதிலே முடிப்பார்”*

இத்தகைய திருமணம், சிறுவர்களது பொம்மை விளையாட்டுப்போல ஆசிரியருக்குத் தெரிகின்றது!

மேலே “பசு” பற்றிக் குறிப்பிடுவது போன்றே பாரதியும் பெண்கள் நிலைபற்றி “மாட்டைத் தொழுவினில் கட்டிவைப்பது” போன்று என்றும் “நாயை விலைக்கு வாங்குவது” போன்று என்றும் பாடுகின்றான். இது பற்றியும் பெண்களை வீட்டில் கூட்டில் அடைத்து வைப்பது தொடர்பாகவும் தி.த.ச.வும் பாரதியும் கூறியுள்ளவை பற்றிக் கவனிக்கும் போது கவிஞர் இருவருக்குமிடையில் நெருங்கிய ஒற்றுமையுள்ளமை தெளிவாகின்றது. இதனாலேயே, “தத்தைவிடு தூது” நூலினை பாரதி படித்திருக்கலாம் என்று ஊகிக்க வாய்ப்புள்ளது என்று கைலாசபதி குறிப்பிட நேர்ந்தது. கைலாசபதியின் கருத்தினை மேலும் உறுதிப்படுத்துவது போன்று இன்னொரு ஆதாரம் எனக்குக் கிடைத்துள்ளது. ‘தி.த.ச.’ பணிபுரிந்த காலேசுக்குப் பாரதி சென்றுள்ளதையும் ‘தி.த.ச.’ சொற்பொழிவாற்றிய அக் காலேசுத் தமிழ்ச்சங்கம் பற்றி பாரதி பாடியுள்ளமை மட்டுமன்றி, அங்கு சொற் பொழிவாற்றியுள்ளதையும் (1906) ஆன விடயங்களை கவனிக்கும் போது தத்தைவிடுதூதினை பாரதி படித்திருக்கலாமென்ற விடயம் மேலும் வலுப்பெறுகின்றதல்லவா?

தவிர, பாரதியை விட, குறிப்பாக, பெண்களது திருமணம் பற்றி - பொருந்தாத திருமணம் பற்றி - தி.த.ச. நுணுக்கமாக பலபட நோக்கியுள்ளதை அவதானிக்கமுடிகின்றது. இவ்விதத்தில் முற்குறித்த பாடல்களை குறிப்பிடத்தக்க வேறுசில பாடல்களும் உள்ளன. பின்வருவன தகுந்த எடுத்துக்காட்டுகளாகின்றன:

*“மூடருக்கும் பேடருக்கும்*
*முதியோர் மெலியோர்க்கும்*
*தேடருக்கும் நல் விரத்தினம்போல்*
*தெரிவையரை சேர்த்துவரே”*

..........................................................

www.padippakam.com

*"தம் பெருமை தானறிய*
*தஞ்சமிலா பெண்களினை*
*வெம்புலிவாய் மான் என்ன*
*வீணே கொடுத்திடுவார்"*

*"பெண்ணருமை தானறியா*
*பேதர்க்குப் பெண்கொடுத்தார்*
*மண்ணிலுள்ள காலம்*
*வருந்துதற்கே பெற்றெடுத்தார்*
*கண்ணிலர் இத் தந்தைதமர்*
*கடுநரகிற்கே உரியர்"*

பெண்கள் திருமணம் பற்றி தி.த.ச. ஆழமாகச் சிந்தித்த மைக்கு காரணமுள்ளது. தத்தைவிடுதூதினை, தி.த.ச. இயற்றுவ தற்கு அவரது தனிப்பட்ட காதல் தோல்வியே காரணம் என்று கருதப்படுகின்றது. இச்சூழலில் "தத்தைவிடுதூது" தன்னுணர்ச்சிப் பாடலுக்குரிய (Lyric) பண்புகளைக் கொண்டுள்ளதாக அமைந்துள் ள்மையும் வியப்பிற்குரியதாகாது.

இவ்வாறெல்லாம் நோக்கும்போது பெண்விடுதலைச் சிந்தனை பற்றிய முன்னோடிகள் வரிசையில் தி.த.ச.விற்கு முக்கிய இடமுள்ளமை தெளிவாகின்றது. அன்னாரது சொற்பொழிவுகள் பற்றி அறியமுடியும் போது அவருக்குரிய இடம் மேலும் முன்நோக்கி நகரவும் கூடும். அது எவ்வாறாயினும், பெண் விடுதலைச் சிந்தனை தொடர்பான முன்னோடி தி.த.ச. என்பதில் இருவேறு கருத்திற் கிடமில்லை.

படிப்பகம்

www.padippakam.com

# நிஜங்கள்

ப.பரமேஸ்வரி.

என்ன வெயில் அப்பாடா குடையாவது எடுத்து வந்திருக்கலாம். என்ன கொழுத்துக் கொழுத்துது. பாவம் இவன் சிவா வந்திருந்தால், என்னப் போலதான் அவனும் களைத்துப் போயிருப்பான். அவனுக்கு வாற 25ம் திகதி சோதின ஏதோ அவரின்ர ஆசைப்படி படிச்சி முன்னுக்கு வந்தானென்டாத்தான் அவரின்ர ஆத்மாவும் சாந்திய டையும். ம்...அந்த மனுசன் சாகக்குள்ள என்னத்த நினைச்சுதோ. பிணமாவது கிடைச்சுதா, எப்பதான் நாமளும் அவரோட போய்ச் சேருரதோ; சீ... என்ன பைத்தியகார யோசனையெல்லாம் யோசிக்கிறன். இவள் கனகத்தின்ர பிள்ளையள் படுற பாட்டைப்பாரு, அவள் செத்ததுக்குப் பிறகு ஒரு பெடியன் அங்காலையும், அந்தப் பிள்ள வீட்டு வேலைக்கும் ம்... முதல் எப்பிடியெப்பிடியோ இருந்த குடும்பம். இதெல்லாம் பார்த்துத்து என்ர சுயநலத்துக்காக யோசிக்கின்ற யோசினையப் பாரு, என்ர மூன்று பிள்ளைகளுக்கும் என்ன கெதி.

சிவா கட்டாயம் நல்லதொரு உத்தியோகம் எடுப்பான். என்ன செய்யிறது, இப்ப அவனுக்குக் கஸ்டம்தான். நான் இந்தத் தொழிலால, அவனைப் படிப்பிச்சி விட்டனென்டா சரி. பிறகு அவன் சொல்லித்தான் இருக்கிறான். அம்மா நீங்கள் ஒன்றுக்கும் கவலைப் படவேண்டாம். தம்பிமாருக்கு, நல்லாப் படிக்க வசதி செஞ்சி குடுக்கிறது என்ர பொறுப்பு. நீங்க கஸ்ரப்படக் கூடாதம்மா. சுவர் இருந்தாத்தானே சித்திரம் வரையலாம். இந்த மாதம் சோதினமுடிய, நான் கட்டாயம் மாமாவோட வயல் வேலைக்குப் போறன். எனக்கு ஒரு பக்கம் சந்தோஷமாக இருந்தாலும் ஆத்திரமும் பயமும் கலந்த ஒரு உணர்வு எனக்குள் கிளம்பியதால், உன்ன நான் இப்ப உழைச்சு வரச்சொன்ன நானா? எங்கட நாடு இருக்கிற நிலமையில உன்ன எங்கு அனுப்பவும் எனக்கு விருப்பம் இல்ல. நீ நல்லாப் படிச்சு, நல்ல உத்தியோகம் எடுத்து தம்பிமார படிக்க வச்சா அதுவே போதும்.

திடீரென ஒரு சைக்கிள் காலுக்குள் பிறேக் போட்டு நின்ற போது, சுயநினைவு வந்தவளாகத் திரும்பிப் பார்க்கிறேன். சிவாவின் வயதையொத்த பெடியன்கள் பெரிய கூட்டமாக கூச்சல் போட்டுக் கொண்டு வந்ததால் எனக்குச் சைக்கிளை விடக் கொஞ்சத்தால தப்பித்தன். ஏனோ அந்தப் பிள்ளையளோட எனக்குக் கொஞ்சமும்

www.padippakam.com

கோபம் வரல்ல என்ன காரணமோ தெரியாது. ஒருபெடியன் சொறி ஆன்ரி எண்டுத்துப் போறான். சின்னப் புன்னகையுடன் திரும்பிப் பார்த்துவிட்டு நடக்கிறேன். இந்தப் பிள்ளையள் நல்ல சந்தோசமாக இருக்குதுகள். இப்படி என்ர சிவாவும் சந்தோஷமாக இருப்பானா? சீ... பாவம் அவனுக்கு எங்கே சந்தோஷம். சைக்கிளே இல்லையே என்ர மகனுக்கு. வாய்விட்டு ஒரு நாள் கூட கேட்கவும் இல்ல. அதுவும் ஒருவகையில் நல்லதுதான். இருந்தால்தானே, அவனும் இந்தப் பிள்ளையள் மாதிரி ஓடித் திரிவான். என்ர பிள்ளை இந்தச் சோதனையிலும் முதல் தரத்தில பாஸ் பண்ணித்தான் ஆகுவான். ம்... அதப் பார்க்கத்தான் அந்த மனுசன் குடுத்துவைக்கலையே. பாவம் அவர் என்ன பாட்டைப்பட்டு செத்தாரோ, அவர் இருந்தா என்ர பிள்ளைகள இப்படிக் கஸ்ரப்பட வைச்சிருப்பாரா? அடிக்கடி சொல்லுவார். நம்மளப் போல நம்மட பிள்ளையள் கஸ்ரப்படக் கூடாது தங்கம். என்ன கஸ்ரப்பட்டாவது மூன்று பேரையும் நல்லாப் படிக்க வைக்கவேணும்.

ஏதோ யோசனையில் நிமிர்ந்து பார்க்கிறேன். எனக்கு முன்னால் சில காக்கிச் சட்டைக்காரங்கள் சனங்களோடு ஏதோ கதைத்துக் கொண்டிருக்கின்றனர். என் மனதில் ஏதோ திகிலை மூட்டினாலும், ஒரு சந்தோசம் எங்கோ ஒரு மூளையில் எட்டிப் பார்க்கின்றது. நல்ல காலம், வரும் போது படிச்சிக்கொண்டிருந்த சிவா, "அம்மா நீங்கள் தலையிடி என்று இப்பதானே பனடோல் போட்டது. இந்த வெயிலுக்க போனா இன்னும் உரக்கும். நீங்க கொஞ்சம் ஓய்வு எடுங்கோவன். நான் இடியப்பத்தக் கொண்டு கடையில குடுக்கிறன்". என்று சொன்னதுக்கு,"சோதின நெருங்குற நேரம், அதோட உன்ன வெளியில் அனுப்பிப் போட்டு, வரும் வரைக்கும் வயித்தில நெருப்பக் கட்டிக் கொண்டு இருக்கச் சொல்லுறயோ. இப்ப எனக்குத் தலையிடி நிண்டுத்துது. நீ போய்ப் படி எனக்கு இது பெரிய கஸ்ரமில்ல" என்று சொல்லி விட்டுவந்ததை நினைச்சு நானே என்னுள் பெருமைப்பட்டுக் கொள்கிறேன்.

சனங்கள் நின்றதால் பெரிதாக பயம் இல்லாமலேயே கும்பலை அண்டி விட்டேன். கூட்டத்தைக் கூர்ந்து பார்க்கிறேன். எல்லோர் முகத்திலும் ஒருவகையான பீதியைக் கண்டு எனக்கும் அது தொற்றப் பார்க்கிறது. வட்டத்துக்குள் காக்கிச்சட்டைக்காரன் ஒருவன் ஒவ்வொருவராக விரட்டிக் கொண்டு வருகின்றான். ஏய் உனக்குத் தெரியோதா இவனை. யாராவ்து உண்மையைச் சொல்லா விட்டால் இவனோடு எல்லோரும் போக வேண்டிவரும்.


படிப்பகம்

சனங்களை விலக்கி நடுவில் சுடுபட்டுக்கிடக்கும் உருவத்தை எட்டிப் பார்க்கிறேன். ஆ...ஆ... ஆ...சிவா...என் கண்...ம...

கண்ணைத் திறக்கிறேன். காக்கிச் சட்டை என் முன்னால் வருகின்றான். "ஏய் மனுசி உனக்கு இவனைப்பற்றி ஏதாவது தெரியுமா?" ஐயோ. . . உண்மையைச் சொன்னால் என்ர இருக்கிற இரண்டு பிள்ளைகளுக்கும், திடீரென எனது மற்றைய இரு பிள்ளைகளின் முகமும் என் கண்முன் பரிதாபமாக என்னைப் பார்ப்பது போல இருக்கின்றது. ஐயோ இப்பவே... இப்படியே என்னை பூமி... அப்படியே பிளந்து... என்னை, ஏய்! உனக்கு காது கேட்குதில்லையா? காதில் வெடியோசை போல அந்தச் சத்தம் கேட்கிறது. கண்ணை மூடிக் கொண்டு எனக்குத் தெரியாமலேயே, எனது தலை இல்லை என்று அசைகின்றது. ஐயோ... அப்படியே எனது இரு பிள்ளைகளையும் தாவிப்பிடிப்பதாக நினைத்து கொண்டு தொண்டை கிழிந்துவிடக் கத்துகின்றேன்.

எங்கிருந்தோ அம்மா...அம்மா என்ற குரல் கேட்டு கண்ணைத் திறந்து பார்க்கின்றேன். என்கையைப் பிடித்து உலுப்பியவாறு எந்த மகனுக்காக கூச்சல் போட்டேனோ, அந்த மகனே என்முன், அப்டியே அவனது கையைப் பிடித்து தடவிப் பார்க்கிறேன். ஆமாம் நிஜந்தான் என் மகன் சிவா... ஆம் அவனேதான். இன்னும் இன்னும் தேம்பித் தேம்பி அழுகின்றேன். கனவென்று தெரிந்தும் அழுகையை என்னால் கட்டுப்படுத்த முடியவில்லையே.



ஓவியம்
அருந்ததி

www.padippakam.com

# ஓநாய்கள் வந்தன

கே. சுதாஜினி

பொழுது மெதுவாய் சாய்கிறது
அழகான என் சிறியவீடு..... அதில்
எனக்கென
ஒரு இருட்டறை
குப்பி விளக்கு வைத்தகுசினி
இவைதான்
என் பிரியமான உலகு
நானே இரசித்து
நடக்கின்ற 'மிடுக்கான' என்
நடையிது.....

ஒழுங்கையில் திடீரென
நாய் குரைக்கும் சத்தம்......
அது
அசாதாரணமாயிருந்தது
யன்னலூடே பார்க்கிறேன்
படலைக்கருகில் 'ஓநாய்கூட்டம்'
பத்துப்பன்னிரெண்டென அவை
என்னை
நான் எதனுள் மறைக்க......

என்தனிமையில் களிகொண்டு
வெடுக்கென
என்னில் பாய்ந்தன ஓநாய்கள்
குரல்வளையும் வறண்டுபோய்
அதிர மறுத்தது
ஆனாலும் விக்கித்துக்கதறினேன்
ஓநாய்கள் தம்முன்னங்கால்களால்
என் கன்னங்களை அறைந்தன
தலை கிறுகிவந்தது
கண்கள் இருண்டுபோக

என்னுடல்
இழுத்துச்செல்லப்படுகிறது என்
இருட்டறைக்குள்......
நான் நினைவிழக்கிறேன்
ஓநாய்களோ

படிப்பகம்

மகிழ்வுடன் எழுந்தன
புரியாத மொழியில் பேசியபடி
விரைந்தோடின...
என்னுடலெங்கும் காயங்கள்
அசையமுடியவில்லை
கிழிந்த உதடுகளிலிருந்து 'குருதி'
வடிந்தது...
சிதைந்த என் உடலங்களை
ஒருங்கு சேர்க்கிறேன்..
மெதுவாய் நிமிர்ந்து சுவரில் சாய்கிறேன்
நான் கிடந்த இடம் - அது
குருதியில் நனைந்திருந்தது
என் இதயம் அனலாய்க்கொதிக்க
கண்ணீர்
அதன் வடிகாலாய் வழிந்து
உதட்டுக்குருதியை
கழுவிச் சென்றது

எழுந்து செல்கிறேன்
முன்னே களப்புநீர் கலங்கியிருந்தது
பத்துமுறை
இல்லை பன்னிருமுறை மூழ்கியெழ
சூரியன் முழுவதுமாக நீரினுள் புதைந்து
அணைந்துபோனான்

இப்போது
எல்லாம் சரியாகி விட்டது
நடந்தவை யாருக்கும் தெரியாதுபோலும்!
ஆனால்
என் சுயம் எங்கு தொலைந்தது
ஐயோ!
அந்த மிருகங்கள் வந்து...
நினைக்கும் கணங்களில் நான்
மரணித்து மீழ்வதுபோல்...
எனினும்
வெறித்த என் விழிப்பார்வையூடு
தொலைவில் தெரிகிறது
நான் இரசிக்கும் அந்த 'மிடுக்கு'
அந்த நடையில்
நான்

www.padippakam.com

# "பாரதி"யில் செல்லம்மா

கே. சுதாஜினி

எமது பல்கலைக்கழகத்தின் நுண்கலைப்பீடம் ஒழுங்கு செய்த திரைப்படக்காட்சியொன்றில் "பாரதி" என்ற திரைப்படத்தினை பார்ப்பதற்கு மாணவர்களாகிய எமக்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டது.

திரு. நானராஜசேகரன் நெறிப்படுத்திய இத்திரைப்படத்தில் காண்பிப்பதிலிருந்து செல்லம்மா சிறுவயதிலேயே பாரதிக்கு வலுக்கட்டாயமாக திருமணம் முடித்து வைக்கப்படுகின்றாள். அன்றிலிருந்து பாரதியை தன் புருஷனாக ஏற்று கல்யாணப்பருவம் வரும் வரை காத்திருந்து பாரதியுடன் தனது இல்லறவாழ்க்கைக்குச் செல்கிறாள். செல்லம்மா சாஸ்திர சம்பிரதாயங்களை நம்பி அதற்குக்கட்டுப்பட்டு பிராமணியத்தை மேலாகமதித்து வளர்ந்த ஒரு பிராமணப்பெண். பாரதியோ நாட்டுப் பற்றுக்கொண்ட புரட்சியாளன், மகாகவி, முற்போக்குவாதி, இவ்வாறான ஒருவனைப் புரிந்து கொள்வததென்பது செல்லம்மாவால் இயலாதகாரியம். அவள் ஒரு சராசரிப் பெண்ணாகவே வாழவிரும்புகிறாள். சாதாரணமான பெண்களைப் போலவே அவளும் பல எதிர்ப்பார்ப்புகளுடன் திருமண வாழ்வில் நுழைந்திருப்பாள். தன் கணவனிடம் பொன் பொருளை எதிர்பார்க்கிறாள். கணவனோ கிடைக்கும் பணத்திற்கெல்லாம் புத்தகங்களை அள்ளிக் கட்டிக் கொண்டு வருகிறான். காரணம் அதில் அவன் மகிழ்ந்தான். ஆனால் அதில் மகிழாத செல்லம்மா ஏமாற்ற மடைந்து அழுகிறாள். ஏன் அழுகிறாய் என பாரதி கேட்டபோது "ஏன்னா கடையெல்லாம் ஏறியிறங்கி வாங்கினியளே ஒரு புடவைக் கடையும், நகைக்கடையும் கிடைக்கலையோ" என்கிறாள். பாரதி சிந்திக்கிறான். ஆனால் அவளுக்காக எதையும் செய்யவில்லை.

கீழ்ஜாதிக்கரர்களை வீட்டினுள் இருத்தி உணவளிக்கும்படி செல்லம்மாவை கூறுகிறான் பாரதி. பிராமணர் வீட்டில் குறைந்த சாதிக்காரரை உள்ளிருத்தி இலைபோட மாட்டார்கள். இது அவர்களது வழக்கம். இதில் சரி, பிழை செல்லம்மாவுக்குத் தெரியாது. இந்நிலையில் பாரதியை உள்ளழைத்து 'இவங்க கீழ்ஜாதிக்காரங்க இல்லையோ' என்கிறாள். 'பளார்' என செல்லம்மாவை அறைகிறான் பாரதி. விக்கி விக்கி அழுதபடி உணவை பரிமாற வருகிறாள் செல்லம்மா. பாரதியும் பிராமணன்தானே என்ற நினைப்பே செல்லம்மாவிடம்

www.padippakam.com

இருந்தது. பாரதிக்குள்ளே கொழுந்துவிட்டெரியும் பிராமணியத்துக் கெதிரான அனல் பற்றிய விளக்கம் செல்லம்மாவிடம் இருக்கவில்லை. தன் கொள்கைகள் செயற்பாடுகள் பற்றி பாரதி எந்தவிடத்திலும் செல்லம்மாவிடம் பகிர்ந்து கொண்டதாக படத்தில் காட்டப்படவில்லை. இந்நிலையில் அவளை அறைவதென்பது மிகமோசமான அடக்கு முறையினையே காட்டுகின்றது.

வீட்டிற்கு எந்தவித வருமானத்தையும் உழைத்துத்தராத நிலையிலும் கூட விருந்தாளிகளை அழைத்து உணவளிக்கும்படி கூறுகிறான்பாரதி. செல்லம்மா கஷ்டப்பட்டு ஒருவேளை கஞ்சி தயாரித்து வைத்திருப்பாள். குழந்தைகளுக்கும், கணவனுக்கும் இருந்தால் தனக்குமென அதனையும் எடுத்து விருந்தாளிக்குக் கொடுத்து விடுவான் பாரதி. பிறர் உண்பதில் தான் மகிழ்வான் பாரதி. ஆனால் பசித்த போது தாய் முகத்தினைப்பார்க்கும் குழந்தையின் ஏக்கம் பாரதிக்கெங்கே புரியப் போகிறது. அந்நேரம் செல்லம்மாவின் பெற்ற வயிறு தான் பற்றி எரியும்.

பட்டினியில் வாடுபவர்கள் பற்றி ஊர் உறங்கிய வேளையில் தான் விழித்திருந்து அழுதழுது மனமுருகி கவிதைவடிக்கிறான் பாரதி. கணவன் அழுவதைக் கண்டு மனம் பொறுக்காமல் துடித்துப் போய் வருகிறாள் செல்லம்மா. கவிதை எழுதும் போது துன்பத்தில் தோய்ந்து அழுது எழுதுவதென்பது செல்லம்மாவுக்கு புதியதாயிருந் தது. அதிலும் யாரோ பட்டினி கிடப்பதற்காக அழுகிறார் கணவர். செல்லம்மா நித்தம் பட்டினிக் கிடந்து இருக்கும் உணவை குழந்தை களுக்கும் கணவனுக்கும் விருந்தாளிக்குமென கொடுத்துவிட்டு வாழ்பவள். அவளின் பட்டினி, வயிறார உண்ணாத குழந்தைகளின் பட்டினியும், இளமையில் வறுமையின் கொடுமை பற்றி சிந்திக்காத பாரதி மற்றவர்களை நினைத்து அழுகிறான்.

அந்நேரம் மிக வேதனையுடன் செல்லம்மா சுட்டிக்காட்டிய போதுகூட சிம்மாசனத்தில் ஏறியிருக்கும் அரசன் குடிமக்களிடம் பேசுவது போல் ''செல்லம்மா உனது கணவன் சுப்பையா ஒரு ஏழை. உன் குடும்பம் வறுமையில் வாடுவதில் ஆச்சரியமில்லை'' என தன்னை செல்லம்மாவின் குடும்பத்தில் இல்லாத ஒருவனைப்போல் வைத்துக் கொண்டு தீர்ப்பு வழங்குகிறான். தன்கணவனுடன் வேதனையுடன் பேசிய செல்லம்மாவுக்கு ஆறுதலாகவோ, நம்பிக்கையாகவோ, பாரதி பேசவில்லை. பாரதி தன்குடும்பத்தையும், தன்னையும் புறவயமாக நின்று பார்ப்பதோ, இந்திய விடுதலைப்போராட்டத்தில் பாரதியின்


படிப்பகம்

www.padippakam.com

பங்குபற்றியோ, தீவிர செயற்பாடு பற்றியோ புரட்சிப்பற்றியோ அவற்றின் தேவை பற்றியோ எந்தவித தெளிவுமற்ற செல்லம்மாவிடம் இவ்வாறு பேசுவது எத்துனை முட்டாள்தனம். பாரதி கூறுவது போல் சிகரத்தில் இருக்கும் மகாகவி சாதாரண பிராமணத் தந்தையாக இறங்கி வருவதில் ஒன்றும் சிரமமில்லை என்றால் சிகரத்துக்கு ஏறிவர முடியாத செல்லம்மாவிடம் பாரதியால் ஏன் இறங்கி வர முடிய வில்லை. ஏன் அவளை புரிந்து கொள்ள முடியவில்லை என்பதே எனது விவாதம்.

ஒரு கட்டத்தில் பாரதி செல்லம்மாவைக் கேட்கிறான் நீயுமா என்னைப் புரிந்து கொள்ளவில்லையென்று. தான் செல்லம்மாவை புரிந்து கொள்ளாது இருந்து கொண்டு தன்னைமட்டும் செல்லம்மா புரிந்து கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கின்றான்.

பாரதி தன் குடும்பம் மீதான பொறுப்பற்றதனத்தினால் செல்லம்மாவால் குழந்தைகளை நன்கே வளர்க்க முடியவில்லை. அதனால் தன் சகோதரியின் விருப்பப்படி ஒரு பிள்ளையை அவளுடன் அனுப்பிவைக்க நினைக்கின்றாள். அதனைத் தடுப்பதற்கு தன் கடமையினின்றும் தவறிய பாரதிக்கு எந்த உரிமையும் கிடையாது. ஆனாலும் பாரதியிடம் இதுபற்றிப் பேசப் பயப்படுகிறாள். தன் குடும்பம் பற்றிய எந்த முடிவும் தனித்தெடுக்கவோ பாரதியுடன் பேசவோ முடியாத நிலை அவளுக்கு.

பாரதி பிராமணரல்லாதோரை அழைத்து வந்து பூநூலிட்டு, பிராமணராக்கி, பிராமணியத்துக்கு எதிரான கிளர்ச்சியைத் தூண்டி விடுகிறான். செல்லம்மாவோ அது அடாவடித்தனம், தெய்வகுற்றம் என எண்ணிப்பயப்படுகிறாள். பாரதியை தடுக்க முடியவில்லை. தனக்குள்ளே அழுது தீர்க்கிறாள். பாரதி தான்நினைத்ததை செய்து விட்டுப் போய் விடுவான். அக்கம்பக்கத்தார், கேள்விப்படுவோர் பாரதியுடன் பேசத்துணிவற்று செல்லம்மாவை நையப்புடைத்திருப்பர். படத்தில் காண்பவற்றிலிருந்து காட்டப்படாத பல விடயங்களைக் கற்பனை பண்ண முடிகிறது. இதுவே கலைப்படைப்பின் வெற்றியும்.

கடையத்திலிருந்து பிராமணர்களால் துரத்தப்பட்ட பாரதிக்கும் உணவு போய்ச் சேராத போது இடையர்களுடன் இணைந்து உண்டு தன் வயிற்றை நிரப்பிக் கொள்கிறான். வீட்டில் இருக்கும் செல்லம்மா தன்னை நினைத்து சாப்பிடாமல் இருப்பாளே என்ற எண்ணம் தோன்ற வில்லை அவனுக்கு. செல்லம்மாவோ கணவனை நினைத்து உண்ண மனமற்றுப் போகிறாள். இறுதியில்


படிப்பகம்

பிள்ளைகளின் நலன்கருதி வீட்டை விட்டுப் போகிறாள் செல்லம்மா. சிறிது காலத்தில் முழுமையாக துவண்டுபோகிறான் பாரதி. செல்லம்மா இல்லாது இனி எதுவும் ஏலாது என்ற கட்டத்துக்கு வருகிறான்.

அப்போது கூறுகிறான் "செல்லம்மா அடிக்கடி என்னைத் திட்டினாலும் அவள் இல்லாமல் முடியாது" என்கிறான். ஏன் திட்ட வேண்டி வந்தது என்பதை எந்தக் கட்டத்திலும் பாரதி உணரவில்லை. அவள் மீதே குறைகாண்கிறான். செல்லம்மா, ஒரு நல்ல துணை வியாக, மனைவியாக பாரதிக்கு ஏற்ப இருந்துள்ளாள் என்பது பாரதி செல்லம்மா போன பின்பு இயங்கமறுத்துக் கிடந்ததே நல்ல சாட்சியம். தன் பிள்ளையின் திருமணத்திற்குக் கூட எல்லோரையும் எதிர்த்து கணவனைத் தேடிச்சென்று கூட்டிவருகிறாள் செல்லம்மா. பாரதி செல்லம்மாவை திருமணம் முடித்து இரண்டு பெண் பிள்ளைகளை பெற்ற பின்பும் கூட எந்த பொறுப்புணர்வும் இல்லாதிருக்கிறான். கணவன் மனைவி இரண்டு குழந்தைகள் என வாழ்வது கண்டு அவர்கள் உறவு நிறைவாயுள்ளது என கூறமுடியாது. இப்படத்தில் ஊகிக்கும் விடயம் அதிகமாயுள்ளது.

பாரதி முதன்முதலாக அன்றிபெசாற் அம்மையாரின் உப தேசத்துடன் ஆணுக்கு சமனாக பெண்ணை கருதுகிறான். பெண் விடுதலைக்காக குரல் கொடுத்திருந்தான், போராடினான். ஆனால் தன்னையே முழு உலகமாக நினைத்து வாழும் தன் மனைவிக்கு தான் செய்யும் வன்முறையை பற்றி சிந்திக்க நேரமிருக்கவில்லை. இவ்விடத்தில் பாரதி எவ்வளவு தூரம் பெண் விடுதலையை விளங்கிச் செயற்பட்டார் என்றே நினைக்கத் தோன்றுகிறது.

www.padippakam.com

# ஒற்றுமை ஓங்க

தே. அருட்கவிதா

ஒன்று பட்டால்
உண்டு வாழ்வு
உனக்கேன் தனிவாழ்வு

ஒற்றுமையே சிறந்தது
உணர்ந்தே வாழ்ந்திடு
இணைந்தே செயற்படு
ஒன்றிணைந்தே குரல்கொடு
ஓங்கிடும் உன் பலம்;

எம்மாலும் எல்லாம்
முடியும் என்றே
எல்லோரையும் சேர்த்திடு
ஆளுமையும், ஆற்றலும்
ஆங்காங்கே கிடக்கிறது
அனைத்தையும் அணைத்திடு
அங்கே வரும் ஒற்றுமை

மற்றவர் கதை கேட்டு - நீ
கலங்கிடாதே - உன்
காலங்கள் யாவும்
காவியத்தில் முடியும்
என்பதை மறந்திடாதே

திண்டாட்டம் வரும்போது
தீர்த்திடுவார் பலர் சேர்ந்து
பலம் கொண்ட மாந்தர்க்கு
பூமியிலே பயனுண்டு
ஒற்றுமையின் கீதத்தை
உரத்தே கூறிடு
ஓங்கியே வளர்வாய்
ஓராயிரம் நன்மைகள்
உனக்குமுண்டு
உன்னால் எழக்கும் உண்டு.

படிப்பகம்

www.padippakam.com

# பெண்கள் படைப்பாக்கம் பற்றிய எனது நோக்கு

ப. பரமேஸ்வரி

படைப்புக்களில் பெண்கள் பற்றிக்கூறும் படைப்புக்கள் பெரும் பாலும் ஆண்களினால் எழுதப்படுவதால் பெண்களது உணர்வுகள் சரியான முறையில் வெளிப்படுத்தப்படவில்லை என்றதொரு குற்றச் சாட்டு எம்மத்தியில் இருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. பெண்கள் பற்றிய படைப்புக்களைப் பெண்கள் படைக்கும் போதுதான் உண்மையான உணர்வு பூர்வமாக அப்படைப்பாக்கம் காணப்படும். ஆனால் இதனை உணர்ந்து கொண்ட பெண் படைப்பாளிகள் கூட தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்த முன்வராமை பற்றி சிந்திக்க வேண்டியதாய் உள்ளது.

பெண்களது காதல் சம்பந்தப்பட்ட விடயங்கள் பெண்கவிஞர் களால் வெளிப்படுத்தப்பட்டபோதும், ஆண்கள் ஆண்களது காதல் உணர்வுகளை வெளிப்படுத்தும் படைப்புக்களோடு ஒப்பிடும் போது பெரியதொரு இடைவெளியைக் காண முடியும். பெண்கள் தங்கள் உணர்வுகள் பற்றிக் கதைத்தல் ஒழுக்கக் கேடானது, ஆண்கள் எத்தனை பெண்களையும் காதலிக்கலாம், விருப்பம் கேட்கலாம். ஆனால் இதனை ஒரு பெண் செய்யும் போது "இவளுக்கென்ன துணிச்சல், வெட்கமில்லாதவள்" என்று கூறுவதைத்தான் நான் எம்மவர் மத்தியில் பார்த்திருக்கின்றேன். இந்த வகையான ஒரு நிலைப்பாட்டைத்தான் பெண்களது படைப்புக்களுக்கும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டி உள்ளது. இத்தகைய காரணங்கள் தான் பெண்கள் தங்கள் சுய உணர்வுகளை வெளிக்காட்டத் தயங்குவதற்கு முக்கிய காரணமாகும்.

எம் சமூகத்தில் ஒரு பெண் திருமணத்தின் முன் வேறுயாரை யோ காதலித்திருந்தால் அப்பழைய காதல் குற்றமாகக் கருதப்பட்டு நாளாந்தம் அந்தப் பெண் கணவனால் துன்புறுத்தப்பட்டு வருவதை பெரும்பாலான குடும்பங்களில் காணக்கூடியதாக உள்ளது. அத்துடன் சமூகத்தவரும் இத்தகைய ஒரு நிலையை இழிவாகவே நோக்கும் ஒரு போக்கும் காணப்படுகின்றது. இந்தச் சூழ்நிலையில் பெண்கள் உணர்வுகள் எந்தளவு சாத்தியம் என யோசிக்கவேண்டியுள்ளது.

பெரும்பாலான பெற்றோர்கள் தங்கள் பெண்பிள்ளைகளை

படிப்பகம்

www.padippakam.com

அடக்க ஒடுக்கமாய் வளர்த்து எந்தவிதக் கஸ்ரமுமில்லாத ஒரு வாழ்க் கையை அமைத்துக் கொடுக்கக் கூடிய ஒரு தரத்தினை உருவாக் குகிறோம் என நினைத்து அவர்களை ஒரு வரையறைக்குள்ளேயே வைத்திருப்பர். இந்த நிலையில் பெண்கள் தங்கள் உண்மையான படைப்புக்களை வெளிக் கொணரும் போது குடும்பத்தாரை மீற வேண்டும். பின் சமூகத்தவரை மீற வேண்டும். இப்படியான தடைகளைத் தாண்டு வதற்கு பெரும்பாலான பெண்களால் முடிவதில்லை. மனிதர் ஓர் சமூகப்பிராணி அதனால் சமூகத்தில் இருந்து விலகி வாழ்தல் முடியாத காரியம். இத்தகைய போக்குகளினாலும் பெண்களது படைப்புக்க ளில் ஒரு பின் தங்கிய போக்குக் காணப்படுகின்றது.

நான் சில விடயங்களை டயறியில் எழுதும் போது கூட (எனது மனச்சாட்சியின்படி என்னில் ஒரு பிழையும் இல்லாத சந்தர்ப் பங்களில் கூட) சில விடயங்களை குறியீடு படுத்தித்தான் எழுதுவேன். காரணம் ஏனையவருக்கு விளங்கி விட்டால் ஏதும் பிரச்சினைகள் மேற்கிளம்ப வழிவகுக்குமோ என்ற பயம்தான்.

ஒரு சோகப்பாட்டை பாடினாலே வாழ்க்கையில் என்ன தோல்வி காதல் தோல்வியா? என்ற ஏளனக் கேள்விகள் கேட்பவர் மத்தியில், பெண்கள் தங்களது உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ளப் பயப்படுவதில் பிழை ஒன்றும் இல்லை. இதனை ஆண்கள் மட்டும் தான் பிழையாக நோக்குகிறார்கள் என்று கூறமுடியாது. சில பெண்களும் இப்படி நகைப்பதன் மூலம் தங்களை நல்லவர்கள் என்று காட்டிக் கொள்ளலாம் என்று நினைக்கின்றார்கள் போலும்.

எனக்குச் சிலவேளை ஏதாவது எழுத வேண்டும் போல தோன்றும். ஆனாலும் எழுதமாட்டேன். அப்படி சில நேரங்களில் எழுதினாலும் அதனை உடனே கிழித்து விடுவேன். ஆனால் எனது நிலை சம்பந்தப்பட்டு வரும் கவிதைகளையோ, கதைகளையோ, கட்டுரை களையோ கண்டால், அதனை ஒவ்வொரு வரியாக ஆவலுடன் படிப்பேன். இது ஏன் என்று சிந்திக்கும் போது எனது உணர்வுகளை நான் எழுதியதாக மற்றவருக்குத் தெரியப்படுத்தக் கூடாது என்ற சுயநலம் தான் என்று புரிகின்றது.

இப்படியான காரணங்களால் பெண்களது ஆக்கங்கள் தனிக்கைகளுடன் தான் வெளிவருவதைக் காணக்கூடியதாக உள்ளது. இதனை விடுத்து ஆண்கள் புரிந்து கொள்ள முடியாத விடயங்கள் பெண்களின் அனுபவங்களினூடு வரும் போதுதான் பெண்கள் பற்றிய உண்மையான படைப்பாக்கங்களை நாம் கண்டு கொள்ளலாம்.

படிப்பகம்

www.padippakam.com

# பெண்

ஆங்கிலம்: Jamaica Kincaid
தமிழ் : அம்ரிதா ஏயெம்.

ஒரு அன்பு நிறைந்த தாய்க்கும், தச்சுவேலை செய்யும் தகப்பனுக்கும் மகளாக 1949ம் ஆண்டு மேற்கிந்தியத் தீவுகளின் அண்டிகுவாவில் Jamaica Kincaid பிறந்தார். ஆரம்பக்கல்வியை அண்டிகுவாவிலும் பின்னர் நியுஹம்சயரிலும் தொடர்ந்தார். அங்கு கல்வியில் அவரால் வெற்றி பெற முடியவில்லை. தன் சொந்த முயற்சியாலேயே கல்வியினைக் கற்றார். புகழ்பெற்ற இதழ்களில் தனது புனைவுகளை 1974ம் ஆண்டு வெளியிடத் தொடங்கி, நியுயோர்க்கில் அலுவலக எழுத்தாளராக 1978ல் மாறினார். அவர் அலன்கோவன் என்ற இசைத்தொகுப்பாளரை திருமணம் முடித்து, அமெரிக்கப் பிரஜையாக மாறி, நியுயோர்க்கில் வாழ்ந்தாலும், அவருடைய எல்லாப் படைப்புக் களும் அண்டிக்குவா வேர்களைக் கொண்டுதான் படைக்கப்பட்டுள்ளன. "அமெரிக்கா நான், நானாக இருக்க இடம் தந்தது. ஆனால் அந்த நான் எங்கேயோ வேறு இடத்தில் எப்போதோ உருவாக்கப்பட்டு விட்டது" என்று கூறுகிறார். நதிக்கு அடியில் (At the Bottom of he River (1983)), என்ற சிறுகதைத் தொகுப்பான இவரின் முதல் நூல், அமெரிக்க கலை இலக்கிய கழக Morton Davwen Zable என்ற பரிசை வென்றது. அன்னிஜோன் (Anne John (1985)), வளர்ந்து வரும் ஒரு தீவுப்புறப் பெண் பற்றிய தொடரான கதைகளைக் கொண்டது. "ஒரு சிறிய இடம்" (A Small Place (1988)). கடூரமான காலனிய எதிர்ப்புக் கட்டுரைகளைக் கொண்டது. 'லூஸி (Lucy (1990)), என்ற இவரது முதலாவது நாவல், வடஅமெரிக்காவிற்கு வீட்டு வேலைகள் செய்ய கடல் கடந்து படகில் வந்த ஒரு பெண் பற்றியது.

பெண் (Girl (1978)) என்ற இந்தக் கதை இருதுருவ மனப் பாங்குகளில் நிற்கும் ஒரு தாய்க்கும் மகளுக்கும் இடையிலான கதையாடலா? உலகியல் பாலியல் (Sexuality) வகிக்கும் பாத்திரத் தின் பங்கு பற்றிய கதையாடலா? பலவகைப்பட்ட, வலிந்தோ அல்லது வலியாமலோ உருவாக்கப்பட்ட ஆண், பெண் உறவுகளில் களம் கொள்ளும் கதையாடலா? இது ஒரு தனிப்பந்தியில் எழுதப் பட்டிருந்தும், பாத்திரம் / பாத்திரங்கள் தனக்குத் தானே பேசிக் கொள்ளும் வகையானதோ அல்லது ஒரே நேரத்தில் சம்பவங்கள் கோர்வையாக நடக்கும் வகையினதோ இல்லாது, வாசிப்போர்களுக்கு தாக்கத்தை ஏற்படுத்தும், வித்தியாசமான கதை சொல்லி முறைமை யைக் கொண்ட கதையாடலா? சில விசயங்களை திரும்பத்திரும்பச் சொல்வதும், சில மறைமுக, இருக்கும் அல்லது இல்லாத அர்த்தங்க ளுக்கான கற்பிதங்களை உருவாக்கச் செய்யும் கதையாடலா? என்பதை நீங்களே தீர்மானியுங்கள்

www.padippakam.com

திங்கட்கிழமை வெள்ளை உடுப்புகளைக் கழுவி கற்கு வியலின் மேல்போடு; செவ்வாய்கிழமை வர்ண உடுப்புக்களை கழுவி கயிற்றின் மேல் காயப்போடு; கொதிக்கும் வெயிலில் வெறுந் தலையுடன் போகாதே; தர்ப்பூசனி நறுக்குகளை கொதிக்கும் எண்ணெயில் போட்டுப் பொரி; கழற்றிப் போட்ட உனது சின்னச் சின்ன ஆடைகளை உடனே ஊறப் போடு; அழகான சட்டையொன்று தைத்துக்கொள்ள பருத்தி வாங்கும் போது, அது பிசின் இல்லாதது என்று உறுதிப்படுத்து, ஏனெனில் பிசினானது உடுப்பைக் கழுவியதற் குப்பின் தும்பு கிளம்பச் செய்யும்; கறியாக்குவதற்கு முன் உப்புக்கரு வாட்டை இரவு பூராக ஊறவிடு; நீ ஞாயிற்றுக்கிழமை பாடசாலை யில் "பென்னா" பாடுகிறாய் என்பது உண்மையா? எப்போதும் மற்றவர்களுக்கு அருவருப்பூட்டாமல் உனது சாப்பாட்டைச் சாப்பிடு; ஞாயிற்றுக்கிழமைகளில் அசூசையானவள் போலன்றி பெண் பிள்ளை மாதிரி நட, நீ இப்போது மோசமாகிக் கொண்டேயிருக் கிறாய், ஞாயிற்றுக்கிழமை பாடசாலையில் "பென்னா" பாடாதே, திருட்டுப் பையன்களுடன் பேசாதே, போகும் வழிதெரியாது தடுமாறினாலும் திசைகூடக் காட்டாதே; பூச்சிகளும், கொசுக்களும் உன்னைத் தொடரப் போவதால் வீதிகளில் பழங்களைச் சாப்பிடாதே; "நான் ஒருபோதும் ஞாயிற்றுக்கிழமைகளில் 'பென்னா' பாட மாட்டேன். அதுவும் ஞாயிற்றுக்கிழமை பாடசாலையில் ஒருபோதும் பாடமாட்டேன்"; இப்படித்தான் நீ பொத்தான் கட்டவேண்டும், நீ இப்போதுதான் கட்டிவிட்ட பொத்தான்களுக்கு இப்படித்தான் ஓட்டைகளை போடு; நீ அசூசையானவள் மாதிரி கீழிருந்து மடிய வரும் துணியை பார்த்துக் கொண்டிருக்கையில் அந்தத் துணியை மடிய விடாமல் அசூசையானவள் மாதிரி முயற் சிகள் எடுத்தும், முடியாது போன அந்தத் துணியை இப்படித்தான் நீ மடித்துத்தை; நீ வரவர மோசமாகிக் கொண்டு போவதால்தான் இப்படியெல்லாம் நடந்து கொள்கிறாய் என்று எனக்குத் தெரியும்; நீ இப்டித்தான் மடிப்புக்கள் இல்லாதவாறு உனது தந்தையின் காக்கிச்சட்டையை ஸ்திரிபோடு; நீ இப்படித்தான் மடிப்புக்கள் இல்லாதவாறு உனது தந்தையின் கீழாடைகளை ஸ்திரிபோடு; வெண்டிச் செடிகள் செவ்வெறும்புகளை கவர்ந்து வைத்திருக்கு மாதலால் நீ இப்படித்தான் கொல்லைப் புறத்தின் கொஞ்சத் தூரத்திற்கு அப்பால் வெண்டிச் செடிகளை வளர்; நீ சட்டிக் கறணை வளர்க்கும் போது செடிகள் நிறைய தண்ணீர் பெறுகின்றதா என்று பார் இல்லா விட்டால் சட்டிக்கரணையைச் சாப்பிடும் போது தொண்டையில் அரிப்பு வருகிறதா என்று உறுதி செய்; நீ இப்படித் தான் வீட்டு மூலையைக் கூட்ட வேண்டும்; நீ இப்படித்தான் முழு வீட்டையும்

www.padippakam.com

கூட்ட வேண்டும்; நீ இப்படித்தான் வீட்டு முற்றத்தைக் கூட்டவேண்டும். மிகவும் விரும்பாத ஆட்களைப் பார்த்து நீ இப்படித்தான் சிரிக்க வேண்டும்; ஒரு போதுமே விரும்பாத ஆட்களைப் பார்த்து இப்படித்தான் நீ சிரிக்க வேண்டும், மிகவும் நேசிக்கும் ஆட்களைப் பார்த்து நீ இப்படித்தான் சிரிக்க வேண்டும், இப்படித்தான் தேனீர் பருகுவதற்கு மேசையை நீ ஒழுங்கு பண்ணு. இப்படித்தான் நீ இரவுச்சாப்பாட்டிற்கு மேசையை ஒழுங்கு பண்ணு. இப்டித்தான் நீ முக்கிய விருந்தாளிக் கான இரவுச்சாப்பாட்டிற்கு மேசையை ஒழுங்கு பண்ணு. இப்படித்தான் நீ மத்தியானச் சாப்பாட்டிற்கு மேசையை ஒழுங்கு பண்ணு. இப்படித்தான் நீ காலைச்சாப்பாட்டிற்கு மேசையை ஒழுங்கு பண்ணு. உன்னை நன்கு யாரென்று தெரியாத அந்நிய ஆண்களுக்கு முன்னால் இப்படித்தான் நீ நடந்து கொள். ஏற்கனவே உன்னை எச்சரித்து விட்டேன்; இப்படி நீ நடந்து கொண்டால்தான் மற்றவர்கள் உன்னை கூடாத பெண்ணைப் பார்ப்பது மாதிரி பார்க்க மாட்டார்கள்; உன்னுடைய சொந்த துப்பலாயிருந்தாலும்; ஒவ்வொருநாளும் துப்பரவாயிருப்பதில் உறுதியாக இரு; குண்டுவிளையாட குந்தியிருக் காதே; நீ பையனல்ல என்று தெரிந்துகொள்; மற்றவர்களின் பூக்களைப் பறிக்காதே; நீ சிலவற்றை பிடித்துக் கொள்ள நேரிடும்; கறுப்புப் பட்சிகளை நோக்கி கற்களை வீசாதே; ஏனெனில் அவை கறுப்புப் பட்சிகளாக எந்நேரமும் இருக்காது; இப்படித்தான் நீ வட்டிலப்பம் செய்; இப்படித்தான் நீ 'டுகோனா' செய்; இப்படித்தான் நீ மிளகுக் கசாயம் சட்டியில் வை; இப்படித்தான் தடுமலுக்கு நல்ல மருந்து செய்; இப்படித்தான் நீ குழந்தைகள் குழந்தைகளாக வெளிவருவதற்கு முன்னே அவைகளை தூக்கி வீச நல்ல மருந்து செய்; இப்படித்தான் நீ மீன் பிடி; இப்படித்தான் நீ அந்த மீனை விரும்பா விட்டால் தூக்கி எறி- அப்படிச் செய்தால் உனக்கு எந்தப் பழியும் வரப்போவதில்லை; இப்படித்தான் நீ ஆணை வதைக்க வேண்டும்; இப்படித்தான் ஆண் உன்னை வதைப்பான்; இப்படித்தான் நீ ஆணை நேசிக்க வேண்டும். இந்த வழியில் பிரயோசனம் இல்லையென்றால், வேறு வழிகளைப்பார். அவைகளும் பிரயோசனம் இல்லாவிட்டால் விரக்தியடையும் அளவுக்கு கலங்கிப் 'போகாதே; இப்படித்தான் வானத்தை நோக்கி துப்ப வேண்டும்- நீ நினைத்தபடி; இப்படித்தான் நீ விரைவாக நகர வேண்டும். அப்போது தான் நீ துப்பிய எச்சில் உன்மீது விழாது; இப்படித்தான் நீ வரவுக்குள்ளே செலவு செய்ய வேண்டும்; எப்போதும் புதிதா, பழையதா என உறுதி செய்ய பாணை நசித்துப் பார்; ஆனால் பாண்காரன் தனக்கு முன்னாலேயே பாணை நசித்துப் பார்க்க விடா விட்டால் நான் என்ன செய்ய? எல்லாவற்றுக்கும் பிறகு, பாண்காரன் பாணுக்கருகில் அனுமதிக்காத வகையான பெண்ணாக இருக்கத்தான் நீ நினைக்கிறாயா?.

www.padippakam.com

# ஒரு மனித உரிமைப் போராட்டம்

மலையாளம்: சி.எஸ். சந்திரிகா,
தமிழில்: தெ. கிருபாகரன்

சி.எஸ். சந்திரிகா 1967ம் ஆண்டு, கேரளா மாநிலத்தில் பிறந்தார்., கள்ளிக்கோட்டை பல்கலைக்கழகத்தில் தாவரவியலில் இளம் விஞ்ஞானமானி (B.Sc) பட்டத்தையும், அதே பல்கலைக்கழகத்தில் மலையாள இலக்கியத்தில் முதுகலைமானி (M.A) பட்டத்தையும் பெற்ற இவர், தனது கலாநிதிப் பட்டத்திற்காக அதே பல்கலைக்கழகத்தின் நாடகக் கல்லூரியில் மலையாள நாடக அரங்கில் பெண்களின் இடஒதுக்கீடும், பிரதிநிதித்துவமும் என்பதின் கீழ் தனது ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறார்.

**"தனது சொந்த உடலையே சொந்தங் கொண்டாடவோ கட்டுப் படுத்தவோ முடியாத எந்த ஒரு பெண்ணும் தான் சுதந்திரமான வள் எனக் கூற முடியாது".**

**மாகிரட் சாஞ்சர்**

[இந்தியாவில் சமத்துவத்திற்கான இயக்கம் பலம் வாய்ந்ததாகவும் துடிப்புள்ளதாகவும் மாறியுள்ளது. எனினும் வல்லுறவு துஷ்பிரயோகம் மற்றும் உரிமை மறுப்பு என்பன தேவி / மாதா வார்ப்பு மாதிரியுடன் கூடவே நிலைத் திருக்கின்றன].

20ம் நூற்றாண்டின் மிகவும் குறிப்பிடத்தக்க அம்சம் பெண்கள் இயக்கத்தின் எழுச்சியாகும். இறுதிச் சில தசாப்தங்களில் பெண்களுக்கெதிரான அடக்கு முறைகள் பற்றிய விழிப்பு உலகலாவிய முறையில் கூர்மையடைந்ததுடன் சமத்துவமின்மை மற்றும் பெண்களுக்கெதிரான அநீதி என்பவற்றை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான வழிவகைகள் பற்றிய ஆர்வமும் முளைவிட்டது.

வெவ்வேறு பெண்கள் இயக்கங்களின் தோற்றம் காரணமாக பெண்கள் பற்றிய பல்வேறு பிரச்சினைகள் முக்கியத்துவப்படுத்தப் பட்டன. பெண்கள் இயக்கம் ஒரு பிடித்தானதாக இருக்கவில்லை. அதில் பல பிரிவுகள் காணப்படுகின்றன. பல வித்தியாசமான கொள்கைகள் பல்வேறுபட்ட நோக்குகள் அணுகுமுறைகள் மற்றும் நடவடிக்கைப் பாணிகள் போன்றவை இவ்வியக்கங்களுள் காணப்படுகின்றன. மேலும் அவற்றில் பிரதான ஈடுபாடு கூட ஒரே மாதிரி

www.padippakam.com

யானதாக இருப்பதில்லை. எப்படியாயினும் பெண்களின் ஒடுக்கப்பட்ட நிலை என்ற உண்மையைப் பொறுத்தமட்டில் அவை எல்லாம் இணக்கங்கொண்டுள்ளன. ஆரம்பகாலத்தில் எழுப்பப்பட்ட முக்கிய பிரச்சினைகளெல்லாம் பெண்களின் கல்வி, சமயாசார வழக்கங்கள், சமூக நம்பிக்கைகள் மற்றும் மூட நம்பிக்கைகள் பற்றியதாக இருந்தன. மேலும் குழந்தைத்திருமணம், சாதிமுறைமை, தேவதாசி முறைமை, பர்தா அணிதல், சீதனம், பலபுருஷமணம், பலதார மணம், மற்றும் பெண் சிசுக்கொலை போன்ற சமூகக் கேடுகளுக் கெதிராகக் குரல் எழுப்பியதன் மூலமாகவே பெண்கள் சமூக இயக்கத்தினுள் பிரவேசித்தனர். இவ்வியக்கத்தில் பெண்கள் அணியணியாகத் திரளக் காரணமாயிருந்த பெண்ணியக்க முன்னோடிகளில் சாவித்திரி பாய்பூலே, ரேணுகாராய், சுசேத்தா கிரிப்பாலினி, ராமாபாய் மற்றும் சரோஜினி நாயுடு போன்றோர் முக்கியமானவர் களாவர். இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபட்ட பெண்கள் வகுப்பு, சாதி மற்றும் சமயச் சலுகைகளை அனுபவித்தனர் என்ற விடயத்தை பெண்கள் இயக்கம் பற்றி நாம் நோக்கும்போது கருத்திற் கொள்ள வேண்டும்.

பெண்களுக்கான சீர்திருத்தக்கல்வி என்பது எடுத்துக் காட்டான ஒரு விடயமாகும்.19ம் நூற்றாண்டில் உயர் சாதியையும் மத்திய உயர்தர வகுப்புக்களையும் சேர்ந்த பெண்கள்தான் இயக்கத்தின் நன்மை பெறுனர்களாகவும் அதன் தலைவர்களாகவும் இருந்தனர். 20ம் நூற்றாண்டின் முதல் தசாப்தத்தில் இப்பெண்கள் சமூகசீர்திருத்தப் பிரச்சாரங்களை முன்னெடுத்தனர். அதாவது இந்த ஆரம்ப காலக் கட்டத்தில் பெண்கள் பெற்றுக்கொள்ளும் கல்வியானது பின் ஏற்படக் கூடிய எந்தவொரு சமூகமாற்றத்திற்குமான ஒரு அடித்தளத்தை அவசியம் அமைக்கக்கூடியது என்பது அவர்கள் கருத்தாகும்.

இப்பிரச்சினையின் சிக்கற்றதன்மையைக் கோடிட்டுக் காட்டிய விடயம் இப்பிரச்சினை பற்றி ஆண்கள் கொண்டிருந்த மனப்பாங் கேயன்றி வேறில்லை. அத்தகையதொரு ஆணின் கருத்துப்படி பெண் கல்வியானது அவர்களுக்கேயுரிய உடைமைகளான பொறுமை, கருணை, தன்னல மறுத்தல், கணவனைப் போஷித்தல் மற்றும் குழந்தை பெறல் என்பவற்றின் வரையறைக்குட்பட்டதாக இருக்க வேண்டும் என்பதாகும். கல்வி கற்ற பெண்ணானவள் ஆணாதிக்கச் சமூக அமைப்புக்கும் முதலாளித்துவ மற்றும் மையக்குடும்பக் கட்டமைப் புக்கும் அமைய் இருக்கவேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. ஆண்களும் இதையே இலட்சியமாகக் கண்டனர். பெண் இயக்கத்திலீடுபட்ட பெண்களும் இவ்விழுமியச் சமத்துவமின்மையைக்

www.padippakam.com

காணக் கூடிய தாய் இருந்தது. அவர்கள் இவ் அநீதியைக் கண்டித் ததுடன் சமூகத்தில் பெண்களின் இடம் பற்றி மீள் வரைவிலக்கணம் செய்தனர். கல்வியென்பது ஒருவர் சுய முன்னேற்றம் அடைவதற்கும் உள்ளூர் மற்றும் தேசிய மட்டங்களில் சமூக அரசியல் நடவடிக் கைகளில் ஈடுபட்டிருப்பதற்கும் மற்றும் வேலை வாய்ப்பிற்குரியது என்ற கருத்தினை அவர்கள் தெளிவாகக் கொண்டிருந்தனர். கல்வி பெண்களைப் பேச வைத்ததுடன் அவர்களுக்கு நம்பிக்கையையும் ஊட்டியது. சாவித்திரி பாய் பூலே, பண்டிட் ராம்பாய், பேகம் ருக்கியா சக்வத் மற்றும் சுப்புலக்ஷ்மி போன்ற பலர் பெண்களுக்கான பாடசாலைகளை உருவாக்கினர். வேறும் பலர் பெண்களின் பிரச்சினைகளைக் கோட்டிட்டுக் காட்டும் பிரசுரங்களை ஆரம்பித்தனர்.

பெண்கள் தங்களுடைய இலட்சியங்கள் மற்றும் கருத் துக்கள் பற்றி வியாக்கியானஞ் செய்ய ஆரம்பித்ததுடன் ஆண் சகபாடிகள் பற்றிச் சுதந்திரமாகக் கண்டனம் செய்ய தொடங்கியதன் காரணமாகப் பல்வேறு பெண்கள் சங்கங்கள் உருவாகத் தொடங்கின.

பெண்களைப் பூஜிக்கத்தக்கவர்களாகக் கருதிய ஆண்கள் சரளாதேவி சௌதாரணியினால் கடுமையாக விமர்சிக்கப்பட்டனர். அதாவது "ஆண்கள் பெண்பாலாரை வெற்றி கொண்ட அவர்களின் சமத்துவம், கல்வி மற்றும் விடுதலை என்பவற்றைக் கட்டுப்படுத்தும் வீரர்களாகத் தங்களை விளம்பரப்படுத்திக் கொள்கிறார்கள். இத்தகைய ஆண்கள் "மனு"வின் நிழலில் வாழ்ந்து கொண்டிருப்ப துடன் பெண்களைச் சுதந்திரமாக இயங்க விடுகிறார்களில்லை" எனக் கூறினார்.

1910ம் ஆண்டில்தான் "பாரத ஸ்தீரி மகா மண்டல்" எனும் அமைப்பின் முதலாவது கூட்டம் ஐதராபாத்தில் நடைபெற்றது. இவ்வமைப்பின் கிளைகள் லாகூர், அலகாபாத், டில்லி, கராச்சி, அமிதசரசு, ஐதராபாத், தான்பூர் பங்குரா, ஹசாலி பாக், மிட்னாப்பூர் மற்றும் கல்கத்தா போன்ற இடங்களில் ஆரம்பிக்கப்பட்டன. ஆண்க ளின் ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடுவதன் மூலம் மட்டுமே பெண்கள் அடக்கு முறையிலிருந்து தங்களைக் காத்துக்கொள்ள முடியும் என்று சரளாதேவி தனது கட்டுரையில் வெளிப்படுத்தினார்.

1917 இற்கும் 1927க்கும் இடைப்பட்ட காலத்தில் வேறு மூன்று சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன. அவையாவன 'பெண்களின் இந்திய சங்கம்', 'இந்தியப்பெண்களின் தேசிய சபை', மற்றும்

படிப்பகம்

www.padippakam.com

'அகில இந்திய பெண்கள் மாநாடு'. அன்னிபெசன்ற், சரோஜினி நாயுடு, மற்றும் மாகிரட் கசின் என்போர் மேலும் எட்டுப் பெண்களுடன் சேர்ந்து ஒரு தூதுக்குழுவை உருவாக்கி பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையுடன் டில்லியில் அப்போது இருந்த மொன்டகியூவை அணுகினர். 1917 இல் கல்கத்தாவில் பெண்களின் பிரதிநிதிகள் தேசிய இயக்கத்தில் தங்களுக்கும் ஒரு இடம் தருமாறு கோரிக்கை விடுத்தனர். பெண் தலைவர்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகளில் ஒன்று என்னவெனில் அவர்களைப் பெருமைக்குரிய "தாய்", "தேவி" பாத்திரங்களில் சித்தரிக்க முயலும் நாட்டத்தில் பிரதிபலிக்கும் ஒன்றுக்கும் உதவாத நடை முறைச் சாத்தியமற்ற மனப்படிமமாகும். சீர்த்திருத்த மற்றும் காந்தீயக் கொள்கைகளிலும் கூட இந்தியப் பெண்மை மற்றும் "ஸ்திரீதர்மம்" பற்றிய பழமை பேணும் தன்மையுடைய உயர்சாதி இந்து விழுமியங்கள் இழையோடிக் கிடந்தன. ஒரு குடும்பத்தினுள் பெண்கள் வகிக்கும் இடம் பற்றிய காந்தீய எண்ணக்கரு இந்து ஆணாதிக்க முறைமையில் ஆழ வேரூன்றி கிடந்தது. இந்தியர்கள் சம்பந்தமான "தன்னைவதைத்தலாகிய பலம்" எனும் கொள்கை மிகவும் உறுதியாக நிலை நிறுத்தப்பட்டது.

இதில் அவலம் என்னவெனில் அன்னிபெசன்ட் காமா அம்மையார் மற்றும் சரோஜினி நாயுடு போன்றோர் கூட இத்தகைய தொரு மனப் படிமத்தை வைத்துப் போஷித்தனர். இத்தகையதொரு படிமம்தான் சரோஜினி நாயுடுவுக்கும் கமலாதேவி சட்டோபத்தியாயவுக்கும் தேசிய இயக்கத்துள் அங்கீகாரமளித்தது. அக்காலத்துள் உருவாக்கப்பட்ட எல்லாப் பெண்கள் இயக்கங்களிலும் இவ்விழுமியங்கள் காணப்பட்டன. உயர் குலத்தைச் சேர்ந்த பெண்களால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட இத்தகைய சங்கங்கள் 'பிட்டிசம்' அரசியலைப் பின்பற்றினர். அவர்கள் பெண்களின் வாக்குரிமை மற்றும் சட்ட உரிமை பற்றிய விடயங்களில் கவனத்தை ஈர்த்தனரே தவிர தாழ்ந்த குலப் பெண்களின் பிரச்சினைகள் பற்றிய ஈடுபாடு பலமானதாக இருக்கவில்லை. தமிழ் நாட்டில் "பெண்களின் இந்திய சங்கத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தவர்கள் மாகிரட்கசின்ஸ், அன்னி பெசன்ட், மாலதி பட்வார்த்தா, அம்மு சுவாமிநாதன் மற்றும் அம்புஜம்மாள் போன்றோராகும். சமயம், அரசியல், கல்வி மற்றும் பரோபகாரம் போன்ற விடயங்களில் அவர்கள் கவனம் செலுத்தினர். மெஸ்ரிபாய் டாட்டா கோபாலைச் சேர்ந்த டவாகர் பேகம் சாகிப், பரோடா மகாராணி திருவாங்கூர் இளவரசி சேது பார்வதிபாய் மணிபென்சாரா ஆகியோரால் நிர்வகிக்கப்பட்ட


படிப்பகம்

www.padippakam.com

சர்வதேச பெண்கள் சபையின் தேசிய பீடமொன்றும் இருந்தது. 1927இல் ஆரம்பிக்கப்பட்ட ஒரு சமகாலச்சங்கம் 'அகில இந்தியப் பெண்கள் மாநாடு' என்பதாகும். கல்விதான் அதன் ஆரம்பக் குவிமையமாக விருந்தது. 1930 இலிருந்து அது தனது கவனத்தைத் தொழில்,கிராமிய மீள் கட்டமைப்பு தேசிய கைத்தொழில், போதைப்பொருள் துஷ்பிரயோகம், பாட நூல்கள் மற்றும் சாரதாசட்டம் போன்ற விடயங்களை நோக்கித் தன்கவனத்தைத் திருப்பியது. 1941 இல் ஒரு காலாண்டுச் சஞ்சிகையைப் பிரசுரித்ததுடன் 1946இல் நிரந்தர ஆளணியைக் கொண்ட ஒரு அலுவலகமும் நிறுவப்பட்டது.

1920 இலிருந்து நாட்டின் சுதந்திரத்திற்கான தேசிய இயக்கத்தில் பெண்கள் ஆர்வம் காட்டத்தொடங்கினர். சகல தரப்பு மக்களிடமிருந்து ஆதரவைப்பெறுமுகமாக தேசிய இயக்கத்தின் ஆண் தலைவர்கள் ஏழைக்குடியானவர்கள், தொழிலாளர்கள் மற்றும் பெண்கள் சங்கங்களுடன் பிரக்ஞைபூர்வமான தொடர்புகளை ஏற்படுத்தினர். மதுபான எதிர்ப்பு இயக்கத்தின் விதேசிப் பொருட்களை பகிஷ்க ரித்தல் நடவடிக்கை, உப்புச்சத்தியாக்கிரகம் மற்றும் 'வெள்ளையனே வெளியேறு' இயக்கம் போன்றவற்றில் ஈடுபட்ட ஆயிரக்கணக்கான பெண்கள் கைது செய்யப்பட்டுச் சிறை வைக்கப்பட்டனர். 1930களில் பெண்கள் பம்பாயில் பரவலாக மறியல் போராட்டங்களிலும் எதிர்ப்பு அணிகளிலும் பங்கு கொண்டனர். இது ஊடகத்துறையின் கவனத்தைப் பெருமளவு ஈர்த்தது. இந்த ஆர்வ அலை எங்கும் பரவியதால் பெண்கள் பெருமளவில் திரண்டு தெருக்களில் உப்பு விற்றலிலும், சுதேசியப் பொருட்களுக்காகப் பிரச்சாரம் செய்வதிலும், ஈடுபட்டதுடன் வீட்டுக்கு வீடு சென்று "கதர்" விற்பதிலும் ஈடுபட்டனர். வங்காளத்தில் மாணவிகள் இவ்வியக்கத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டதும் அவர்களின் நடவடிக்கைகள் மிகவும் புரட்சிகரமானதாக காணப்பட்டது. லத்திக்கா கோஷின் தலைமைத்துவத்தின் கீழ் உயர்கல்வியில் ஈடுபட்டிருந்த மாணவிகளும் உயர் தொழில்களில் ஈடுபட்டிருந்த பெண்களும் பல துணிகரத் திட்டங்களை முன்னின்று நடத்தினர். கைது செய்யப்படுதலைக் கூடப் பொருட்படுத்தாத எதற்கும் அஞ்சாத மாணவிகள் குழுவொன்றைக் கொண்ட பெண்கள் சத்தியாக்கிரக சமித்தியினை ஊர்மிளாதேவி, ஜோதிர்மாயி கங்கூலி, சாந்தி தாஸ் மற்றும் புரோதிபாதேவி என்போர் தலைமை தாங்கிச் சென்றனர். மேலும் கல்யாணி, சுர்மாமித்ரா, கமலாதாஸ், குப்தா என்போர் மாணவிகளின் பிறிதொரு சங்கத்திற்குப் பொறுப்பாயிருந்த பிரபல மான தலைவர்களாவர். எண்ணிலடங்காத அளவு பெண்கள்

படிப்பகம்

www.padippakam.com

காவல் துறையினரால் கொடூரமான சித்திரவதைக்குள்ளானார்கள். 1933ம் ஆண்டு காலகட்டத்தில் ஏறக்குறைய எல்லாப் பெண் புரட்சியாளர்களும் சிறைவாசம் அனுபவித்திருந்தனர்.

தெற்கில் கேரளாவின் திருவாங்கூர், கொச்சி மற்றும் மலபார் பிரதேசங்களில் போராட்டம் சூடுபிடித்திருந்த காலகட்டத்தில், போராட்டத்திற்குத் தலைமை தாங்கிச் சென்ற சில பிரபலமான தலைவர்களில் ஏ.வி. குட்டிமாலு அம்மா, அக்கம்மா செரியன், மற்றில்டா கல்லன், கமலம், அன்னிமஸ்திரீன், கார்த்தியாயினி அம்மா மற்றும் கொச்சுக் குட்டியம்மா ஆகியோர் குறிப்பிடத்தக் கோராவர். கேரளாவில் போராட்டத்திற்கு மேலும் மெருகூட்டும் வகையில் இடதுசாரிக் குடியானவர் போராட்டமும் வெகு உற்சாகத் துடன் நடைபெற்றுக் கொண்டிருந்தது. மான்ய அமைப்பு முறைக் கெதிராக முதன் முதலில் போராடிய மாநிலங்களில் ஒன்றாகக் கேரளா திகழ்ந்தது. இதில் காளிக்குட்டி ஆசத்தி, கே.தேவியானி, ஆரியபள்ளம் மற்றும் பி.யசோதா போன்ற பெண்கள் தாழ்ந்தசாதி மற்றும் தாழ்ந்த வகுப்பினரைச் சேர்ந்த குடியினப் பெண்களைக் கொண்ட ஒரு துடிப்பான இயக்கத்தை ஒழுங்கமைத்தனர். கேரளாவில் இவ்வியக்கமானது உருவாகி வந்தவேளையில் பல பெண்கள் சிறையிலடைக்கப்பட்டுச் சித்திரவதை செய்யப்பட்டதுடன் பாலியல் துஷ்பிரயோகத்திற்கும் உள்ளாயினர்.

இந்திய - பாகிஸ்தான் பிரிவு மற்றும் சுதந்திரம் பெற்றமை போன்ற நிகழ்வுகளின் களேபரத்தின் பின்னர் இந்தியத் தேசிய காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தது. பெண்கள் இயக்கத்தைப் பொறுத்த மட்டில் மிகச்சிறியளவு வாக்குறுதிகளையே இது அளிக்கக் கூடியதாக இருந்தது. அதிகாரமும் அரசியல் திட்டங்களும் ஆண்களாலேயே கையாளப்பட்டது. பெண்கள் சம்பந்தப்பட்ட விடயங்கள் எதற்கும் உரிய கவனம் செலுத்தப்படவில்லை. 'தலித்' மற்றும் ஆதிவாசியினர் நிலைபற்றிக் கூறித் தெரியவேண்டியதில்லை. 1940ம் வருடத்தொடக் கத்தில் டாக்டர் அம்பேத்கார் நேருவினுடைய அபிவிருத்தி எண்ணக் கரு பற்றி குறிப்பறிந்ததுடன் அதனைக் கண்டனமும் செய்தார். 1947 இன் பின்னர் பெண்களின் குடியுரிமை, 'தலித்' ஆதிவாசிகளின் மற்றும் ஏனைய ஒடுக்கப்பட்ட சமூகங்களின் உரிமைகள் என்பன ஒரு கடும் போக்குள்ள அரசின் கண்காணிப்பின் கீழ் பொறுப்பாக்கப் பட்டது. நாட்டின் வெவ்வேறு பகுதிகளிலும் அரசுக்கெதிரான கலகங்கள் வெடித்தன. குடியாள்கை தொழிலாளர்களின் போராட்டமொன்றை வலியுறுத் தியதுடன் பாரியதொரு மக்கள் போராட்டமொன்றை 'கிசான் சபை'


படிப்பகம்

www.padippakam.com

ஒழுங்கு செய்தது. சுதந்திரத்திற்கு முன்னரான போராட்ட அலை கையூர், கரி வேலூர், தேபகா, வார்லி மற்றும் தெலிங்கானா ஆகிய இடங்களில் அடித்ததன் பின்னர் இரண்டாவது அலையொன்று சுதந்திரத்திற்குப் பிந்திய காலத்தில் இந்தியாவில் அடித்தது. இப்போராட்டத்திற்கு மணிகுந்தலா, ரேணுசக்கரவர்த்தி, கோதாவரி பருலேக்கர், மல்லு சுவராஜ்யம் மற்றும் தெரிந்த தெரியாத இன்னும் பலர் தலைமைத்துவம் வகித்தனர். உண்மையில் பல்லாயிரக்கணக் கான பெண்களின் திடசித்தம் காரணமாக இவ்வியக்கம் ஒரு போராளி இயக்கமாக பரிணமித்தது. மேலும் வங்காளம், ஆந்திரப் பிரதேசம், பீகார் மற்றும் கேரளா போன்ற மானிலங்களில் 60களின் பிற்பகுதியில் தோன்றிய நக்சல் பெண்கள் இயக்கம் கூட உற்சாகத் துடன் தொழிற்பட்டது. அவ்வியக்கம் மாணவர்களிடத்தும் இனமரபுக் குழுக்களிடத்தும் தமது கவனத்தைக் குவித்தபோது 1972இல் ஆயிரக் கணக்கான பெண்கள் கைது செய்யப்பட்டனர். பலர் பொலிசாரினால் சித்திரவதை செய்யப்பட்டு வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டதுடன் கொலையும் செய்யப்பட்டனர். கே.அஜித்தா என்ற பெண் ஆயுட்காலச் சிறைத் தண்டனை பெற்றார்.

குஜராத்தின் 'நவநிர்மாண்' இயக்கம் சுயதொழில் பெண்கள் சங்கம் (SEWA) 'ஷாபதா' இயக்கம் மற்றும் விலைவாசி எதிர்ப்புக் கலகம் போன்ற நடவடிக்கைகளில் பெண்கள் காத்திரமான பங்களிப் புச் செய்ததுடன் தலைமை தாங்கிய இதர மட்டப் போராட்டங்க ளாகும். விலைவாசி எதிர்ப்பு இயக்கத்தின் போது சுமார் 20,000 பெண்கள் மகாராஷ்டிர மானில சட்டசபை உறுப்பினர்களுக்கும் வர்த்தகர்களுக்கும் எதிராக மறியல் போராட்டம் நடாத்தினர். பெண்களின் முக்கியத்துவம் சம்பந்தமான பிரச்சனைகள் கருத்திலெ டுக்கப்படாமையினால் இடது சாரி மற்றும் வலதுசாரிக்கட்சிகள் தோல்வியைத் தழுவியதன் விளைவாக மேற்படி பெண்கள் இயக்கங்கள் வலுவடைந்தமை சுவாரஸ்யமான ஒரு விடயமாகும். இடதுசாரிக் கட்சி முற்போக்குடையதாக இருந்தும் கூட அதனது ஆணாதிக்க விழுமியங்களுடனான கட்டமைப்பின் காரணமாகப் பெண்கள் விரக்தி அடைந்தவர்களாயினர். வகுப்புப் போராட்டத்தி னுள் பால், இனமரபுக்குழுக்கள் மற்றும் சிறுபான்மையினர் சம்பந்த மான விடயங்கள் பற்றி எதுவித அக்கறையும் செலுத்தப்படவில்லை. இத்தகைய கற்கால மனப்பாங்கினை பெண்கள் வெகுவாகக் கண்டித் தனர். எனினும் ஆண் பெண் வேறுபாடு மற்றும் ஆணாதிக்கம் போன்ற கொடுமைகளுக்கெதிராக தங்கள் எதிர்ப்பினைக் காட்டுமுக மாக மேற்கண்ட கட்சிகளிலிருந்து பெருமளவில் விலகத் தொடங்

படிப்பகம்

www.padippakam.com

கியுங்கூட அவர்களின் மனப்பாங்கு தொடர்ந்து கொண்டே இருந்தது. பெண்கிளர்ச்சியாளர் மத்தியில் வலுவான ஒரு கருத்துப்பேதம் ஏற்பட்டதால் சுயாதிக்கங் கொண்ட பெண்ணியக் குழுக்கள் உருவாவதற்கு அது வழிகோலியது. உலகெங்கும் பால் பற்றிய விடயங்களை முன்னெடுக்கத் தொடங்கினர். இதன் காரணமாக 1973இல் இந்தியாவில் பெண்ணிய இயக்கம் ஆரம்பமானது. 1975ஆம் ஆண்டைச் சர்வதேச பெண்கள் ஆண்டாகப் பிரகடனப்படுத்தியமை மற்றும் பெண்கள் தசாப்தம் என்பன பெண்ணியவாதிளுக்கும் ஆரம்ப நிலைப் பெண்ணியக் கிளர்ச்சியாளருக்கும் மற்றும் ஆராய்ச்சியாளர் களுக்கும் மிகுந்த தைரியத்தைக் கொடுத்தது. இந்தியாவில் பெண்ணிய வாதிகள் தங்கள் முதல் அலையாக அடக்கு முறை, பாலியல்ரீதித் தொல்லை, வல்லுறவு மற்றும் பெண்களுக்கெதிரான வீட்டு வன்முறை போன்ற விடயங்களுக்கெதிராக கோஷம் எழுப்பினர். பெண்கள் பற்றிய ஐதீகங்களை எதிர்த்த வண்ணம் பெண்களின் உண்மையான அடையாளம் பற்றிய ஆராய்ச்சியில் இறங்கினர். பம்பாயிலுள்ள 'ஸ்திரீமுக்தி சங்கம்', பூனாவில் 1977இல் ஆரம்பிக்கப் பட்ட 'புரோகாமி ஸ்திரீ சங்கம்,' டில்லியில் அமைக்கப்பட்ட 'சோஸலிஸ்ட் பெண்கள் குழு' மற்றும் 'ஸ்திரீ சங்கம்' மகாராஷ்டி ராவில் 1979 இல் அமைக்கப்பட்ட 'ஸ்திரிசம் பார்க் சமித்தி,' மற்றும் ஐதராபாத்திலுள்ள பெண்கள் முன்னேற்ற அமைப்பு என்பன இந்தியா விலுள்ள முன்னணிப் பெண்ணிய அமைப்புக்களாகும்.

நீண்டகாலத்திற்கு முன்னரே தீர்க்கப்பட வேண்டிய மிகவும் அழுத்தம் வாய்ந்த சமூகப்பிரச்சினைகளைப் பெண்ணிய இயக்கங் கள் முன்னெடுத்துச் சென்றனர். அவையாவன படிப்பறிவின்மை, வறுமை, தற்கொலைகள், கர்நாடக மற்றும் மகாராஷ்டிர மாநிலங் களில் 'தலித்' பெண்கள் மத்தியில் காணப்படும் 'தேவதாசி' முறைமை பர்தா அணிதல் சாதிப்பாகுபாடு, பெண்களின் வேலையில் லாப்பிரச்சினை, வேலையில் பங்குகொள்ளல், பின்னுருத்தல்கள், சுயசட்டங்கள், சீதனமும் சீதன மரணங்களும், விவாகரத்து, பாலியல் வதைகள், வல்லுறவு, குடும்பவன்முறை, அழகுப் போட்டிகள் மற்றும் விபச்சாரம் என்பனவாகும். இவற்றிற்கெதிராக பல நடவடிக்கைக் குழுக்கள் இடைவிடாத பிரச்சாரங்களை மேற் கொண்டதுடன் சங்கங்கள் மற்றும் மாநாடுகளைக் கூட்டிச் செயலமர் வுகளையும் கலந்துரையாடல் களையும் நடாத்தி பேரணிகள் பொதுக்கூட்டங்களை ஒழுங்குசெய்து கையெழுத்துக்கள் சேகரித்துப் பிரசுரங்ளையும் வெளியிட்டனர். இதன் விளைவாகப் பெண்ணியக்கக்


படிப்பகம்

www.padippakam.com

குழுக்களின் முதலாவது வலைப் பின்னல் 1978இல் உருவாக்கப்பட்டு அதன் மூலம் 1979இல் 'மனுஷெ' என்ற தலைப்பில் ஆங்கிலம் மற்றும் ஹிந்தி மொழிகளில் ஒரு பிரசுரம் வெளியிடப் பட்டது.

உண்மைநிலை என்னவெனில் எங்கோ ஒரு மூலையில் பெண்கள் வல்லுறவுக்கு உட்படுத்தப்படுகின்ற போது அதற்கெதிராகக் கிளர்ச்சி வெடிக்கின்ற சமயத்தில் மட்டுமே முழுத்தேசத்தினதும் மனச்சாட்சியானது தட்டி எழுப்பப்படுகின்றது என்பதாகும். பஞ்சாபின் பிச்சைக்காரப் பெண் லக்ஷ்மி ஐதராபாத்தின் ரமீசாபீ, ஷகிலாபீ, நாக்பூலின் மதுரா மற்றும் கேரளாவின் தங்கமணி ஆகியோர் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டது சம்பந்தமான வழக்குகள் பெண்ணிய இயக்கத்தின் பிரதான சில போராட்டங்களாகும். கேரளாவின் தங்க மணி சம்பவம் மிகவும் அடாவடித்தனம் வாய்ந்த ஒன்றாகும். அக்கிராமத்தில் ஆண்களெல்லாம் வேலைக்காக வெளியே சென்றிருந்த சமயம் அரச காவல்துறைப் படையணி ஒன்று பெண்களைத் தாக்கி அவர்களை அவர்களின் வீடுகளிலேயே வல்லுறவுக் குட்படுத்தினர். நாக்பூரில் மதுரா என்கின்ற பராயமடையாத 14வயதுச் சிறுமியும் காவல் துறையினரால் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டாள். அச்சிறுமியின் சம்மதத்துடன் தான் இது நிகழ்ந்தது என்று நியாயப் படுத்திய மேல்நீதிமன்றம் குற்றவாளி களை விடுதலை செய்தது. பெண்ணிய அமைப்புக்கள் இத்தகைய நிகழ்வுகற்கெதிராக கிளர்ச்சி செய்ததுடன் வல்லுறவு சம்பந்தமான சட்டங்களைத் திருத்தியமைக் குமாறு கோரிக்கை விடுத்தன.

20ம் நூற்றாண்டின் இறுதித்தசாப்தத்தில் பெண்களின் பல்வேறுபட்ட குறிப்பான பல விடயங்களில் கவனம் குவிக்கப்பட்டது. அவையாவன பல்வகைப் பெண்ணிய அடையாளம், பாலும் பாலியலும், வறுமையின் பெண்மயமாக்கம், சூழலும் மேண்தகு அபிவிருத்தியும் திட்டமிடலும் அதிகாரமும், பூகோள மயமாக்கம், பாலியல் உல்லாசப் பயணம், வேலைத்தலங்களில் பாலியல்வதை, 'தலித்' பெண்களின் பிரச்சினைகள் மனித உரிமை என்ற அடிப்படையில் பெண்களின் உரிமைகள், இனரீதியான பாசிசம் மற்றும் ஊடகமும் பெண்களும் என்பன. இவைகள் உண்மையானதும் ஆழமானதுமான பகுப்பாய்வுகளுக்கும் ஆராய்ச்சிகளுக்கும், கலந்துரையாடல்களுக்கும் மற்றும் நடவடிக்கைத் திட்டங்களுக்கும் வழி திறந்தன.

ஆரம்பத்தில் இத்தகைய பெண்ணிய அமைப்புக்கள் உயர் வகுப்பினரின் பிரச்சினைகள் பற்றி காட்டிய அக்கறையை மேலும் நீடிப்பது கட்டுப்படியாகாது என்ற கருத்து குறிப்பாகக் கவனம்


படிப்பகம்

www.padippakam.com

செலுத்தப்பட வேண்டிய ஒன்றாகும். ஏனெனில் உண்மையில் மிக நெருக்கமான கவனத்துக்குட்படுத்தப்பட வேண்டியவர்களில் பெரும்பான்மையானோர் கீழ் வகுப்பினரும் தாழ்ந்த சாதியினரும் என்பது இப்போது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. வெளிப்படையான உண்மை நிலை என்ன வெனில் 20ம் நூற்றாண்டின் இறுதிக் கூற்றில் கூட 'தலித்' பெண்கள் பொருளாதார வளம் மற்றும் கல்வியறிவு அல்லது புதிதாக அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள பகுப்பாய்வு ஏதுக்கள் எதுவும் இன்றியே இருக்கின்றார்கள் என்பதாகும்.

இந்தியாவின் பெரும்பாலான மாநிலங்களில் 'தலித்' பெண்களுக்கெதிரான சமூகக் கொடுமைகளான தீண்டாமை, சுரண்டல் மற்றும் அடக்குமுறை என்பன அவற்றைத் தடைசெய்யும் சட்டங்கள் எவ்வளவு தான் இருந்தாலும் இன்னும் நிலைத்திருக்கின்றன. 'தலித்' பெண்களைப் பாலியல் ரீதியாகச் சுரண்டும் உயர் வகுப்பு இந்துக்களின் போக்குத் தொடர்ந்த வண்ணம் இருப்பதுடன் படுகொலை நிலைமைகளும் தொடர்கின்றன. அத்துடன் 'தலித்' பெண்கள் இரட்டை அடக்கு முறைக்குள்ளாகின்றனர் என்பது அவசியம் உணரப்படவேண்டிய விடயமாகும். அதாவது தமது சமூகத்திலுள்ள ஆண்களால் அடக்கு முறைக்கு உள்ளாவதுடன் ஆணாதிக்கக் கட்டமைப்பின் உயர் சாதியினராலும் அடக்கியாளப்படுகின்றனர். அவர்களது பிரச்சினை உயர்சாதிப் பெண்களின் பிரச்சனை போன்றதல்ல. பெண்கள் தமக்குள்ளே சமத்துவமானவர்கள் ஐதீகம் எடுபடக் கூடியதொன் றல்ல. இதன் காரணமாகத்தான் 'தலித்' பெண்ணிய இயக்கம் என்ற ஒன்று சமாந்தரமாக உருவாகியுள்ளது. பெண்ணியத்தின் தற்காலப் போக்கை நோக்கினால் இந்தியாவினுள் 'தலித்' பெண்ணிய இயக்கம் பலம் வாய்ந்த ஒன்றாக உள்ளது.

பல மட்டங்களில் அடக்கி ஒடுக்கப்படும் இன்னுமொரு தொகுதியினர் இன மரபுக் குழுப்பெண்களாகும். உலக நடப்புக்கள் பற்றிய அறிவு சற்றுமில்லாத இவர்கள் மிகவும் எளிதில் சுரண்டலுக்குள்ளாகின்றனர். அவர்களின் காணிகளும் சீவனோபாயமும் அபகரிக்கப்படுதல் ஒரு பொது வழக்கமாக மாறிவிட்டுள்ளது. இப்போது அவர்களும் எதிர்ப்புத் தெரிவிக்கத் தொடங்கியுள்ளனர். மகாராஷ்டிராவிலும் கேரளாவிலும் இப்பெண்கள் தங்களது விசேட பிரச்சினைகள் பற்றியும் விழிப்பினை ஏற்படுத்துவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டிருப்பதுடன் அவற்றின் சில பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுள்ளமைக்கும் காரணமாயுள்ளனர். இம் முன்னேற்றங்களின் பின்னணியில் தலைமை தாங்குபவர் வரிசையில் பெண்கள் முன்னணி வகித்துள்ளனர். இன,


படிப்பகம்

www.padippakam.com

மரபுக்குழுக்களின் மையமான கேரளாவில் இருந்து வெளிப்பட்ட சி.கே. ஜானு எனும் பெண்ணால் அவர்களது பிரச்சினைகள் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் வெளிப்படுத்தப்படக் கூடியதாக இருந்தன. அவர் ஆதிவாசிகளுக்கெதிராக அதிகரித்து வரும் பாலியல் ரீதியான சுரண்டல் மற்றும் வன்முறைகள் பற்றி வெளிப்படுத்தியதுடன் திருமணம் செய்யாமல் தாய்மையடைந்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பது பற்றிய தகவல்களையும் வெளியிட்டார். இன்னுமொரு துர்ப்பாக்கியமான விடயம் என்னவெனில் இந்தியாவில் கிட்டத்தட்ட எல்லா விடயங்களிலும் இன்று சம்பந்தப்படும் இனப்பாகுபாடானது பெண்கள் இயக்கத்திலும் தலைதூக்குவதாகும். இந்து இன விரோதச் சக்திகள் பெண்களை முடுக்கி விட்டு அமைப்புரீதியாகச் செயற்படச் செய்தவண்ணம் இருக்கின்றன. அவை பெண்களின் மரபு ரீதியான படிமமான தேவி /மாதா வார்ப்பு மாதிரியை மீண்டும் புத்துயிர்க்கச் செய்கின்றன. இது சமத்துவத்திற்கான பெண்களின் போராட்டத்திற்கு எந்த வகையிலும் உதவாத ஒரு பின்னோக்கிய நகர்வு என்பது வெளிப்படை. சில பகுதிகளில் சிறுபான்மைப் பெண்கள் சுறுசுறுப்பாக இயங்கவில்லை எனவும் கூறமுடியாது. தங்களது சமூகத்தினுள்ளேயே பாகுபாடு காட்டப்படும் முஸ்லிம் பெண்கள் ஒன்று திரண்டு ஆணாதிக்கத்தை எதிர்த்துப் போராட்டங்களை ஒழுங்கு செய்கின்றனர். 1985இல் இடம்பெற்ற 'ஷாபானோ' (Shah Bano) வழக்கின் பின்னணியில், இருந்த கீழ்த்தரமான அரசியல் இப்படியான போராட்டங்களைத் தூண்டிவிட்டிருக்கலாம். உண்மையில் மேல்நீதி மன்றத்தின் தீர்ப்பு முஸ்லிம் பெண்களுக்குச் சாதகமாகவே இருந்தது. ஆனால் சமூகத்தின் தலைவர்கள் (சந்தேகமின்றி எல்லோரும் ஆண்கள்) எனப்பட்டோரின் நெருக்குதலுக்கு இடங்கொடுத்ததன் காரணமாக மத்திய அரசாங்கமானது 'முஸ்லிம் பெண்கள் பாதுகாப்பு மசோதா'வை அனுமதித்தது. ஆனால் உண்மையில் அது பெண்களைப் பாதுகாப்பதற்குப் பதில் முஸ்லிம் ஆண்களைப் பெண்களிடமிருந்து பாதுகாப்பதாக அமைந்துவிட்டது. சில முஸ்லிம் பெண்கள் இதற்கெதிரான தங்கள் எதிர்ப்பை தெரிவிக்க ஒன்று கூடினர். திருமணம், சொத்துரிமை, விவாகரத்து மற்றும் பொதுவான பாகுபாட்டுச் செயற்பாடுகள் அவர்களால் கேள்விக்குள்ளாக்கப் பட்டன. கிறிஸ்தவப் பெண்களின் எதிர்ப்புப் பெரும்பாலும் பின்னுருத்து தொடர்புடையதாக இருந்தது. 1986இல் மேரிராய் வழக்கில் மேல் நீதிமன்றமானது சொத்துரிமை பெறலுக்குச் சாதகமாகத் தீர்ப்பு வழங்கியது. இத்தீர்ப்பு கிறிஸ்தவப் பெண்கள் இயக்கத்திற்குக் கொள்கையளவில் உதவியது. எனினும் நடை முறையில் இன்னும் பல தடைகள் காணப்படவே செய்கின்றன.

படிப்பகம்

www.padippakam.com

ஆந்திரப் பிரதேசத்தில் மது எதிர்ப்பு இயக்கமானது 1992 இலிருந்து 93வரை பலம்வாய்ந்ததாகக் காணப்பட்டதுமல்லாமல் அது வேறு மாநிலங்களுக்கும் வெவ்வேறு மட்டங்களில் பரவியது. ஆந்திரா வில் 40,000இற்கு மேற்பட்ட பெண்கள் ஒன்று கூடி மதுஏலம் நடை பெறுவதைத் தடுத்தமை இந்தியப் பெண்கள் இயக்கச் சரித்திரத்தில் ஒரு முக்கிய அத்தியாயமாகும். தற்போது இம்மது எதிர்ப்பு இயக்கமானது இந்தியாவின் பல பாகங்களிலும் இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றது. 1995ம் ஆண்டு பெய்ஜிங் சர்வதேச மாநாட்டில் நடவடிக்கைக்கான தளம் அமைப்பதற்கு அழைப்பு விடுத்து ஒரு பிரகடனம் செய்யப் பட்டது. அதைத் தொடர்ந்து பெண்கள் விடயம் பற்றிப் பேசுவதற்குப் பொதுவான ஒரு சபையாகத் தேசிய மட்டத்தில் பொதுவான ஒரு வலைப் பின்னலை பெண்கள் அரசசார்பற்ற நிறுவனங்களும் பிற பெண்ணியக் குழுக்களும் சேர்ந்து உருவாக்கின. இவ்வலைப்பின்னலின் உறுப்பினர்களுள் 'அஸ்மித பெண்கள்வள நிலையம்' பெண்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத் திக்குமான நிலையம் (சண்டிகார்), சேதனா (அகமதாபாத்), பெண்கள் குரல் (பங்களூர்), மஷித்தஜகிர்த்தி சங்கம் (மத்தியப் பிரதேசம்), சயசர (சென்னை) மற்றும் வடகிழக்கு வலைப்பின்னல் (ஷிலொங்) என்பன அடங்கும்.

கேரளாவின் ஸ்திரிவேதியும் அன்வேஷியும் டில்லியின் லாகோரியும் சாக்ஷியும் பங்களூரிலுள்ள விமோசனா மற்றும் ஐதரா பாத்திலுள்ள அன்வேஷி என்பன மிகவும் துடிப்புவாய்ந்த சில பெண்ணியக் குழுக்களாகும். பிரசுரங்கள், இலக்கியம், அரங்கு, வீடியோ படத்தயாரிப்பு, ஓவியம் மற்றும் திரைப்பட விமர்சனம் ஆகிய துறைகளிலும் பெண்ணியத்தின் பங்களிப்பு கூடிய பலம் பெற்றுவரக் காணப்படுகின்றது. இப்போக்கு இந்தியாவில் பெண்ணிய அமைப்புகள் காலகெதியில் தனது நோக்கங்களை வென்றெடுக் குங்காலம் நெருங்கிக் கொண்டிருக்கின்றது என்ற ஒரு மனப்பதிவினைத் தரக்கூடாது. மாறாக ஆணாதிக்கத்தின் அக்கறைகளும் எண்ணங்களும் மிகவும் பலமாகவுள்ளபடியால் தங்கள் நிலையைத் தக்க வைத்துக் கொள்ளப் பெண்கள் வெகு விரைவாகச் செயலாற்ற வேண்டியுள்ளது. சட்டவாக்கத்தில் 33% பங்கு பெண்களுக்கு இருக்க வேண்டுமென்ற பிரசித்தமான கோரிக்கையின் பரிதாபமான முடிவு அவர்கள் எதிர்கொள்ளும் பாரியசவால்களுக்கான தெளிவான அடையாளமாகும். தொடர்ந்து செல்லும் அடக்கு முறையானது இனியும் சகித்துக் கொள்ளப்படும் என்பதற்குரிய வழியேதும் இருப்பதாகத் தெரியவில்லை. அப்படியானால் பெண்கள் தமது தந்திரோபாயங்களை மீள்கட்டமைப்புச் செய்ய வேண்டியிருக்கு மென்பது அர்த்தமாகுமா? கஷ்டகாலங்கள் நீங்குவது அண்மையிலில்லை என்பது மட்டும் உண்மை.

படிப்பகம்

www.padippakam.com

# " இது எமது படைப்பு "

## (வீதி நாடகம்)



[ஒவ்வொரு திசையிலும் இருந்து பேணியில் தட்டி பாடிக் கொண்டு வருவர். ஆற்றுகை நிகழும் இடத்தில் நின்று கொண்டு பின்வரும் பாடலைப் பாடுவர்].

பாடல் :

*நம்ம ஆற்றலுக்கொரு குறைவுமில்லை*
*அறிவுக்குத்தான் பஞ்சமில்லை*
*சுற்றி சுற்றி விரட்டி நம்ம*
*அடக்கி வச்சவர் யாரு ?*
*அடக்கி வச்சவர் யாரு ?*
*அடக்கி வச்சவர் யாரு ?*

*தலையை நிமிர்த்திப் பாரு*
*இனி தோல்வியேது சேரு*

*ஒடுக்கும் சகல விலங்கும் உடைத்து*
*உலகை அடிமைப் பிடியில் இருந்து*
*விடுக்கும் பணியில் பெண்கள் எல்லாம்*
*விழிப்புக் கொண்டு எழுக - 3*
*கரங்கள் சேர்த்துக் கொள்க*
*பெண்கள் உரங்கொள் நெஞ்சோடெழுக*
*தந்தானத்தன தானதான*
*தந்தானத்தன தான்தான*
*தந்தானத்தன தானதான*
*தந்தனத் தந்தன தானா }2 - தனத்*
*தானத் தந்தன தானா - தானத்*
*தந்தன தானா*

படிப்பகம்

www.padippakam.com

பாடல் ஒரு முறை பாடி முடிய வீதி நாடகம் பற்றிய சிறு அறிமுகம் இடம்பெறும். பின்பு மீண்டும் ஒரு முறை பாடுவர். பின் ஆங்காங்கே பேணிகளையும் பந்துகளையும் போடுவர் ஆறு பெண்கள் பின்வரும் வசனங்களை சொல்லி ஒவ்வொரு வராக ஒவ்வொரு பேணியை ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்குவர்.

பெண் 1 இது எனது சேமிப்பு
சிறுகச் சிறுக சேமித்தது

பெண் 2. இது எனது வீடு
இரத்தமும் வியர்வையும் சிந்திக்கட்டியது.

பெண் 3. இது நான் தைச்சது
கண்முழிச்சித் தைச்சது

பெண் 4. இது நான் எழுதினது
கஸ்ரப்பட்டு எழுதினது

பெண் 5. இது எனது படிப்பு
கண் முழிச்சிப் படிச்சது

பெண் 6. இது என்ர உழைப்பு
கஸ்ரப்பட்டு உழைச்சது

மூன்று பேர் பின்வரும் பழமொழிகளைக் கூறி அடுக்கிய பேணிகளை பந்தால் எறிந்து வீழ்த்துவர்.

நபர் 1. விரிச்சிக் கெட்டுதாம் போயிலை
சிரிச்சிக் கெட்டுதாம் பொம்புள

நபர் 2. பெண் புத்தி பின் புத்தி

நபர் 3. பொட்டக் கோழி கூவி
பொழுது விடியுமா ?

[மீண்டும் பெண்கள் வசனங்களைக் கூறிக் கொண்டு சுறுசுறுப்பாக பேணிகளை அடுக்குவர். மீண்டும் அவை எறிந்து வீழ்த்தப்படுகின்றன. பெண்கள் தொடர்ந்து அடுக்குவதற்குப் போராடுகின்றனர். கடைசியில் அடுக்கிய பேணிகளைச் சுற்றி வேலி போல் நின்று உடைய விடாது காப்பாற்றுகின்றனர்]


படிப்பகம்

www.padippakam.com

ஒருவர் :- ஆ.... பிள்ளையார் கட்ட, விளையாட்டு, சந்தோசம். விளையாடுங்க பாப்பம்.

இன்னொருவர் :-(உரத்து விசில் அடித்துக் கொண்டு ஓடி வந்து) சரி நடுவர் நானும் வந்திட்டன். விளையாட்டத் தொடங்குங்க.

மற்றொருவர் :- [வெளியில் நின்று ஓடிவந்து]
:- நானும் விளையாட வாறன், நானும் விளையாட வரப் போறன்.

பெண்:- இது விளையாட்டும் இல்ல நாங்க விளையாடயும் வர இல்லை. இது எங்கட வாழ்க்கை - 2

பெண் :- நாங்க உங்களோட கதைக்கப் போறம்.
பெண் :- நாங்க உங்களோட கதைக்கப் போறம்.

ஒருவர் :- சரி கதையுங்க

எல்லோரும் :- சரி கதையுங்க

ஒருவர் :- நாங்கள்
எல்லோரும்:- (தவளைச் சத்தம் போல்) மக்....மக்....மக்....

நபர் :- நாங்கள்
எல்லோரும் :- மக்..... மக்..... மக் ....

நபர் II :- நாங்கள்
II :- பெண்கள்

ஒருவர் :- தவளைகள், கிணற்றுத் தவளைகள்
II:- கிணற்றுத் தவளைகள்
II:- கிணற்றுத் தவளைகள்

**(மூன்று பேர் வேறு வேறு தொனியில் எழுந்து நின்று சொல்லி பின் தவளைபோல் பாய்தல்)**

ஒருவர் :- (எழுந்து நின்று)
நாங்கள் பெண்கள், தவளைகள், கிணற்றுத் தவளைகள் என்றுதான் பார்க்கப்படுகிறோம்.

ஒருவர் :- ஆனால் எங்களின் ஆற்றல்கள், சிந்தனைகள், ஆசைகள் எதிர்பார்ப்புகள்ஆழக்கிணற்றில் போடப்பட்ட அடிக்கற் களாக மறைந்து கிடக்கின்றன.(என்று சொல்லிக் கொண்டும் மக்....மக்...மக்... என கத்திக் கொண்டும் ஆமை வடிவிற்கு மாறுகிறார்கள்.)

படிப்பகம்

www.padippakam.com

*(ஆமை வடிவில் நின்று கொண்டும் முழங்காலில் நின்று கொண் டும் முழங்காலில் அமர்ந்து கொண்டும் ஆமைக்கதை தொடங் குகிறது.)*

நபர்I:- நான் ஆமை, நான் ஆமை
நான் எப்பவும் வெளியில் வரமாட்டேன் எனக்குச் சுதந்திரமாய் போகவும் வழியில்லை நான் நடக்கும் போதெல்லாம் பயந்து பயந்து தான் நடப்பேன். எனக்குப் பக்கத்தில் யாரும் வந்தால் உள்ளே புகுந்து விடுவேன்.

(இவற்றை மீண்டும் நபர் **II** கூறுவார்.)

நபர் III :- நான் ஆமை நான் ஆமை
நான் பிறக்கும் போதே நீ இப்படித்தான் வாழ வேண்டும் என்று என் உடலைப் பாதுகாக்க ஓட்டையும் சேர்த்து வைத்து விட்டார்கள்.
நான் என்ர வீட்டையும் காவிக் கொண்டு திரியிறன். அது எனக்குப் பெரும் சுமையாக இருக்கிறது. அதைக் கழற்றி விட்டு நடந்து பார்க்க விரும்புகிறேன்.

(இதே வசனங்களை நபர் **IV** திரும்பச் சொல்வார்)

நபர் V :- ஆனால் அப்படிச் செய்யலாமா ஏன் எனக்கு மட்டும் இந்த ஓடு என நினைக்கிறேன். ஆமாம் இது இல்லா விட்டால்

[இவற்றை மீண்டும் **VI**வது நபரும் சொல்வார்]

நபர் VII :- நான் ஆமை என் ஓடை கழற்றக்கூடாது. சுமை என்றாலும் பறவாயில்லை நான் இதை சுமந்துதான் ஆக வேண்டும்.

(நபர் **IX** உம் மீண்டும் இவற்றை சொல்வார்)

நபர் V:- என் ஆசையெல்லாம் இருக்கட்டும். நான் வாழ்ந்தால் போதும் நான் ஆமை. நான் ஆமை.

[இவற்றை நபர் **X** உம் மீண்டும் சொல்வார்]

நபர் III:- நான் பிறக்கும் போதே நீ இப்படித்தான் வாழ வேண்டும் என்று என் உடலைப் பாதுகாக்க ஓடையும் சேர்த்து வைத்து விட்டார்கள்.


படிப்பகம்

www.padippakam.com

நான் என்ர வீட்டையும் சுமந்து கொண்டு திரிகிறன். அது எனக்குப் பெரும் சுமையாக இருக்கிறது. அதைக் கழற்றி விட்டு நடந்து பார்க்க விரும்புகிறேன்.

[நபர் IV உம் மீண்டும் சொல்வது]

நபர் XI:- சீ ... சுமையாக இந்த ஓடு இல்லாவிட்டால் நான் எவ்வளவு சுதந்திரமாகத் திரிந்திருப்பேன்.

ஒருவர் :- நாங்கள் பெண்கள்..
ஒழுக்கம், பண்பாடு, கட்டுப்பாடு என்கின்ற
பெயர்களில் எங்களில் ஓடுகள் சுமையாக
சுமையாக சுமையாக.

[என்று சொல்லி முடிய பின் அனைவரும் ஓட்டுக்குள் ஆமை புகுவது போல புகுந்து விடுவர். பின் வெளியில் வருவதற்கு உந்தல். ஓடாய் மூடியதுணியின் நுனியை ஒருவர் இழுத்து எடுத்தவுடன் எல்லோரும் வட்டத்திற்கு அப்படியே வந்து நின்று பாடல் பாடுவது]

பாடல் :- *ஆணுக்கொரு இலக்கணம் வைத்து*
அனைவரும்:- *இலக்கணம் வைத்து*

*பெண்ணுக்கொரு இலக்கணம் வகுத்து*
*இலக்கணம் வகுத்து*

*ஏற்றத் தாழ்வை வைத்தவர் யார்*
*வைத்தவர் யார் - 2*
*ஏனென்று கேட்டு உங்களுடன் நாங்கள்*
*விடை தேட வந்துள்ளோம்*

அனைவரும்:- *வீதிக்கு வந்துள்ளோம் - 2*
*விடை தேட வந்துள்ளோம்*
*விடை தேட வந்துள்ளோம்*
*வீதிக்கு வந்துள்ளோம்.*
*லாலா லாலா லாலா*
*விடை தேட வந்துள்ளோம்*
*வீதிக்கு வந்துள்ளோம்.*


படிப்பகம்

www.padippakam.com

பெண் : நாங்கள் பெண்கள் - 2,
அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு, கற்பு ஒழுக்கம்,
பண்பாடு, கட்டுப்பாடு - 3

*(மூன்று பேர் மாறி மாறி 3 தரம் சொல்வது)*

**என்கின்ற பெயர்களில் எங்களில் ஓடுகள் சுமையாக சுமையாக சுமையாக [என்று சொல்லிக் கொண்டு பின்நோக்கி சிறிய வட்டமாக பிடறியில் கைவைத்துக் கொண்டு அமர்தல்.]**

ஒருவர் :- எங்களுக்கு எவ்வளவு ஆசைகள் எவ்வளவு எதிர்பார்ப்புகள் எங்களிடம் எவ்வளவு ஆற்றல்கள்.

:- ஆனால் அவற்றை வெளிப்படுத்தும் சூழல் ....?

ஒருவர் :- ஏன் இந்த நிலைமை - 2

மற்றவர்:- காலங்காலமாகவும் இன்றளவும் எங்கள் மீது திணிக்கப்பட்டு வருகின்ற கருத்துக்களால் தான் இந்த நிலைமை

இன்னொருவர் :- அது எப்பிடி?
ஒருவர் :- அது இப்பிடித்தான், [என சொல்லி]

நபர் I

*புருசன் வீட்டில் வாழப்போகும் பெண்ணே*
*தங்கச்சி கண்ணே - சில புத்திமதிகள்*
*சொல்லுறன் கேளு முன்னே.*

*சாமக்கோழி கூவுமுன்னே எழும்பனும்*
*சாணி தெளிச்சி கோலம் போடப் பழகணும்*
*சில புத்திமதிகள் சொல்லுறன்*
*கேளு முன்னே -2*

நபர் II

*உண்டி சுருங்குதல் பெண்டிற்கழகு*

நபர்III(உரைப்பவர்) விளக்குபவர்

*தெய்வம் தொழாள் -----*
*கடவுளைக் கும்பிட மாட்டாள்*
*கொழுநன் தொழுதெழுவாள் -----*
*கணவனைத்தான் கும்பிடுவாள்.*
*பெய்யெனப் பெய்யும் மழை ----*
*அவள் சொன்னால் மழை பெய்யும்.*


படிப்பகம்

www.padippakam.com

நபர் IV அளவுக்கதிகமா கோபப்படும் பெண்களும்
அளவுக்கதிகமா ஆசைப்படும் ஆண்களும்
வாழ்ந்ததாக சரித்திரமே இல்ல.

நபர் V கூந்தல் பெருத்தவள் குடிவழிக்கும் ஆகாது
கெண்டை பெருத்தவள் கிழவழிக்கும் ஆகாது

நபர் VI கண்ணாடி வீட்டில் வாழும் காரிகையே
கல்லெறியாதே கேள், புருஷன் வீடே உலகமடி
பொங்கிப் படைத்தல் பெருமையடி

நபர் VII பொறுமை, தியாகம், விட்டுக்கொடுத்தல், பெண்ணே
இவை உனது அணிகலன்கள்

பெண் :- காலங்காலமாகவும் இன்றளவும் எங்கள் மீது திணிக்கப்பட்டு வருகின்ற இத்தகைய கருத்துக்களால் தான் இந்த நிலைமை.

பெண் :- உண்மைகளை கூறுகின்றோம்
கேட்பார் இருந்தாலும்
உணர்வார் எவருமில்லை
ஏன்? ஏன்? ஏன்?

பெண் I ஏன் வெற்றி பெற்ற ஒவ்வொரு ஆணுக்கும்
பின்னால் ஒரு பெண்தானே இருக்கிறாள்?

பெண் II ஏன் வெற்றி பெற்ற ஒவ்வொரு ஆணுக்கும்
பின்னால் ஒரு பெண்தானே இருக்கிறாள்?

பாடல் :- ஏன் இந்த வெற்றியை
தனியாக ஆணால பெற்றிட முடியாது

:- சுயமாக வெல்லும் சூழலை ஏன்
பெண்ணுக்கும் உருவாக்க முடியாது

நபர் :- பெண்ணும் ஆணும் சரிநிகர் சமானமாக
வெற்றிகளை ஈட்டுவதற்குரிய சூழல்---?

(அமைதி)

படிப்பகம்

www.padippakam.com

[பின்பு திடீரென கிளிகளின் பல்வேறு சத்தங்கள் ஒலிப்பது போல் செய்வது. கீச்----கீச்----கீச்]

## கவிதை

பெண் 1 நான் ஒரு பச்சைக்கிளி
நான் எவ்வளவு சுதந்திரமாகப் பறந்து திரிகிறேன்
நான் வாழ்க்கையில் எவ்வளவு இன்பம் அநுபவிக்கின்றேன்.

பெண் 2 நான் பறக்கும் போது எத்தனை காட்சிகளைப் பார்க்கிறேன்
எனக்கு உணவு இல்லாவிட்டாலும் எங்காவது தேடிப்போய்
நான் விரும்பிய உணவை உண்ணுகின்றேன் - 2

பெண் 3 எனக்கு இரண்டு இறக்கைகள் உண்டு. சுதந்திரம் உண்டு
நான் பறக்கிறேன். பெற்றோர் என்னை வளர்த்து விட்டனர்.
இப்போ எனக்குத் தேவையானதை நானே தேடுகிறேன்.

பெண் 4 எனக்கு எத்தனை நண்பர்கள் உண்டு அவர்களுடன்
சேர்ந்து பறக்கும் சந்தோஷத்திற்கு அளவே இல்லை.
மனம் விட்டு எவ்வளவு பேசுவோம்

பெண் 5 எனக்கு எதிரிகளும் இருக்கிறார்கள் அதனால்
நான் பயப்படவில்லை - 2

பெண் 3 பயந்து பயந்து நான் பறக்காமல் இருந்தால். . . 2

பெண் 2 நான் எதிரிகளிடமிருந்து தப்பவும் பழகிவிட்டேன் - 2

பெண் 6 நான் சுதந்திரமாக பறந்து வாழ்க்கையை எதிர்கொள்ள
விரும்புகிறேன்.

(அனைவரும் எழுந்து வட்டத்தில் நின்று கூறுவது)

எல்லோரும் :- நாம் சுதந்திரமானவர்களாக
வாழ்க்கையை எதிர்கொள்ள விரும்புகிறோம்.

(வட்டத்தில் நின்று கொண்டே)

பாடல் :- பெண்களுக்கு சுதந்திரம் வேண்டும் என்றுமே
பெண்ணடிமையின் கொடுமைச் சுமையினை
அறுத்து வீசுவோம் - அறுத்து வீசுவோம்.
ஆ. . . ஆ. . . ஆ. . .ஆ. . . ஆ. . .ஆ.

படிப்பகம்

www.padippakam.com

**ஒழுக்கம், பண்பாடு, கட்டுப்பாடு என்ற பல ஓடுகளால் எங்களது இயல்புகள் சிதைக்கப்படுவதிலிருந்து விடுபட விரும்புகிறோம்.--- பாடுபடுகிறோம்**

பாடுபடுகிறோம், பாடுபடுகிறோம் பாடுபடுகிறோம்

**(அனைவரும் உரத்த குரலில்)**

மீண்டும் பாடல் :-

*பெண்களுக்கு சுதந்திரம் வேண்டும் என்றுமே*
*பெண்ணடிமையின் கொடுமைச் சுமையினை*
*அறுத்து வீசுவோம் - அறுத்து வீசுவோம்*
*ஆ----ஆ----ஆ----ஆ--*

ஒருவர் :- பெண்ணும் ஆணும் சரிநிகர் சமானமாக வெற்றிகளை ஈட்டுவதற்குரிய சூழல் ----

**(அமைதி)**

எமது எதிர்பார்ப்பு
எமது நம்பிக்கை
எமது போராட்டம்

**பாடல் அனைவரும்:-**

*உண்மை காணத் திரண்டார்*
*விடுதலைக்கு எழுந்தார்*
*புதிய பாதை , விதியமைத்து போக்கை மாற்றி*
*வாழ்க்கை முறையை புணரமைக்க விரைந்தார்*

**(பேணிகள்மீளவும் அடுக்கப்படுகின்றன.)**

*கண்ணை மூடிக் கிடந்தோர்*
*கனவு விட்டெழுந்தார்*
*காலம் சென்ற கொள்கைக் கெல்லாம்*
*ஆப்பு வைக்க விரைந்தார்.*

**(பேணிகள் மேலும் அடுக்கப்படுகின்றன)**

உண்மை காணத் திரண்டார்----

www.padippakam.com

**பங்குபற்றியோர்**

செ. மல்லிகா
பு. விஜிகலா
சா. உதயராணி
ஆ. கில்டாறூபினி
தே. அருட்கவிதா
நீ. ஜெயராணி
இ. அருள்ஜோதி
இ. அமுதா
கோ. பிரபாஜினி
க. லூர்த்துஜீவகா
ஜெ. ஆ. ஜெஸ்மின்பேகம்
அ. இலங்கேஸ்வரி
த. ஜெயந்தி
சி. ஜீவலதா

பயிற்சிப் பட்டறைத் தயாரிப்பு
இணைப்பாளர் (Facilitator) :- சி. ஜெயசங்கர்.



www.padippakam.com

# "இது எமது படைப்பின்" கதை

கலாசாரக்குழு

ஆரம்பத்தில் ஒரு கலந்துரையாடலாகவே நாடகச் செயல் முறை ஆரம்பிக்கப்பட்டது. இணைப்பாளர், "நீங்கள் எவ்வாறு நாடகம் உருவாக்கப்போகின்றீர்கள், சமூகத்தில் குறிப்பாகக் கிராமங் களில் என்ன வகையான பிரச்சனைகளை இனங்கண்டுள்ளீர்கள்?" எனக் கேட்ட போது பங்குபற்றுனர்கள் பின்வருமாறு தமது கருத்துக்களைக் கூறினர்.

வீடுகளில், வீதிகளில், வேலைத்தளங்களில், கிராமங்களில், நகரங்களில் என இழைக்கப்படுகின்ற பாலியல் பலாத்காரம் சிறுவர் துஷ்பிரயோகம், பால்நிலைப்பாகுபாடு, பெண் அடிமைத்தனம் இவ்வாறு பல்வேறு பிரச்சனைகள் நாளாந்தம் நிலவிக்கொண்டு வருவதை நாம் கண்ணால் பார்த்தும் கேட்டும் அனுபவித்தும் வருகின்றோம். இது அனைவருக்கும் தெரிந்த விடயம்.

பெண்கள் ஒடுக்குமுறைகளுக்கு உள்ளாக்கப்படுவதன் காரண மாக ஆற்றல்களை வெளிப்படுத்த முடியாது போகிறது. அவர்களது ஆசைகள், சிநதனைகள் மறுக்கப்படுகின்றன. வாழ்க்கை பற்றிய தேடுதல்களுக்கு வாய்ப்புகள் இல்லை. சுயதொழில் பற்றிச் சிந்திப்ப தில்லை. ஆளுமைகள் இருந்தும் வெளிப்படுத்த முடியாத நிலையில் பெண்கள் உள்ளார்கள்.

இவ்வாறாக பலரும் பல கருத்துக்களை கூறினார்கள். இவை கலந்துரையாடப்பட்ட போது முக்கியமாக பெண்களின் ஆற்றல்கள், திறமைகள், உணர்வுகள், விருப்பங்கள் இவற்றை வெளிப்படுத்தவும் வேண்டும், அதேவேளை பெண்களின் பிரச்சனைகளை சமூகத்திற்கு உணரவைக்க வேண்டும் எனவும் கூறப்பட்டது. பெண்களுக்கு நடக்கும் வன்முறைகள், பாலியல் பலாத்காரம், பெண்கள் பற்றிய சமூகப் பார்வைகள் பெண்களின் வளர்ச்சிக்குத் தடையாக இருக்கும் காரணி கள் மற்றும் காலங்காலமாக பெண்களுக்கு சொல்லி அடக்கி வைக்கும் நிலைமைகள் காணப்படுவதற்கு என்ன காரணம்? இப்படியான நிலமைகளை ஏன் சமூகத்தில் ஏற்றுக்கொள்கின்றனர்? சமூகத்தில் பெண்கள் மீதான கருத்து என்ன? இதிலிருந்து விடுபட ஏன் யோசிப்ப தில்லை என்றும் பல கேள்விகள் இணைப்பாளரால் கேட்கப்பட்டது.

படிப்பகம்

www.padippakam.com

சமூகத்தில் பெண்கள் பற்றிய பார்வை இப்படித்தான் உள்ளது. காலம் காலமாக பெண்ணுக்கும், ஆணுக்கும் கூறப்பட்டு வருகின்ற கருத்துக்களை இக்கால நடைமுறையிலும் மாற்ற முடியாமல் அதனை ஒரு வரையறையாக வைத்துள்ளார்கள். உதாரணமாக பெண் என்பவள் தலை குனிந்து நடக்க வேண்டும். கணவனை இழந்தவள் சுபகாரியங்களுக்கு முன்னுக்கு வரக்கூடாது. அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு, கற்பு உள்ளவளாகவும் கணவனுக்கு கட்டுப்பட்டவளாகவும் தான் இருக்க வேண்டும் போன்ற கருத்துக்கள் காணப்படுகின்றன.

ஆண் என்றால் வீரமானவன் என்றும், பெண் எந்த வேலை செய்தாலும் அவளை பெண் என்ற ரீதியில் முன்னுக்கு வரமுடியா மல் செய்யும் பழமொழிகளும் உள்ளன. உதாரணமாக "பெட்டைக் கோழி கூவி பொழுது விடியுமா?", அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பு எதற்கு? "பெண்புத்தி பின்புத்தி". இப் பழமொழிகள் பெண்ணை இரண்டாம் பட்சமாகவும் சமையல் செய்வது மட்டும் அவளது வேலையாகவும் காட்டுகின்றது. இதனால் அவர்களது அறிவு கருத்திற் கொள்ளப்படாமல் மழுங்கடிக்கப்படுகின்றது.

இவ்வாறு உள்ளவர்களுக்கு ஒரு புதிய மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். அப்புதிய மாற்றம் மிகவும் எளிமையாக கூறப்பட வேண்டும். ஆகவே இணைப்பாளர் எமது அநுபவங்களை தனித்தனியே எழுதும்படி கூறினார். பின் அவ்விடயங்கள் கலந்துரையாடப்பட்டது. இதிலிருந்து முக்கியமான கருத்துக்களை, விடையங்களை நெறிப்படுத் தினோம். மக்களுடன் மிக நெருக்கமான தொடர்பு கொள்ளும் எமக்கு அவர்கள் வாழ்வின் பக்கங்களை சிந்திப்பதற்கும், அது பற்றி பேசி வெளிப்படுத்துவதற்கும் இது பயனுள்ள சந்தர்ப்பமாக அமைந்தது.

ஏற்கனவே கலந்துரையாடப்பட்ட விடயங்களை ஆராய்ந்து பார்த்தபோது அதனை படங்கள் மூலம் கீறி விளங்கப்படுத்தினார். இதில் ஏழு விதமான மனிதர்களை இனங்காணக் கூடியதாக இருந்தது. மேலும் சிந்திக்கும் போது இவை போன்று பலவிதமான மனிதர்களை காணக் கூடியதாக இருக்கும்.

அவையாவன :

நபர் :- 1 பெண்களுக்கு பிரச்சனை இல்லை என்பவர்.

நபர் :- 2 பிரச்சனைக்குள்ளேயே, இப்படித்தான் வாழ்க்கை என்று வாழ்பவர்.

நபர் :- 3 பெண் இப்படித்தான் வாழ வேண்டும் என்று சொல்ப வர்கள்.

www.padippakam.com

நபர் :- 4 பிரச்சனைக்குள் இருப்பவரை இனங்கண்டுஅவருக்கு உதவி செய்ய முன் வருபவர்.

நபர் :- 5 வெளியிடங்களுக்குச் செல்பவரும் சுதந்திரமாகத் திரிபவரும். அதாவது நிறைய விடயங்களை அறிந்து தமது விருப்பப்படி செயல்படுபவர்.

நபர் :- 6 பெண்களுக்கு பிரச்சனை இருக்கிறது என்று உணர்ந் தவர். பெண்களுக்கு பிரச்சனை உள்ளது என்றும் கூறுபவர். வெளியில் வருவதற்கு உதவி செய்பவர்,

நபர் :- 7 வெளியில் இருந்து பார்ப்பவர். அதாவது சுயநலம் கருதி புகழ், பெருமை கிடைக்க வேண்டும் என்ற வியாபார நோக்கோடு பார்ப்பவர்.

இவ்வாறு அவர்களின் குண இயல்புகளை இனங்காணக் கூடியதாக இருந்தது. இக்குணவியல்புகளை வைத்து இவர்களின் பாத்திர படைப்பிற்கு ஏற்ப அனைவரையும் தாம் விரும்பிய வகையில் எழுதுமாறு இணைப்பாளர் கூறினார். அவை பல வடிவங்களில் எழுதப்பட்டது.

அவையாவன :-

கவிதை வடிவம், பழமொழிகள், துணுக்குகள், வசன நடை, போன்றன. அத்துடன் இக்குண இயல்புகள் இன்னொன்றுடன் ஒப்பிட்டும் கூறப்பட்டது. பெண்ணினது முயற்சியை சிலந்தி வலைக்கு ஒப்பிட்டும், அவள் ஏதும் அறியாமல் குறுகிய வட்டத்திற்குள் வாழ்வதை, கிணற்றுத் தவளைக்கு ஒப்பிட்டும் கூறப்பட்டது. மேலும் பெண்ணானவளின் சுமைகள் அதிகம் என்பதையும், அவளுக்கான அவளது ஆசைகளை நிறைவேற்ற முடியாமல் சமூகக் கட்டுப்பாட் டிற்குள் அவள் இறுகி பயந்து வாழ்வதை ஆமைக்கு ஒப்பிட்டும் கூறப்பட்டது. மற்றும் சுதந்திரமான, தேடல் நிறைந்த, கட்டுப்பாடு களை மீறிய, சுயசிந்தனை உள்ள பெண்ணை கிளிக்கு ஒப்பிட்டு கவிதை வடிவில் கூறப்பட்டது. அத்துடன் பெண்ணின் குற்றத்தை சரித்திரமாகவும், ஆணின் குற்றத்தை சம்பவமாகவும் சமூகம் பார்கின்றது. இதை "எலி தட்டும், பாம்பு சீறினால் ஊரே பேசும்" எனும் புதிய பழமொழி இப்பட்டறையில் உருப்பெற்றது.

இணைப்பாளர் எம்மை இலகுபடுத்துவதற்கு கேள்விகள் கேட்டும், விளையாட்டுக்கள், உதாரணங்கள் கூறியும் எமக்கு விளங்கப்படுத்தினார் இது முக்கிய விடயமாகும்.

படிப்பகம்

www.padippakam.com

தெரிவு செய்யப்பட்ட கவிதைகளை வாசித்து இவைகள் கிராமத்திலும், நகரத்திலும் போடுவது என்றால் எல்லோருக்கும் விளங்க வேண்டும். அவ்வாறு செய்வது என்றால் எப்படி? முதலில் எதைச் செய்வது? என்ற பல கேள்விகள் இருந்தது. அதாவது எங்களது இலக்குக் குழு தனியே கிராம மக்களாக இல்லை. நகரம், கிராமம் சார்ந்ததாகவே உள்ளது. ஆகவே எமது நாடகத்தில் இருசாராருக்கும் இலகுவில் விளங்கக்கூடிய மொழிப் பிரயோகம் பாவித்தல் வேண்டும் எனக் கூறப்பட்டது.

பின்னர் ஆமைக்கவிதை சில திருத்தங்கள் செய்யப்பட்டு கதைபோல் ஒவ்வொருவரும் மாறி மாறி கூறினோம். ஒவ்வொருவரும் தமது கருத்துக்களை முன்வைத்ததிற்கமைய கிளிக் கவிதையும் மாறி மாறி கதைபோல் கூறுவது என தீர்மானிக்கப்பட்டது. இக்கதைக்கு பொருத்தமான கவிதைவரிகள் எழுதியவற்றிலிருந்து தெரிவு செய்து சேர்க்கப்பட்டது. கவிதைகளும் கலந்துரையாடப்பட்டது. அதன்பின் இக்கதையுடன் எதைசேர்ப்பது எனக் கேட்ட போது சிலர் விளையாட்டை சேர்க்கலாம். ஏனென்றால் சிறுவர்களின் கவனத்தை இலகுவாக ஈர்க்கலாம். விடயத்தை இலகுவாக வெளிப்படுத்தலாம். மற்றும் எல்லோரும் விரும்பிப் பார்ப்பார்கள் எனவும் கூறப்பட்டது. அப்படியானால் என்ன விளையாட்டைத் தேர்ந்தெடுக்கலாம். கிராமங்களில் என்ன வகையான விளையாட்டுக்கள் பரிட்சயமானவை எனக் கேட்ட போது ஒவ்வொரு வராலும் விளையாட்டுக்கள் பற்றியும் அதன் முறைகள் மற்றும் அதனுள் இருக்கும் கருத்துக்களும் கூறப்பட்டது.

விளையாட்டுக்களாவன: கிளித்தட்டு, ஊஞ்சல், கபடி, கப்பல் கோடு, பாண்டி, பிள்ளையார்கட்டை, இவைகளில் இருந்து கருத்துக் கள் ஆராயப்பட்டு அவற்றில் எமது நாடகத்திற்கமைய "பிள்ளையார் கட்டை" விளையாட்டு தெரிவு செய்யப்பட்டது. இத்துடன் நாடகத்திற்கு பாடல் சேர்ப்பதும் நன்று. அனைவரையும் ஒருபாடல் தெரிவு செய்யு மாறு கூறியதற்கமைய பாடல்கள் எழுதப்பட்டது. பின்பு அவை பற்றி கலந்துரையாடலும் இடம்பெற்றது. அத்தோடு இணைப்பாளராலும் ஒரு பாடல் எழுதி அதற்கும் மெட்டுப் போடப்பட்டது.

இணைப்பாளர் பங்குபற்றுநர்களை உற்சாகப்படுத்துவதற்கு நாடகத்தின் பகுதிகளை மீண்டும் மீண்டும் கூறி விளக்கம் கொடுப்ப தோடு பல கருத்துக்களை கூறுவதற்கு உதவியாகவும், சிரமப்படும் போது பல உதாரணங்களை கூறி உற்சாகப்படுத்தினார். இது பங்கு பற்றுனர்களுக்கு இலகுவாக இருந்தது.

படிப்பகம்

www.padippakam.com

மற்றும் திருக்குறள், இலக்கிய நூல்களில் பெண்கள் பற்றிய பார்வை எவ்வாறு உள்ளது. பழமொழிகள், நாவல்கள் திரைப்படப் பாடல்கள், கவிதைகள், போன்றன பெண்களை எவ்வாறு கூறுகின்றன என எல்லோராலும் ஆராயப்பட்டது. காலங்காலமாக பெண்கள் பற்றிய பார்வை எப்படி உருவாக்கி நிரந்தரமாக்கப்பட்டிருக்கிறது என்பதை சித்தரிப்பதற்காக இப்பகுதி வடிவமைக்கப்பட்டது.

இவ்வேளை இந்நாடகத்திற்கு இசை அம்சங்கள் சேர்த்தால் என்ன? எனும் கருத்துக்கள் எழுந்தது. வீதி நாடகத்திற்கு ஆடல், பாடல் பிரதானம். அந்த வகையில் பார்வையாளர்களின் உள்வாங்கலை அதிகரிப்பதற்காகவும் இசையம்சம் சேர்த்துக் கொள்ளப்பட்டது. [றபான், சல்லாரி] இது பார்வையாளர்களுக்கு ஓர் உற்சாகத்தையும், சந்தோசத்தையும் உண்டாக்கும். அத்துடன் இலகுவாய் தொடர்பு கொள்ளக் கூடியதாகவும் அமையும்.

அத்துடன் பின்வரும் தொடர் பற்றிய கலந்துரையாடல் இடம் பெற்றது.
“ஆண்கள் தாம் இழந்து போன தமது ஒரு பக்கத்தில் முழுமை பெற வேண்டும்.”

“ஆண்கள் தமது அரைவாசிப்பகுதியை இழக்கிறார்கள். பெண்கள் ஆண்களின் இழப்பை சுமக்கிறர்கள்”.

அதாவது ஆண்கள் தாங்கள் முழுமையான ஒரு ஆளாக வருவதற்குரிய புரிந்துணர்வு வேண்டும். அதாவது ஆண்கள் தங்களுக்கு தெரியாது, தங்களால் முடியாது என்று நினைக்கின்ற விடயங்களை பெண்கள் நிறைவேற்றுபவர்களாக இருக்கின்றார்கள். ஆகவே இந்த விடயத்தில் ஆண்கள் தங்களது இயலாமையை விளங்கி உணர்ந்து செயற்படுத்துபவராக மாறவேண்டும். பெண்கள் ஆண்களுக்கு எதிரான போராட்டம் செய்பவர்கள் அல்ல.

அதன்பின் பாடல்களுக்கு மெட்டுப் போடப்பட்டு பாடல் பயிற்சி செய்யப்பட்டது. இவைகள் அனைத்தையும் உள்ளடக்கியதாக இந்த நாடகம் அமைந்துள்ளது. ஐந்து நாட்கள் பயிற்சி வகுப்பும் அதில் இடம்பெற்ற கலந்துரையாடல்களும் அன்றாடம் சமூகத்தில் நிலவிக் கொண்டு வருகின்ற பெண்கள் பற்றிய பார்வைகளை நாடகம் மூலம் சித்தரிக்க உவியாக அமைந்தது.

இந்நாடகம் அமைய காரணம் சூரியா பெண்கள் அபிவிருத்தி


படிப்பகம்

www.padippakam.com

நிலைய கலாசார குழுவினரின் கூட்டு முயற்சி என்றே கூறவேண்டும். அத்துடன் வழங்குனர் எமக்கு அளித்த ஊக்கமும், விடயரீதியான உரையாடல்களும், ஆற்றுகைக்கான நுணுக்கங்களும் நாடகத்தை உருவாக்குவதற்கு இலகுவாக அமைந்தது.

மட்டக்களப்பில் வீதி நாடகம் என்பது அறிமுக நிலையிலேயே உள்ளது. அதுவும் முழுவதும் பெண்களைக் கொண்ட குழுவின் முதலாவது வீதிநாடகச் செயற்பாடு இதுவாக உள்ளது.

எனவே இது ஒரு வித்தியாசமானதும், புதுமையானதும் பல் வேறுபட்ட கருத்துக்களையும் கொண்ட ஒரு படைப்பாகும். இதன் மூலம் நிறைய அநுபவங்களையும், கற்பனைகளையும், தேடல்களையும் பெற்றிருக்கிறோம் என்பதில் ஐயமில்லை. இது மிகவும் அரியசந்தர்ப்பம் என்றே கூறலாம்.




படிப்பகம்

www.padippakam.com

# வீதி நாடகத்தின் அனுபவ அறிக்கை

கலாசாரக்குழு

எமது கலாசார செயற்பாடுகள் அனைத்தும் நாடகம், ஓவியம், கவிதை, பாடல் போன்ற வடிவங்கள் மூலம் மேற்கொள்ளப் பட்டு வருகின்றது. கூடுதலாக மேடைநாடகத் தயாரிப்புக்கள் பலவற் றை உருவாக்கி அவற்றை அதிகமாக நிகழ்த்தி வருகின்றோம். எனவே மேடையில் நிகழ்ச்சி செய்வது பழக்கப்பட்டதொன்று.

புதிய தயாரிப்பாக வீதியில் அளிக்கை செய்யும் வகையில் "இது எமது படைப்பு" என்னும் வீதி நாடகம் தயாரிக்கப்பட்டது. இந்நாடகத்தை முதல் தடவையாக குமாரபுரம் என்னும் கிராமத்தில் நிகழ்த்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது. கூடுதலாக மேடையில் நாடகங் களை அரங்கேற்றி வரும் கலாசார குழுவினர் தங்களுக்கு பழக்கப் பட்ட கிராமத்தின் பொது இடத்தில் இவ்வீதிநாடகத்தை செய்யும் போது பலவித கேள்விகளுக்கும், சந்தேகங்களுக்கும் உள்ளாகினர். ஏனெனில் இக்கிராம மக்கள் தெரிந்தவர்களும் பழக்கப்பட்டவர் களுமாய் இருப்பதால் தொடர்ந்து தாங்கள் இவர்களுடன் பழகும் போதும், நடமாடும் போதும் தங்களை எவ்வாறு இனிமேல் நோக்கு வார்கள், இவர்களிடம் இருந்து வரும் கேள்விகளுக்கும் இதனால் ஏற்படும் சிக்கல்களுக்கும் எவ்வாறு முகம் கொடுப்பது போன்ற மனக்குழப்பங்கள் பயங்கள் இருந்தன. இவ்வீதி நாடகம் நடத்தப்பட்ட அன்று மழை நாளாக இருந்தது. இதனால் நாடகம் இடம்பெற இருந்த மைதானத்துக்கு மக்கள் வரவில்லை. இந்தச் சூழலில் நாம் குழுக்களாகப் பிரிந்து சல்லாரி, றபானைத் தட்டி பாடி வீடுவீடாகச் சென்று அழைத்தோம். இதனால் மழையைப் பொருட்படுத்தாது மக்கள் கலந்து கொண்டனர். இதனால் எமது அளிக்கை சுறுசுறுப்பாகவும், உணர்வு பூர்வமாகவும் இருந்தது.

இந்நாடகம் ஆமை, தவளை, கிளி போன்ற உருவங்களை கொண்டு தயாரிக்கப்பட்டது. எனவே கிராமத்து மக்களுக்கு விளங் குமா என்பது கேள்வியாக இருந்தது. நாடக முடிவில் இடம்பெற்ற கலந்துரையாடலில் பெண், ஆண் இருபாலாருக்கும் எமது நாடகத் தின் செய்தி விளங்கி விட்டது என்பதை அறியக் கூடியதாக இருந்தது. சகோதரன் ஒருவர் கூறுகையில் நாம் பெண்களின்


படிப்பகம்

www.padippakam.com

பிரச்சனைகளை கூறியுள்ளதுடன் அவர்கள் சுதந்திரமாக வாழ உரிமையுடைவர்கள் என்பதையும் வெளிப்படுத்தி இருப்பதாகத் தெரிவித்தார். சகோதரி ஒருவர் கூறுகையில் நான் கிளியைப் போல் சுதந்திரமான பெண்ணாக வாழ விரும்புகிறேன். நிறைய வீட்டு வேலைகள் இருந்தும் அதையெல்லாம் ஒரு புறத்தில் வைத்து விட்டு இந்த நாடகத்தைப் பார்க்க வந்துள்ளேன். எத்தனையோ பெண்கள் இந்த சந்தர்ப்பத்தை தவற விட்டு ஆமை போல் வீட்டிற் குள்ளே பல பிரச்சனைகளுக்கு உட்பட்டு வாழ்கிறார்கள் எனத் தெரிவித்தார். அன்றைய தினம் அங்குள்ளவர்களிடமிருந்து கிடைக்கப் பெற்ற கருத்துக்கள் வெவ்வேறு இடங்களில் போட வேண்டும் திறம்படச் செய்ய வேண்டும் என்ற உணர்வையும் நம்பிக்கை யையும் ஏற்படுத்தியதோடு மனதுக்கு திருப்பதியாக இருந்தது.

பழைய சூரியா முன்றலில் இரண்டு தடவை இந்நாடகம் அளிக்கை செய்யப்பட்டது. அச்சந்தர்ப்பத்தில் பார்வையாளர்களின் வரவு குறைவாகவே காணப்பட்டது. அளிக்கையின் போது பார்வை யாளர்கள் அனைவரும் ஒரு புறமாகவே இருந்து நாடகத்தை பார்வை யிட்டனர். இதனால் பல பக்கங்களிலும் நின்று கருத்தை வெளிப்படுத்திய ஏனைய அளிக்கையாளர்களின் கருத்துக்கள் இவர்களை சென்றடை யாமல் போனது. இது எமக்கு கவலையாக இருந்ததுடன் எம்மால் உணர்வு பூர்வமாக ஈடுபடவும் முடியவில்லை. அன்றைய தினம் நாடகத்துறையில் தேர்ச்சி பெற்றவர்களும், பேராசியர்களும் எமது அளிக்கைக்கு வந்து இருந்தனர். நாம்விரைவாக இந்நாடகத்தை எழுதி நடித்துப் பழகியதால் இந்நாடகம் பற்றி எமக்கு போதிய தெளிவு காணப்படாதது போல் இருந்தது. ஆகவே இவர்கள் முன் நாடகத்தை கொண்டு சென்ற போது இவர்கள் நடிப்பையும் கருத்தை யும் விளங்கிக் கொள்வார்களா? ஏற்றுக் கொள்வார்களா? என்ற பயம் எமக்குள் இருந்தது.

அளிக்கை முடிவில் பார்வையாளர்களிடம் இருந்து கூடிய கருத்துக்களை எதிர்பார்த்தோம். ஆனால் ஓரிரு கருத்துக்கள் மாத்திரமே தெரிவிக்கப்பட்டது. கூடுதலாக எதிர்ப்பு கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டது. பார்வையாளர்கள் ஒத்துழைப்பு இன்மை நாடகத் திற்கு உயிரோட்டம் அற்ற தன்மையை உணர முடிந்தது. எனவே மனதிற்கு திருப்தியின்மையை உணர முடிந்தது.

நாவற்குடாவில் இடம்பெற்ற "பெண்கள் சங்கங்களுக்கான ஒன்றுகூடல்" வைபவத்தில் இந் நாடகம் மீண்டும் அளிக்கை செய்யப்


படிப்பகம்

www.padippakam.com

பட்டது. அக்கிராமத்தை சேர்ந்த கலாசாரக்குழு உறுப்பினர்களுக்கு ஊர் மக்கள் ஏதும் பேசுவார்களோ, ஊரில் மதிப்பு இல்லாமல் போய்விடுமோ என்ற பயங்கள் இருந்தன.

இங்கு பார்வையாளர்களுக்கும் எமக்கும் இடையே ஓர் நெருங்கிய தொடர்பு காணப்பட்டது. சமூகத்தில் இருந்து வரும் பலவிதமான எதிர்ப்புகளுக்கு இடையே ஒரு பெண் தன்னுடைய திறமைகளை எவ்வாறு கட்டியெழுப்புகிறாள், தன்னுடைய ஆற்றல் களை எவ்வளவு தூரம் நேசிக்கிறாள், தன்னுடைய திறமைகளை எவ்வளவோ சிரமத்தை எதிர்த்துக்கொண்டு வளர்க்கிறாள் என்பதை கிராமங்களிடையே விளையாடப்படும், பிள்ளையார்கட்டை மூலம் நடித்துக் காட்டி இருந்தோம். நாடகத்தில் எமது பேணி அடுக்குகளை தகர்க்க வரும் பந்துகளை சுற்றி இருந்து பார்த்துக்கொண்டு இருந்த பெண்கள் தங்களது ஆற்றல்களை உடைக்க வரும் எதிர்ப்புகளா கவே பார்க்கத் தொடங்கினார்கள். நாடகத்தில் முழுமையாக உள் வாங்கப்பட்ட இவர்கள், "கெதியாக கட்டுங்கோ, விழவிட வேண்டாம், எறிய விடாதிங்கோ" என்று பரபரப்புடனும் உணர்ச்சி மேலிடவும் சத்தம் போட்டுக் கொண்டு இருந்தார்கள். இது எமக்கு மகிழ்ச்சியை யும், உற்சாகத்தையும் அளித்தது. எனினும் ஒரு சில ஆண்கள் நாடகத்தை குழப்பும் முகமாக கூச்சல்கள் இட்டனர். எனினும் நாடகக் கருத்தை மக்களிடம் கொண்டு செல்வதிலேயே எங்களது முழுக் கவனமும் இருந்ததினாலும் நாடகத்துடன் ஈடுபாடு கொண்டு விட்டதினாலும் இவர்களது செய்கைகள் எமது கருத்தையோ நடிப்பையோ குழப்பவில்லை. அன்றைய தினம் பெண்கள் குழுக்க ளின் நிகழ்ச்சிகள் தொடர்ந்து இடம் பெற வேண்டியிருந் ததனால் பார்வையாளர்களுடன் எமது கலந்துரையாடலை மேற்கொள்ள முடியவில்லை.

நாடக நிகழ்வு நடந்து முடிந்த பின் சில நாட்கள் அக்கிராமத் திலுள்ள சிலரின் கேலிப்பேச்சு கூச்சல்கள் போன்ற தொந்தரவுகளை சந்திக்க வேண்டியிருந்தது.

பெண்களுக்கெதிரான வன்முறைவாரத்தை முன்னிட்டு மட்டக் களப்பு காந்தி சிலையடி, அரசடிச்சந்தி ஆகிய இரு இடங்களில் அளிக்கை நிகழ்த்தப்பட்டது. நிகழ்வு நடாத்தும் முகமாக ஓர் கலந்து ரையாடல் எம்மிடையே முதலில் இடம்பெற்றது. இக்கலந்துரையாட லில் மட்டக்களப்பு எங்களது ஊர், எமது சமூகம் இதுதான் இங்குள் ளவர்கள் எமக்குத் தெரிந்தவர்கள். இங்குதான் வாழவேண்டும். இவர்களுடன் ஒத்துப்போக வேண்டும். எமது நடிப்பு இவர்களில்


படிப்பகம்

www.padippakam.com

சிலருக்குப் பிடிக்காது. ஏற்றுக்கொள்ள மாட்டார்கள், திருமணம் என்று வரும் போது எம்மை இச்சமூகம் ஏற்றுக்கொள்ளுமா "தெருவில் ஆடினவள்" என நாங்கள் ஒதுக்கப்பட்டு விடுவோமா, எமது வாழ்க்கை பாழாகிப் போய்விடுமோ என்ற கேள்விகளும் பயங்களும் இதனால் நிறுவனத்தை விட்டு விலக வேண்டும். அளிக்கை இடம் பெறுவதற்கு முன் நோய் வந்து வைத்தியசாலையில் இருக்க வேண்டும் போன்ற உணர்வுகள் சில உறுப்பினர்களுக்கு ஏற்பட்டதாக கூறினர்.

நிகழ்வன்று பாட்டுப்பாட றபானைத் தட்ட இயலாமல் இருந்தது. அத்துடன் ஆட்களை நிமிர்ந்து பார்ப்பதற்கு வெட்கமும் பயமுமாக இருந்தது. பாடிக் கொண்டு மணிக்கூட்டு கோபுரத்தடியால் திரும்பும் போது கை, கால் குளிர்ந்து கொண்டு வந்தது. ஆனால் குழுவாக சேர்ந்து மேலும் மேலும் பாடிக் கொண்டு செல்ல உற்சாகமும் எமை மறந்த நிலையும் ஏற்பட்டது. அங்கு எமக்கு தெரிந்தவர்களும், உறவினர்களும், பார்வையாளர்களாக நின்றனர். எனினும் நாம் சமூகத்துக்கு தேவையானதும், உண்மையானதுமான கருத்துக்க ளைத்தான் கூறுகிறோம். ஆகவே எதற்காக பயப்பட வேண்டும் என்ற உணர்வும் ஏற்பட்டது.

அடுத்ததாக எமது நிகழ்வு அரசடிச்சந்தியில் நிகழ்த்தப் பட்டது. இந்நாடகத்தைத் தொடர்ந்து நடித்துக் கொண்டு வந்ததால் பய உணர்வு இருக்கவில்லை. இது ஓர் நாற்சந்தியாக இருந்தது. மக்கள் நடமாட்டம் அதிகமாக இருந்தது. வாகன இரைச்சல் அதிகமாக இருந்ததால் நாங்கள் சத்தமாகப் பேசி நடிக்க வேண்டி இருந்தது. எனினும் எமது முழுக்கருத்தும் பார்வையாளர்களை சென்றடைவதில் தடங்கள் நிலை இருந்தது. அளிக்கை முடிந்த பின் எமது கலந்துரையாடல் இடம்பெற்றது. நிகழ்வின் போது நாங்கள் எதிர்கொண்ட பிரச்சனைகள் வன்முறைச் சம்பவங்களை ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொண்டோம். நாடகத்தில் கூறப்பட்ட கருத்துக்கள் ஆண்களுக்கு எதிரானவை. ஆகவே இதை ஏற்க முடியாது எனச் சிலர் கூறினர்.ஒரு சகோதரன் அக்கா இனிமேல் உங்களுக்குப் பகிடிபண்ணமாட்டேன் எனக் கூறினார். இச்சந்தர்ப் பத்தில் பகிடி விடத்தேவையில்லை. எங்களோடு கதையுங்கோ, கதைப்பதன் மூலம் எங்களது பிரச்சனைகளை விளங்கிக் கொண்டு நண்பர்களாக இருக்கலாம் எனக் கூறப்பட்டது. வீதிகளில் நாடகம் போட்ட பின்பு சில நண்பர்களும், உறவினர்களும் தொடர்பை துண்டித்து விட்டதும், இளம் பெண்களின் துணிச்சலான நடிப்பை இச்சமூகம் பார்க்கத் தவறியதும் மனதுக்கு வேதனையைத் தருவதுடன், கிராமப்புறத்தில் அளிக்கை செய்யும் போது ஏற்பட்ட திருப்தி,


படிப்பகம்

www.padippakam.com

சந்தோசம் நகர்ப்புறத்தில் போடும்போது எமக்கு இருக்கவில்லை.

அக்கரைப்பற்றில் வீதிநாடக அளிக்கை நிகழ்த்தப்பட்டபோது பயம் ஏற்படவில்லை. நாடகத்திலுள்ள கருத்துக்கள் மக்களைச் சென்றடைய வேண்டும் என்ற உத்வேகமே இருந்தது. நாடகம் ஆரம்பித்ததிலிருந்து பார்வையாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே இருந்தன. இது மனதிற்குச் சந்தோஷமாக இருந்தது. சன நெரிசலுடன் வாகன இரைச்சலும் ஏற்பட்டதால் நாம் கூறும் கருத்துக்கள் தெளிவாகச் சென்றடைய வேண்டும் என்றதனால் இடைவெளிவிட்டு கூற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

நாடகம் பற்றி பார்வையாளர்களுடன் கலந்துரையாடிய போது, அவர்கள் நாடகத்திலுள்ள தமக்கு உடன்பாடான கருத்துக்களைத் தெரிவித்தார்கள். இவ்வாறான நாடகங்களை கிராமப்புறங்களில் தொடர்ந்து நடாத்த வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்கள். இது எமக்கு சந்தோஷமாக இருந்தது. சில ஆண்களுடன் கலந்து ரையாடிய போது வன்முறைகள் உள்ள உண்மைச் சம்பவங்களை வெளிப்படுத்தும் வகையில் அமைந்த நாடகங்களை நிகழ்த்துமாறு ஆலோசனை கூறினார்கள். இவ்வாறான கருத்துக்களைக் கேட்கும் போது எமது கருத்துக்கள் பார்வையாளர்களைச் சென்றடைந்திருக் கின்றது என்பதை உணரமுடிந்தது.

திருகோணமலையில் வீதி நாடக அளிக்கை செய்வதற்கு முன்னர் ஒழுங்கு செய்யப்படும் இடம் நகர்ப்புறமாக இருக்குமென்று இருந்தோம். எனவே திறம்பட பயிற்சிகளை மேற்கொண்டு எம்மைத் தயார்படுத்திக் கொண்டோம். ஆனால் சனத்தொகை குறைந்த குடியேற்றக்கிராமம் ஒன்றில் அளிக்கை செய்ய வேண்டியிருந்தது.

அக்கிராம மக்களை வரவழைப்பதற்காக அக்கிராம ஆண்க ளுடன் றபானில் தட்டி பாட்டுப்பாடிக் கொண்டு வீதி, வீதியாக சென்ற போது எங்களுக்கு எவ்வித பதட்டமும் இருக்கவில்லை. நாடகக் கருத்துக்களுக்கு ஏற்றவாறு சூழல் அமைந்திருந்தது.

நாடகம் முடிந்ததும் அநேகமான பார்வையாளர்கள் தமது கருத்துக்களை தாமாகவே முன்வைத்தார்கள். திருகோணமலையில் சீதனப் பிரச்சனையே அதிகமாக இருப்பதால் அதையே அவர்கள் முக்கிய பிரச்சனையாகக் கருதினார்கள். சிலருடைய கருத்து பெண்களுக்கு எந்தப் பிரச்சனையும் இல்லை என்றனர். காரணம்

படிப்பகம்

www.padippakam.com

தற்போது பெண்கள் மோட்டார் வண்டி ஓடுவதாகவும் கல்வி ரீதியாக முன்னேறியிருப்பதாகவும் கூறி பெண்களுக்கு பிரச்சனையில்லை என்றனர்.இக்கருத்துக்கள் சம்பந்தமாக அவர்களுடன் கலந்துரை யாடினோம்.

மீண்டும் மற்றுமொரு நிகழ்வாக அன்னையர் தினத்தை முன்னிட்டு நாவற்குடா "அங்கிலிக்கன் தேவாலயத்தில்" வீதி நாடக அளிக்கை நிகழ்த்தப்பட்டது. இந்நிகழ்வின் போது பார்வையாளர் களுக்கு மிகவும் தொடர்புள்ளவர்களாக நாம் காணப்பட்டோம். சிறுவர்களை இந்நாடகம் வெகுவாகக் கவர்ந்திருந்தது. பார்வையா ளர்களாக இருந்த சிறுவர்கள் "மீண்டும் மீண்டும் ஏன் ஆமை யோட்டுக்குள் புகுந்து கொள்கின்றீர்கள். வெளியே வாருங்கள்" எனப் பலமாகக் கூறி கரங்களைத் தட்டி எம்மை உற்சாகப்படுத்தினர். வீதியோரங்களிலும் பார்வையாளர்கள் நின்று நாடகத்தை அவதா னித்ததையும் காணக்கூடியதாய் இருந்தது. அந்நாடகம் பற்றி அருட் தந்தை அவர்கள் கூறுகையில் இக்கிராமத்தில் உள்ள ஆண்களும் கட்டாயமாக இந்நிகழ்வைப் பார்த்திருக்க வேண்டும் எனத் தெரிவித்தார். அன்றைய நிகழ்வு மிகவும் திருப்தியாக அமைந்தது.

உலக நாடக தின விழாவை முன்னிட்டு கிழக்குப் பல்கலைக் கழகத்தில் வீதிநாடக அளிக்கை நிகழ்த்தப்பட்டது. அன்று பார்வை யாளர்களின் ஒத்துழைப்பு அதிகம் இருந்ததால் எமது கருத்துக்களை சிறந்த முறையில், தெளிவுடனும், உறுதியுடனும் வெளிப்படுத்தக் கூடியதாய் இருந்தது. அத்துடன் பார்வையாளர்களின் பிரதிபலிப் புக்கள் எமது கருத்துக்கள் அவர்களை சென்றடைந்துள்ளது என்பதை உணரமுடிந்தது.

வீதி நாடக அளிக்கை பல இடங்களில் நிகழ்த்தப்பட்ட போது ஏற்பட்ட பல்வேறுபட்ட அனுபவங்கள் இத்தொகுப்பு உருப் பெற உதவியது சிறப்பு அம்சமாகும்.

படிப்பகம்

www.padippakam.com

# "இது எமது படைப்பு" உள் - வெளி அமைப்பாக இணைப்பாளர்

*சி.ஜெயசங்கர்.*

சூரியா கலாசார குழுவினருடன் வீதி நாடகம் ஒன்றை உருவாக்கிய எனது அனுபவத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

கிராமங்களில் வாழ்கின்ற, கிராமங்களில் பெண்கள் மத்தியில் வேலை செய்கின்ற க.பொ.(சா/த) க.பொ.த (உயர்தரம்) கல்விப் பின்னணியைக் கொண்ட பெண்களின் குழு இது. சமூகத்தில் கலை, இலக்கிய வடிவங்களாக அங்கிகரிக்கப்பட்டு இருக்கின்ற எந்தவொரு வெளிப்பாட்டு வடிவங்களிலும் இவர்கள் நிபுணத்துவம் கொண்டவர் களுமல்லர். இது சாதாரண பெண்களைக் கொண்ட குழு.

ஆயினும் அவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்ற பெண்நிலை வாதம், பால்நிலைப்பாகுபாடு சார்ந்த களப்பயிற்சிகளும், கள அனுபவங்களும் இவைகள் அவர்களில் ஏற்படுத்திய சிந்தனை மாற்றங்களும் அவர்களது படைப்பாற்றல்களைத் தூண்டுபவையாக இருக்கின்றன. வெகுசன கலாசாரத்திற்கும் யாதார்த்தத்திற்குமான வேறுபாட்டை அடையாளம் காணத் தொடங்கியிருப்பவர்கள், அதனை பொதுமக்கள் மத்தியில் குறிப்பாக பெண்கள் மத்தியில் முன்னெடுப் பதை நோக்கமாகக் கொண்டிருப்பவர்கள்.

உண்மையில் இவர்கள் சமூகத்திற்குச் செய்தி எதையும் சொல்லவில்லை. அவர்களது செயல்களையே செய்தியாக்கி இருக்கி றார்கள், செய்தியாக்கி வருகிறார்கள். அதற்குத் தங்களுக்கு வாய்க்கும் எத்தகைய வெளிப்பாட்டு முறைகளுக்கும் தங்களை வெளிப்படுத்தி வருகிறார்கள்.

இவற்றில் கணிசமான சந்தர்ப்பங்களில் இவர்களுடன் இருந்து

படிப்பகம்

இயங்கிய முன் அனுபவம் எனக்கிருக்கிறது. எல்லாவற்றுக் கும் மேலாக அவர்கள் எனது நண்பர்கள். எனவே இந்தக் களப் பயிற்சி அறிமுகமானவர்களின் சங்கமமாகவே இருந்தது.

வீதி நாடகமொன்று தயாரிப்பது என்பது ஏற்கனவே தீர்மானிக்கப் பட்டது. பெண்களது விடயங்களை பொருளாகக் கொள்வதே, கையாளுவதே நோக்கம்.

சரி என்ன விடயங்களை வெளிப்படுத்தப் போகிறோம். ஏன் வெளிப்படுத்தப் போகிறோம், யாருக்கு வெளிப்படுத்தப் போகிறோம்? என்ற கேள்விகளுடன் உரையாடல்களுடன் களப்பயிற்சி ஆரம்பமாயிற்று.

வீதி நாடகத்திற்கான விடயங்கள் உரையாடல்களாகவும், விளையாட்டுக்களாகவும் எழுத்துக்களாகவும், வளர்ந்து வருகின்ற வேளையிலே, வீதியில் மக்கள் மத்தியில் ஆற்றுகை செய்வதற்குரிய மனநிலையை உருவாக்குவதும் முக்கிய பணியாக இருந்தது.

பெண்கள் மேடையில் நாடகம் நடிப்பது குறிப்பிடத் தக்களவிற்கு ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய விடயமாக இருந்தாலும் வீதியில் நடிப்பது எத்தகைய எதிர்விளைவுகளை கொண்டு வரும் என்ற எதிர்பார்ப்பும் அதற்கான தயாரிப்புக்களும் சொல்லப்படும் விடயத்திற்கு தயாராவதிலும் மிக முக்கியமான விடயமாகும். ஏனெனில் இந்தப் பிள்ளைகள் வீதி நாடக ஆற்றுகைகளுக்கு பின் அதே வீதிகளால் தங்களது வீடுகளுக்கு செல்ல வேண்டும். வீதியில் நாடமாடுவதைக் கண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் அனைவரும் "குமர் பிள்ளைகள் தெருவில ஆடுறத" எப்படிக் கதைப்பார்கள்? அவை பிள்ளைகளுக்கு, பிள்ளைகளின் குடும்பங்க ளுக்கு ஏற்படுத்தும் அழுத்தங்கள் பற்றிய விளக்கம் எல்லாம் மிக அவசியமானதாகும். அவர்கள் கேள்விக்குள்ளாக்கும் சமூகத்திற்குள் ளேயே அவர்கள் வாழ்கிறார்கள். வாழ்ந்தேயாக வேண்டும். களப்பயிற்சிக் களங்கள் சமூக யதார்த்தத்தின் சிற்பங்கள் எதுவுமற்ற சமூகத்தில் இருந்து அன்னியப்படுத்தும் காப்பகங்களாக மாறிவிடுவது எதிர்ம றையான விளைவுகளையே கொண்டுவரும். அன்னியப்பட்டிருந்து அதிகம் பேசுவதிலும் அதற்குள்ளிருந்து சிறிதளவு உரையாடுவது வலுவானது பயன்தர வல்லது. இது சமூகத்தில் வேறு எவரும் இது பற்றி சிந்திப்பவர்கள் இல்லை என்ற எண்ணங்களை / நினைப் புகளை தகர்ப்பதாக இருக்கும். இது இத்தகைய செயற்பாடுகளில் கொள்ளப்பட வேண்டிய அடிப்படைத் தகுதியாகும்.

www.padippakam.com

எனவே வீதியூடாக ஆக்கச் செயற்பாடும் வீதி நாடக ஆற்ற லுக்காக தயார்படுத்தல் செயற்பாடும் இணைந்ததாக இக்களப் பயிற்சி அமைந்தது. ஏனெனில் முழுக்க முழுக்க பெண்கள் வீதி நாடக உருவாக்கத்தில் பங்குபற்றி அவர்கள் வளர்ந்து வருகின்ற வீதியில் ஆற்றுகையை நிகழ்த்துவது மிக முக்கியமான செய்தியாக இருக்கப் போகிறது என்பது எதிர்பார்க்கப்பட்டது.

ஏனெனில் உரையாடுகின்ற விடயமும் அதனை நடத்துப வர்களும் அதற்கு எடுத்திருக்கின்றன. ஊடகம் அச்சுறுத்தக் கூடியதும், அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கக் கூடியதுமாகும். எனவே இத்தகைய சவால்களுக்கூடாக வீதி நாடகம் உரையாடலை நிகழ்த் தும் விடயங்களை ஆக்கும் தொடர் செயல் முறைகள் நிகழ்ந்தன.

கிராம மக்களே பிரதான இலக்காக இருந்ததன் காரணமாக மக்கள் மத்தியில் புழக்கத்தில் உள்ள ஆடல்,பாடல் விளையாட் டுக்கள் படிமங்களூடாக உரையாடல்கள் தயாரானது. உரையாடல் களின் பின்பு அவர்களுக்கு விரும்பிய விதமாக அவர்களது சிந்தனை களை உணர்வுகளை கற்பனைகளை வெளிப்படுத்துமாறு வேண்டப் பட்டது.

இவர்கள் ஏற்கனவே இத்தகைய களப்பயிற்சிகளுக்கு பரீட்சய முள்ளவர்களாக இருந்ததன் காரணமாக வீதிநாடக இயல்புகள் பற்றிய கலந்துரையாடலின் வீதி நாடகத்திற்கு உகந்தவாறு எளிமை யான காட்சிப் படிமங்களாக ஆக்கக் கூடிய வகையில் அவர்களது வெளிப்பாடுகளைக் கொண்டு வருமாறு வேண்டப்பட்டது. ஆயினும் அது கட்டாயம் அல்ல என்பதும் குறிப்பிடப்பட்டது.

குழுவாக கலந்துரையாடி, விளையாடி இயங்கியவர்கள் இதன் பொழுது தனித்தனிப் படைப்பாளிகளாகி எழுதத் தொடங்குகிறார்கள். .

களப்பயிற்சியில் பங்குபற்றுபவர்களை எப்பொழுதும் ஆர்வத் துடன் ஈடுபடவைக்கும் கருவியாக வியைாட்டுக்கள் பயன்படுத்தப் பட்டுக் கொண்டிருக்கும் என்பதும் கவனத்திற்குரியது. தனித்தனிமை யான படைப்பாக்கும் முயற்சிகளுடன் மீண்டும் குழு நிலையில் ஒவ்வொருவரும் தங்களை வெளிப்படுத்தத் தொடங்கினார்கள். கவிதையாக, பாடலாக, பழமொழியாக, உரையாடலாக, கதையாக, காட்சிப் படிமங்களாகும் விடயங்கள் அவர்களிடமிருந்து வந்தன. அப்படைப்புக்கள் பற்றிய உரையாடல்கள் நிகழ்ந்தன. அதன் ஊடாக

www.padippakam.com

வீதி நாடக எழுத்துக்களுக்கான விடயங்கள் குழு நிலையில் தொகுக்கப்பட்டன. முழுக்குழுவையும் கூட்டாக எழுத்துருவையாக்கும் படைப்பாக்க நிலைக்கு இட்டு வருவது உரையாடல்கள் ஊடாக அதனை வளர்த்துச் செல்வதும் எந்தச் சந்தர்ப்பத்திலும் மேற்படி கூட்டுப்பாக்க நிலையைத் தீர்மானிக்கும் சக்தியாக இருந்து விடாமல் தன்னை வைத்துக்கொண்டு கூட்டுப் படைப்பாக்கச் செயல்முறை தடங்கல்களை சிக்கல்களை தேக்கங்களையடையும் போது அந் நிலையிலிருந்து அடுத்த கட்டிடத்திற்கு உந்திவிடும் வழிமுறைகளை கையாள்பவராக இருப்பது சவாலானதும் சந்தோஷமானதுமான பணியாகும். பல மூளைகள் கூட்டுப் படைப்பாக்க நிலையில் இயங்குகையில் தோற்றம் பெறும் விடயங்கள் ஆச்சரியம் ஊட்டுபவையாக நம்பிக்கை ஊட்டுபவையாக இருக்கும். இந்த படைப்பாற்றலுக்கான கற்பனை நிலை அவசியமானது.

குழுவினரது ஆற்றல்களின் குறியீடாகவே• வளர்ந்துள்ள வீதி நாடகத்திற்கு ''இது எமது படைப்பு'' என்று தலைப்பிடுவது பொருத்தமானது என்று கருதி அதனையே தலைப்பாக வைத்தோம்.


படிப்பகம்

www.padippakam.com

## வாசகரிடமிருந்து . . .

நான் இரண்டு, மூன்று வருடங்களாக "**பெண்**" சஞ்சிகையைப் பார்த்து வருகிறேன். நான் என் வாயால் வாழ்த்தவில்லை. என் இதயத்தின் அடியிலிருந்து 'பெண்'ணை வாழ்த்துகிறேன். குறையென்பதே இல்லாத சஞ்சிகை எது என்றால் அது "பெண்"ணாகத்தான் இருக்கும். நான் மிகவும் விரும்பி வாசிப்பேன். அத்தோடு நின்று விடாமல் ஆக்கம் எழுதி போட ஆசைப்பட்டு இத்தோடு ஒரு கவிதையையும் வைத்துள்ளேன். திறமையான ஆக்கமாக இருந்தால் பிரசுரிக்கவும். பெண்ணுக்கு நடக்கும் கொடுமைகளை நன்கு தெளிவாக எடுத்துக்காட்டும் "பெண்"ணே நீ வாழ வேண்டுமென்று மனதார வாழ்த்துகிறேன்.

இப்படிக்கு
உண்மையுள்ள சகோதரி
பிர்தவ்சியா மௌ.'.ரூவ்

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# வருடாந்த சந்தா - பெண்

| | | |
|---|---|---|
| ஐரோப்பா, வட அமெரிக்கா, அவுஸ்திரேலியா | : | US $ 20/= |
| இந்தியா | : | US $ 10/= |
| இலங்கை | : | ரூபாய்150/= |

சந்தா விண்ணப்பம் 2000

பெண் சஞ்சிகைக்கு சந்தா அனுப்பியுள்ளேன்

பெயர் : ..........................................................................

விலாசம் : ..........................................................................

திகதி : ..........................................................................

இத்துடன் காசோலை / மணி ஓடரை சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தின் பேரில் அனுப்பி வைக்கிறேன்.

சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்
20, டயஸ் லேன்,
மட்டக்களப்பு,
இலங்கை.

**Suriya Women's Development Centre**
*20, Dias Lane,*
*Batticaloa,*
*Sri Lanka.*

படிப்பகம்

www.padippakam.com

நீ எடுக்கும் முடிவில் நில்
செல்ல வேண்டிய பாதையை கவனி
உன் கால்கள் செல்ல வேண்டிய
பாதையில் செல்லட்டும்

இலங்கேஸ்வரி

ISSN : 1391-6122

St. Joseph's Catholic press, Batticaloa.

படிப்பகம்